# GEOGRAPHY

OF THE

# MADRAS PRESIDENCY

---

# சென்னை ராசதானி

# பூமிசாஸ்திரம்

NEW EDITION, THOROUGHLY REVISED

E OF THE REGISTRAR OF BOOKS
1914

THE CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

MADRAS, ALLAHABAD, CALCUTTA AND COLOMBO

1914

# முகவுரை

சென்னை ராசதானியில் கல்வி விஷயமாய் ஏற்படுத்தியிருக்கிற சட்டங்களின் பிரகாரம் நான்காவது வகுப்பிற்கு நியமிக்கப்பட்டிருக்கிற பூமிசாஸ்திரப் பாடங்களைப்பற்றி இச்சிறு புத்தகம் சொல்லுகிறது. அவையாவன:—

(1) பூமியின் வடிவமும் பரிமாணமும், சூரியன், சந்திரன், பூமி ஆகிய இவைகளில் ஒன்றுக்கொன்றுள்ள சம்பந்தங்களைப்பற்றிய சில சுலபமான குறிப்புக்களும்.


(2) பூமியிலுள்ள சமுத்திரங்களும், கண்டங்களும்.

(3) சென்னை ராசதானி, திருவாங்கூர், கொச்சி, மைசூர், குடகு, ஐதராபாத்து, பீரார் ஆகிய இவைகளின் பூமிசாஸ்திரமும், இந்தியாவின் மற்றப் பாகங்களின் இயற்கையமைப்பும்.

இப்புத்தகம் முன்னே அதிகமாய் உபயோகப்படுத்தப்பட்டது. இந்தப் பதிப்பில் எல்லா அம்சங்களையும் சீர்திருத்தியும் விசேஷமாய்த் தயார்செய்யப்பட்ட படங்களின் மூலமாய் விளக்கிக்காட்டியுமிருக்கிறது.

சிறுவகுப்புகளுக்குத் தகுந்தபடி இப்புத்தகம் சுருக்கமாயும் சுலபமாயுமிருந்தபோதிலும் இதில் பெரும்பாலும் எல்லாச் சங்கதிகளும் அடங்கியிருக்கின்றன. ஆகையால் பள்ளிக்கூடத்திற்கு வெளியே இருக்கிற மற்றவர்களுக்கும் இந்த உபயோகமாகவும் பிரியத்தைக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்குமென்று நம்புகிறோம்.

97240


உலகபடம்
வட சமுத்திரம்
கிரீன்லாந்து
வட அமெரிக்கா
ஐரோப்பா
ஆசியா
அத்லாந்திக் சமுத்திரம்
ஆபிரிக்கா
நிரட்சரேகை
பசிபிக் சமுத்திரம்
தென் அமெரிக்கா
இந்து சமுத்திரம்
ஆஸ்திரேலியா

# பொருள் அடக்கம்


பக்கம்.

முகவுரை ... ... ... ... ... ...1–25

பூமி, சூரியன், சந்திரன் ... ... ... ... 1

பூமியின் வடிவம் ... ... ... ... 2

பூமியின் சுழற்சி ... ... ... ... 4

காலங்கள் ... ... ... ... ... 5

கிரகங்கள் ... ... ... ... ... 7

சந்திரன்—அதின் சுழற்சி ... ... ... 9

சூரிய சந்திர கிரகணங்கள் ... ... ... 11

உலகத்திலுள்ள கண்டங்களும், சமுத்திரங்களும். 13

நீர், நிலம்—இவற்றின் பாகங்கள் ... ... ... 13

கண்டங்கள் ... ... ... ... ... 14

சமுத்திரங்கள் ... ... ... ... ... 15

இந்தியாவின் இயற்கையமைப்பு ... ... ... 18

மலைகள் ... ... ... ... ... ... 19

சமவெளியும் பீடபூமியும் ... ... ... 22

ஆறுகள் ... ... ... ... ... ... 23

ஏரிகள் ... ... ... ... ... ... 25

சென்னை ராசதானி ... ... ... ... ..26–86

பொதுக் குறிப்புக்கள் ... ... ... ... 26

ஜில்லாக்கள் :—

சென்னபட்டணம் ... ... ... ... 34

செங்கற்பட்டு ... ... ... ... ... 37

வட ஆறுகாடு ... ... ... ... ... 40

தென் ஆறுகாடு ... ... ... ... ... 42

தஞ்சாவூர் ... ... ... ... ... 45

சேலம் ... ... ... ... ... ... 47

பக்கம்.

திருச்சினப்பள்ளி ... ... ... ... 49
நெல்லூர் ... ... ... ... ... 51
குண்டூர் ... ... ... ... ... ... 53
கிருஷ்ணு ... ... ... ... ... 54
கடப்பை ... ... ... ... ... ... 57
கர்னூல் ... ... ... ... ... ... 59
கோதாவரி ... ... ... ... ... 61
விசாகபட்டணம் ... ... ... ... ... 64
கஞ்சம் ... ... ... ... ... ... 66
பல்லாரி ... ... ... ... ... ... 69
அனந்தபுரம் ... ... ... ... ... 71
தென்கன்னடம் ... ... ... ... ... 74
கோயம்புத்தூர் ... ... ... ... ... 76
நீலகிரி ... ... ... ... ... ... 78
மதுரை ... ... ... ... ... ... 81
திருநெல்வேலி ... ... ... ... ... 83
மலையாளம் ... ... ... ... ... 85

ஜில்லாக்களில் ஒன்றுக்கொன்றிருக்கும் தாரதம்மியம் ... ... ... ... ... ... 88

சென்னை ராசதானியைச்சேர்ந்த சுதேச ராச்சியங்கள் ... 90
திருவாங்கூர் ... ... ... ... ... 90
கொச்சி ... ... ... ... ... ... 93
புதுக்கோட்டை ... ... ... ... ... 94

இந்திய துரைத்தனத்துக்குட்பட்ட சுதேச ராச்சியங்கள். 95
ஐதராபாத்து ... ... ... ... ... 95
பீரார் ... ... ... ... ... ... 98
மைசூர் ... ... ... ... ... ... 100

குடகு மாகாணம் ... ... ... ... ... 104

# படங்கள்

பக்கம்.


உலக படம் ... ... ... ... ... ...முகப்பு படம்.

கோளார்த்தங்களாகப் பிரிக்கப்பட்ட உலக படம் ... ... 12

இந்தியாவின் இயற்கையமைப்புப் படம் ... ... ... 20

பிரமபுத்திரா, கங்கை, சிந்து ஆகிய இவைகளைக் காட்டும் படம் ... ... ... ... ... ... ... 23

சென்னை ராசதானி ... ... ... ... ... 27

தென்னிந்தியா இருப்புப்பாதைப் படம் ... ... ... 31

சென்னபட்டணம், செங்கற்பட்டு, வட ஆறுகாடு, தென் ஆறுகாடு, சேலம், தஞ்சாவூர், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்கள் ... 38

நெல்லூர், கடப்பை, கர்னூல், கிருஷ்ணா ஜில்லாக்கள் ... 55

கோதாவரி, விசாகபட்டணம், கஞ்சம் ஜில்லாக்கள் ... ... 62

பல்லாரி, அனந்தபுரம், தென்கன்னடம் ஜில்லாக்கள் ... 72

கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, மலையாளம், நீலகிரி ஜில்லாக்கள் ... ... ... ... ... ... 79

திருவாங்கூர், கொச்சி ... ... ... ... ... 91

ஐதராபாத்து, பீரார் ... ... ... ... ... 97

மைசூர் ராச்சியம், குடகு மாகாணம் ... ... ... ...101

# சென்னை ராசதானி

# பூமிசாஸ்திரம்

## முகவுரை

### பூமி, சூரியன், சந்திரன்

நாம் வசிக்கும் இந்தப் பூமி நம்முடைய கண்ணுக்குத் தோன்றுகிற மாதிரியாகவும் இதற்குமுன் அநேக வருஷங் களாக மனிதர் நினைத்த பிரகாரமாகவும் தட்டையான தல்ல. ஆனால் ஒரு பெரிய பந்துபோல் உருண்டை வடிவமா யிருக்கிறது. அது உருண்டை வடிவமாயிருக்கிறதென் பதை இரண்டு திருஷ்டாந்தங்கள் மூலமாய் நாம் அறியலாம்.


நாம் அதைச் சுற்றிப் பிரயாணஞ்செய்யக்கூடும். பூமி யின் ஓரிடத்திலிருந்து நாம் புறப்பட்டு எந்தத் திசையை யாவது நோக்கி நிலத்திலும் நீரிலும் பிரயாணம் பண்ணிக் கொண்டே போனால் எந்த இடத்திலிருந்து புறப்பட் டோமோ அந்த இடத்திற்கே மறுபடியும் வந்து சேருவோம். அநேகர் பூமியைச் சுற்றிப் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இக்காலத்தில் புகைவண்டி, புகைக்கப்பல் இவைகளின் உத வியினால் இரண்டு மூன்று மாதங்களுக்குள் பூமியைச் சுற்றிப் பிரயாணஞ்செய்யக்கூடும். பூமி தட்டையாயிருந்தால் ஓரி

டத்திலிருந்து ஒரே திசையை நோக்கிப் பிரயாணஞ் செய்கிறவன் மறுபடியும் தான் புறப்பட்ட இடத்திற்கு வந்து சேர முடியாது. ஆனால் புறப்பட்ட இடத்திலிருந்து போகப் போக அதிகந் தூரம் போய்க்கொண்டேயிருப்பான்.



1-ம் படம்

கப்பல்கள் கரையிலிருந்து கடலில் ஓடும்பொழுது கரையிலிருந்து பார்க்கிறவர்களுக்கு அவைகள் படிப்படியாய் மறைந்துபோகின்றன. முதல் முதல் கப்பலின் அடித்தட்டு நமக்கு மறைந்துபோகிறது. பாய்மரத்தின் உச்சி கடைசியாக மறைந்துபோகிறது. கப்பல்கள் கடலிலிருந்து கரை முகமாய் நமக்கு நேரே ஓடிவரும்பொழுது பாய்மரத்தின் உச்சி முதலாவது நமக்குத் தெரிகிறது. கடைசியாக அவைகளின் அடித்தட்டுத் தெரிகிறது. ஏனெனில் பூமி உருண்டையாயிருப்பதால் அவைகளின் அடிப்பாகங்கள் நமக்கு மறைந்திருக்கின்றன.



2-ம் படம்

பூமி உருண்டையாயிருக்கிற தென்பதை இன்னொரு வகையாய் நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கலாம்.

பூமியின் நிழல் சந்திரன்மேல் விழுவதினால் சந்திர கிரகணம் உண்டாகிறது. இந்தக் கிரகணம் உண்டாகும்பொழுதெல்லாம் பூமியின் நிழல் வட்டமாக இருக்கிறது. உருண்டை வடிவமான பந்தின் நிழல்தான் எப்போதும் வட்டமாயிருக்கும். ஆகையால், பூமியின் நிழல் எப்போதும் வட்டமாயிருப்பதால் பூமியும் உருண்டையாகவேயிருக்கும்.

ஆனல் பூமி மிகவும் பெரிதாயிருப்பதால் நாம் பார்க்கக் கூடிய அதின் சிறிய பாகம் தட்டையாய் நமக்குத் தோன்று கிறது.


பூமியின் சுற்றளவு 25,000 மைல். அதின் குறுக்களவு 8,000 மைல்.

பூமி முற்றிலும் உருண்டை வடிவமானதல்ல. அது ஒரு கிச்சிலிப்பழம்போல் இருபக்கங்களிலும் கொஞ்சம் தட்டையாயிருக்கிறது. அதின் தட்டையாயிருக்கிற இரண்டு பக்கங்களுக்கும் உள்ள தூரம் அதினுடைய சுருக்கமான குறுக்களவு.

இந்தச் சுருக்கமான குறுக்களவின் ஒரு அந்தத்துக்கு வடதுருவம் என்றும், மற்ற அந்தத்துக்குத் தென்துருவம் என்றும் பெயர். இந்த இரண்டு துருவங்களுக்கும் நடுமத்தியில் பூமியைச் சுற்றி நிரட்சரேகை (Equator) என்ற ஒரு பெரிய சக்கரமிருக்கிறது. அது பூமியை வடகோளார்த்தம் (Northern Hemisphere) தென்கோளார்த்தம் (Southern Hemisphere) என இரண்டு கோளார்த்தங்களாக அதாவது பாதி உருண்டைகளாகப் பிரிக்கிறது. இந்த நிரட்சரேகை கிழக்கிலிருந்து மேற்கே செல்லுகிறது. நீ வடக்கு முகமாகத் திரும்பிநின்ருல் உன் வலதுகைப்பக்கம் கிழக்கு. இடது கைப்பக்கம் மேற்கு. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகிய இந்த நான்குக்கும் திசையறி கருவியின் முனைகள் அல்லது முக்கியமான திசைகள் என்று பெயர்.

பூமி அசையாமலிருப்பதாக நமக்குத் தோன்றினலும் உள்ளபடி அது எப்போதும் இரண்டுவிதமாய் அசைந்து கொண்டே யிருக்கிறது. இந்த இரண்டு சலனங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவையாயும் பூமியில் வசிக்கிற எல்லாருக்கும் அதிக பிரயோஜனமுள்ளவையாயும் இருக்கின்றன. பின்வரும் திருஷ்டாந்தம் அவற்றை விளக்கிக்காட்டும். ஒரு கிச்சிலிப்பழத்தின் தட்டையான ஒரு பக்கத்தில் ஒருபெரிய ஊசியைக் குத்தி,ந் தட்டையான மற்ருெரு பக்கத்திற் பாயும்படி பழத்தைத் துளைத்து ஊசியை அசையாமற் பிடித்துக்கொண்டு பழம் அதின்மேற் சுற்றிச் சுற்றி உரு

ளும்படி செய்தால் அது பூமியின் முதல்வகையான சலனத்தைக் காட்டும். இவ்விதமாய் பூமி தன் மிகவும் சுருக்கமான குறுக்களவின்மேல், வண்டிச்சக்கரம்அச்சின்மேல் சுற்றுகிறதுபோல ஓயாமல் சுற்றிக்கொண்டே யிருக்கிறது. ஆகையால் இக்குறுக்களவுக்கு **பூமியின் அச்சு** என்று பெயர். பூமி தன் அச்சின்மேல் பூரணமாய் ஒருதரம் சுற்றிவர 24 மணிநேரம் செல்லும். இதினால் **இரவும்பகலும்** உண்டாகிறது. பூமியில் நாம் வசிக்கும் பாகம் சூரியன் முகமாய்த் திரும்பியிருக்கும்பொழுது நமக்குப் பகலாயிருக்கும். சூரியன் நாம் வசிக்கும் பாகத்தில் பிரகாசியாமல் நமக்கு எதிரான பக்கத்தில் பிரகாசிக்கத்தக்கதாக பூமி அவ்வளவு தூரம் திரும்பியிருக்கும்பொழுது நமக்கு இரவு உண்டாகும்.





3—ம் படம்

அம்புகள் பூமி சுழலும் விதத்தைக் குறிக்கின்றன.

எல்லா நட்சத்திரங்களும், வானஜோதிகளும் அசைந்து செல்லுகிறதாக நமக்குத் தோன்றுகின்றன. அவைகள் கிழக்கே உதித்து மேற்கே அஸ்தமிக்கிறவைபோற் காணப்படுகின்றன. ஆனால் உள்ளபடி பூமிதான் அசைந்து செல்லுகிறது. அவைகள் அப்படி அசைந்து செல்லவில்லை. பூமி சுற்றுவதினால் வானத்துக்கு நேராயுள்ள நம்முடைய இடத்தைத்தான் நாம் ஓயாமல் மாற்றிக்கொண்டே யிருக்கிறோம். பூமி மேற்கிலிருந்து கிழக்கே சுற்றிக்கொண்டு ஓடுவதினால் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் கிழக்கே உதித்து நம்முடைய தலைக்கு நேராக ஓடி மேற்கே அஸ்தமிக்கிறவைபோல நமக்குத் தோன்றுகின்றன.

ஊசியினால் ஊடுருவப்பட்ட கிச்சிலிப்பழத்தை விளக்கு வெளிச்சத்திற்கு நேராகக் கொண்டுவந்து மெதுவாய்ச் சுற்றினால் இது இலகுவாய் விளங்கும்.

ஆனால் பூமி தன்னுடைய அச்சின்மேல் தன்னைத்தானே சுற்றுகிறதோடுகூட $365\frac{1}{4}$ நாளில் ஒருதடவை அது சூரியனையும் சுற்றுகிறது. இதினால் வருஷம் உண்டாகிறது. சூரி




4—ம் படம்


யனைச் சுற்றிப் பூமி ஓடும்பொழுது அது செல்லும் பாதைக்கு மண்டலம் என்று பெயர். அந்த மண்டலம் முற்றிலும் வட்டமாயிருக்கமாட்டாது. ஏனெனில் பூமியானது வருஷத்தின் ஓர்காலத்தி லிருப்பதைப்பார்க்கிலும் அதின் மற்றக் காலத்தில் சூரியனுக்கு அதிகஞ் சமீபமாயிருக்கும். பூமி சூரியனிலிருந்து ஏறக்குறைய 9 கோடியே 30 லட்சம் மைல் தூரத்திலிருக்கிறது. அது ஒரு நிமிஷத்திற்கு ஏறக்குறைய 1,000 மைல் வீதம் ஓடுகிறது.

சூரியனைச் சுற்றிப் பூமி ஓடுவதினால் **வசந்தகாலம், கோடைகாலம், இலையுதிர்காலம், மாரிகாலம்** முதலிய பருவங்கள் உண்டாகின்றன. 4—ம் படம் பூமி சூரியனைச் சுற்றி ஓடுகையில் அது இருக்கிற 4 வித்தியாசமான இடங்களைக் காட்டுகிறது. பூமியின் அச்சு அதாவது அதின் வடக்குக்கும் தெற்குக்குமுள்ள குறுக்களவு எப்பொழுதும் ஒரே திசையை நோக்கிக்கொண்டிருக்கிறதைப் படத்திற் காணலாம். வருஷத்தின் சில மாதங்களில் **தென்துருவம்** சூரியனுக்கு நேராகக் கொஞ்சம் திரும்பியிருக்கும். அப்பொழுது தென்கோளார்த்தத்தில் **கோடைகால**மும் வடகோளார்த்தத்தில் **மாரிகால**முமாயிருக்கும். ஏனெனில் மற்றக் காலத்தைப்பார்க்கிலும் அக்காலத்தில் தென்கோளார்த்தம் சூரியனுடைய உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் அதிகமாகப்

பெற்றுக்கொள்ளுகிறது. வடகோளார்த்தமோ கொஞ்சமாகப் பெற்றுக்கொள்ளுகிறது. ஆறுமாதத்திற்குப் பிறகு பூமி சூரியனின் மற்றப்பக்கத்தில் வருகிறது. அப்பொழுது வடகோளார்த்தம் அதிகமான உஷ்ணத்தையும் வெளிச்சத்தையும் பெற்றுக்கொள்ளுகிறது. தென்கோளார்த்தம் கொஞ்சமாகப் பெற்றுக்கொள்ளுகிறது. அக்காலத்தில் வடகோளார்த்தத்தில் **கோடைகாலமும்** தென்கோளார்த்தத்தில் **மாரிகாலமுமாக** விருக்கும். இந்த இரண்டு ப்ருவங்களுக்கும் இடையேயுள்ள காலங்களில் வடதுருவமாவது தென்துருவமாவது சூரியனுக்கு நேரே திரும்பியிருக்கமாட்டாது. சூரியன் நிரட்சரேகையில் நேரே தலைக்கு மேலாக இருக்கும். அக்காலத்தில் இரண்டு கோளார்த்தங்களும் சூரிய வெளிச்சத்தைச் சமமாக அடையும். அப்பொழுது **கோடைகாலம்** போய் **மாரிகாலம்** உண்டாகிற கோளார்த்தத்தில் **இலையுதிர்காலமும்**, **மாரிகாலம்** போய் **கோடைகால** முண்டாகிற மற்றக் கோளார்த்தத்தில் **வசந்தகாலமும்** உண்டாகும். அதிகமான வெளிச்சமும் உஷ்ணமும் சூரியனிடத்திலிருந்து உண்டாகிறது. சூரியனில்லாவிட்டால் பூமி இருளடைந்ததாயும் உறைந்த கட்டியாயுமிருக்கும். ஜீவஜெந்துக்கள் ஒன்றும் அதின்மேல் வாசஞ்செய்ய முடியாது. பூமியைப்போல் 13 லட்சம் மடங்கு பெரிய ஒரு பந்தைப்போல் சூரியனிருக்கிறது. நம்முடைய நினைவிற்கு அடங்காத அளவு அது உஷ்ணமாயிருக்கிறது. நாம் அறிந்திருக்கிற மிகவும் உஷ்ணமான எந்த நெருப்பைப்பார்க்கிலும் அது அதிக உஷ்ணமாயிருக்கிறது. அதைச் சுற்றிலும் பல்லாயிரமைல் தூரத்திற்கு எரிந்துகொண்டேயிருக்கிற வாயுக்களிருக்கின்றன. சூரியன் இடைவிடாமல் மிகவும் ஏராளமான உஷ்ணத்தை எரிந்துகொண்டேயிருக்கிறது. நாம் அதிலிருந்து அநேக லட்சக்கணக்கான மைல் தூரத்திலிருந்தாலும் கோடைகாலத்தில் நம்மாற் சகிக்கக்கூடாதபடி அவ்வளவு அதின் கிரணங்கள் உஷ்ணமாயிருக்கின்றன. சூரியனும் பூமியைப்போல் இருபக்கங்களிலும் கொஞ்சம் தட்டையான பெரிய பந்து வடிவமாயிருக்கிறது. பூமியைப்போல் அதுவும் தன்னுடைய சுருக்கமான குறுக்களவின்மேல் ஏறக்குறைய 25 நாளைக்கொருதரம் சுற்றிக்கொண்டேயிருக்கிறது.

சூரியனைச் சுற்றியோடும் பல உலகங்கள் உண்டு. அவற்றிற்குக் கிரகங்கள் என்று பெயர். அவையாவன:—புதன் (Mercury), சுக்கிரன் (Venus), பூமி (Earth), செவ்வாய் (Mars), வியாழன் (Jupiter), சனி (Saturn), யூரேனஸ் (Uranus), நெப்ற்றியூன் (Neptune). இவைகளில் ஒவ்வொன்றும் பூமியைப்போல இருபக்கங்களிலும் கொஞ்சம் தட்டையான உருண்டை வடிவமாயிருக்கிறது. அதைப்போலவே இவைகளும் தங்களுடைய மிகவும் குறுகின் குறுக்களவின் மேல் சுழன்றுகொண்டே சூரியனையும் சுற்றி ஓடுகின்றன. அளவிலும், சூரியனிலிருந்து அவைகளிருக்கிற தூரத்திலும், சூரியனை முழுவதும் சுற்றியோட அவைகளுக்குச் செல்லுகிற காலத்திலும், கிரகங்கள் ஒன்றிற்கொன்று மிகவும் வித்தியாசப்படுகின்றன. புதன், சுக்கிரன் என்ற இரண்டு கிரகங்கள் பூமியைப்பார்க்கிலும் சூரியனுக்குச் சமீபத்திலும் மற்ற ஐந்தும் வெகுதூரத்திலும் இருக்கின்றன. கிரகங்கள் எல்லாவற்றிலும் வெகுதூரத்திலிருப்பது நெப்ற்றியூன். பூமிக்கும் சூரியனுக்கும் உள்ள தூரத்தைப்போல் சூரியனிலிருந்து 30 மடங்கு தூரத்தில் நெப்ற்றியூன் இருக்கிறது. அது ஒருதரம் சூரியனைச் சுற்றிவர 164 வருஷம் செல்லும். கிரகங்களெல்லாவற்றிலும் பெரிது வியாழன். அது பூமியைப்பார்க்கிலும் 1,300 மடங்கு பெரிது. சூரியனுக்குப் பூமியைப்பார்க்கிலும் வெகுதூரத்திலும் ஜூப்பிற்றரைப் பார்க்கிலும் சமீபத்திலும் சிறு கிரகங்கள் என்று சொல்லப்படுகிற மிகவும் சிறிதான கோளங்கள் அநேகமிருக்கின்றன. இவைகளும் சூரியனைச் சுற்றி ஓடுகின்றன.

இந்தக் கோளங்களெல்லாம் சேர்ந்ததற்கு சூரியமண்டலம் என்று பெயர். வியாழனைப்பார்க்கிலும் 1,000 மடங்கு பெரிதான சூரியன் இந்த மண்டலத்தின் மத்தியிலிருந்து மற்றெல்லாக் கிரகங்களையும் மட்டுக்கடங்காத இடத்தின் வழியாய்த் தன்னுடனே இழுத்துக்கொண்டு செல்லுகிறது. நெப்ற்றியூன் சூரியனைச் சுற்றி ஓடுகிறதினாலுண்டாகிற வட்டம் குறுக்களவில் 550 கோடி மைலுக்கு அதிகமான அவ்வளவு பிரமாண்டமாயிருந்தபோதிலும் அதை வானத்தின் விஸ்தாரமான பரப்போடு ஒத்துப்பார்த்தால் அது சிறிதாகவே காணப்படும். இரவில் பளிச்சுப் பளிச்சு என்று மினுங்




5-ம் படம்

கிரகமண்டலங்களும், சூரியனுக்கு இலட்சாதி லட்சம் மைலிலுள்ள அவைகளின் தூரமும்.

கும் நட்சத்திரங்கள் எல்லாம் நெப்ற்றியூனுக்கும் நமக்குமுள்ள தூரத்தைப்பார்க்கிலும் பூமியிலிருந்து அநேக ஆயிர மடங்கு தூரத்திலிருக்கின்றன. அவைகளெல்லாம் நம்முடைய சூரியனைப்போலவே அநேக சூரியன்களாயிருக்கலாம்.

கிரகங்களின் பரிமாணங்களுக்கும் அவைகளுடைய மண்டலங்களின் அளவிற்குமுள்ள தாரதம்மியத்தைக் காட்டுகிறதற்கு **சர் ஜான் ஹேர்ஷல்** என்ற பேர்போன வானசாஸ்திரி பின்வரும் திருஷ்டாந்தத்தை உபயோகப்படுத்தினர்:— ஒரு சமவெளியில் இரண்டு அடி குறுக்களவுள்ள ஒரு கோளத்தை வை. அது சூரியனைக் குறிக்கும். அதைச் சுற்றி 164 அடி குறுக்களவுள்ள ஒரு சக்கரம் வரைந்து அந்தச் சக்கரத்தின் சுற்றளவின்மேல் ஒரு கடுகுவிதையை வைத்தால் அவ்விதை **புதன்** என்ற கிரகத்தைக் குறிக்கும். இதைச் சுற்றி 284 அடி குறுக்களவுள்ள ஒரு வட்டம் வரைந்து அதின் சுற்றளவின்மேல் ஒரு பயற்றை வைத்தால் அப்பயறு **சுக்கிரன்** என்ற கிரகத்தைக் குறிக்கும். இதைச் சுற்றி 430 அடி குறுக்களவுள்ள ஒரு விருத்தம் வரைந்து அதின் சுற்றளவின்மேல் ஒரு பயற்றை வைத்தால் அப்பயறு பூமியைக் குறிக்கும். இதைச் சுற்றி 654 அடி குறுக்களவுள்ள ஒரு சக்கரம் வரைந்து அதின் சுற்றளவின்மேல் ஒரு பெரிய குண்டூசித் தலையை வைத்தால் அத்தலை **செவ்வாய்** என்ற கிரகத்தைக் குறிக்கும். இதைச் சுற்றி அரைமைல் குறுக்களவுள்ள ஒரு வட்டம் வரைந்து அதின் சுற்றளவின்மேல் ஒரு சாதாரண கிச்சிலிப்பழத்


தை வைத்தால் அப்பழம் **வியாழன்** என்ற கிரகத்தைக் குறிக்கும். இதைச் சுற்றி ஐந்தில் நாலுபங்கு மைல் குறுக் களவுள்ள ஒரு வட்டம் வரைந்து அதின் சுற்றளவின்மேல் ஒரு சிறிய கிச்சிலிப்பழத்தை வைத்தால் அப்பழம் **சனி** என்ற கிரகத்தைக் காட்டும். இதைச் சுற்றி ஒன்றரை மைல் குறுக்களவுள்ள ஒரு சக்கரம் வரைந்து அதின் சுற் றளவின்மேல் எலுமிச்சம்பழம் அளவுள்ள ஓர் பழத்தை வைத்தால் அப்பழம் **யூரேனஸ்** என்ற கிரகத்தைக் குறிக் கும். கடைசியாக இதைச் சுற்றி இரண்டரை மைல் குறுக் களவுள்ள ஒரு சக்கரம் வரைந்து அதின் சுற்றளவின்மேல் பருமனுன **பிளம்** என்ற ஓர் பழத்தை வைத்தால் அது **நெப்ற்றியூன்** என்ற கிரகத்தைக் குறிக்கும்.

இதன்பின் 8,000 மைல் குறுக்களவுள்ள ஒரு சக்கரம் வரைந்தால் அதின்மேலிருக்கும் உருண்டை, நட்சத்திரங் களிலெல்லாம் சமீபமானது.

சூரியனைச் சுற்றிப் பூமி ஓடுகிறபிரகாரம் பூமியைச் சுற் றிச் சந்திரன் ஓடுகிறது. சூரியனைச் சுற்றி ஓடுவதில் பூமி சந்திரனைத் தன்னுடன்கூட இழுத்துக்கொண்டு போகிறது. சந்திரன் $27\frac{1}{4}$ நாட்களில் ஒருதரம் பூமியைச் சுற்றுகிறது. சந்திரனில் சூரிய வெளிச்சம் படும்போது அது நமக்குப் பிரகாசமாய்த் தோன்றும். ஏனெனில் அது சூரியனுடைய வெளிச்சத்தைப் பிரதிவிம்பிக்கிறது. சந்திரனுக்காவது மற் றக் கிரகங்களுக்காவது சூரியனுக்கும் நிலையான நட்சத்தி ரங்களுக்கும் இருப்பதுபோல் இயல்பான வெளிச்சம் கிடை யாது. ஆகையால் சூரியன் அவைகள்மேல் பிரகாசிக்கும் போது அவைகள் அதினுடைய வெளிச்சத்தைப் பெற்று நமக்கு வெளிச்சம் கொடுக்கின்றன. அப்போதுதான் நாம் அவைகளைப் பார்க்கக்கூடும். சந்திரனை நாம் பூமியிலிருந்து பார்க்கும்போது அதினுடைய உருவம் மாறுகிறதாக நமக் குத் தோன்றுகிறது. ஏனெனில் சிலவேளைகளில், அதின் ஒருபாகத்தில் மாத்திரம் சூரிய வெளிச்சம் படுகிறதினுல், அந் தப் பாகம்மாத்திரம் நம்முடைய கண்ணுக்குத் தெரிகிறது. மற்றச் சமயங்களில் அதில் ஒரு பாதி முழுவதிலும் சூரிய னுடைய வெளிச்சம் படுகிறதினுல் சந்திரனில் அப்பக்கம்

முழுவதையும் நாம் பார்க்கிறோம். ஒரு கிச்சிலிப்பழத்தைக் கையிலே எடுத்துக்கொண்டு பிரகாசமான ஒரு விளக்குக்குக் கொஞ்சந்தூரத்தில் நீ நின்றால் இதை அறியலாம். முதலாவது வெளிச்சத்திற்கும் உனக்கும் இடையில் ஒரு முழத் தூரத்தில் கிச்சிலிப்பழத்தைக் கையில் வைத்துக்கொள். அப்பொழுது கிச்சிலிப்பழத்தின்மேல் விளக்கு வெளிச்சம் படுகிற பாகத்தை நீ பார்க்க முடியாது. பிறகு கிச்சிலிப்பழத்தை அந்தத் தூரத்தில் கையில் வைத்துக்கொண்டே மெதுவாய்த் திரும்பு. கிச்சிலிப்பழமும் நீயும் விளக்கிலிருந்து சமதூரத்தி லிருக்கும்படியாக நீ பாதித்தூரம் சுற்றித் திரும்பியிருக்கும்போது கிச்சிலிப்பழத்தின் பாதிப்பாகம் விளக்கு வெளிச்சத்தினால் பிரகாசிக்கப்பட்டிருப்பதை நீ பார்ப்பாய். மீதியான பாதிப்பாகம் இருண்டதாகவேயிருக்கும். கிச்சிலிப்பழத்திற்கும் விளக்குக்கும் இடையிலே நீ இருக்கும்படியாக முழுவதும் திரும்பியிருக்கும்போது கிச்சிலிப்பழத்தில் உனக்கு எதிரேயிருக்கிற பாகம் முழுவதும் வெளிச்சமாயிருப்பதை நீ பார்ப்பாய். ஆனால் உன்னுடைய நிழல் கிச்சிலிப்பழத்தின்மேல் விழக்கூடாது. சந்திரன் விஷயத்திலும் இதேமாதிரியாகத்தா னிருக்கிறது. சூரியன் பூமியின் எந்தப் பக்கத்திலிருக்கிறதோ அதேபக்கத்தில் சந்திரனிருக்கும்போது அதின் வெளிச்சமான பாகம் நமக்கு அப்பாலே திரும்பியிருக்கிறது. அதின் இருண்ட பக்கம் நமக்கு எதிரிலிருக்கிறது. ஆகையால் அது நம்முடைய கண்ணுக்குத் தோன்றாமலிருக்கிறது. சந்திரன் முழுவதும் மறைக்கப்பட்டிருக்கும் காலத்துக்கு **அமாவாசை** என்று பெயர். சூரியனுக்கும் சந்திரனுக்கு மிடையில் பூமி இருக்கும்போது பூமியின் நிழல் அதின்மேல் படாமலிருந்தால் அதின் வெளிச்சமான பாகம் முழுவதையும் நாம் பார்க்கிறோம். அப்பொழுது நமக்குப் **பூரண சந்திரன்** அல்லது **பௌர்ணிமை.** அமாவாசைக்குப்பின் பிறைதோன்றி நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகும். இதற்கு **வளர்பிறை** என்றும், அப்படி வளர்கின்ற காலமாகிய 15 நாட்களுக்குச் **சுக்கிலபக்ஷம்** என்றும் பெயர். பௌர்ணிமைக்குப்பின் சந்திரன் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வரும். இதற்குத் **தேய்பிறை** என்றும், அப்படிக் குறைந்து வருகின்ற

காலமாகிய 15 நாட்களுக்குக் **கிருஷ்ணபக்ஷம்** என்றும் பெயர். குறிக்கப்பட்ட காலங்களில் சந்திரன் பூமியின் நிழ-





6-ம் படம்

சூரிய கிரகணத்தையும் சந்திர கிரகணத்தையும் விவரிப்பது.
S சூரியனையும், E பூமியையும், M சந்திரகிரகணத்தையும், M' சூரியகிரகணகாலத்தில் உண்டாகிற சந்திரபிம்பத்தையும் குறிக்கின்றன.


லுக்குள் அகப்படுவதால் **சந்திர கிரகணம்** உண்டாகிறது. சந்திரன் அந்நிழலைக் கடந்து செல்லுமட்டும் அது முழுவதும் அல்லது அதின் ஓர் பாகம்மாத்திரம் மறைந்துபோகிறது. அதேபிரகாரமாகச் சந்திரன் நமக்கும் சூரியனுக்கும் இடையில் வந்து சூரியன் முழுவதையும் அல்லது அதின் ஓர் பாகத்தையாவது நாம் காணக்கூடாதபடி சிறிது நேரத்துக்கு மறைப்பதால் **சூரிய கிரகணம்** உண்டாகிறது. அக்காலத்தில் பூமி சந்திரனின் நிழலிலிருக்கிறது.

சூரியனுக்கு மிகவும் சமீபமான **புதன்** (Mercury), **சுக்கிரன்** (Venus) என்ற இரண்டு கிரகங்களைத்தவிர மற்றெல்லாக் கிரகங்களுக்கும் சந்திரன்கள் உண்டு. அவைகளில் அநேகத்திற்கு ஒன்றிற்கு அதிகமானவைகளிருக்கின்றன. **சனிக்கு** (Saturn) 8 சந்திரன்களும் 3 ஆச்சரியமான வட்டங்களு மிருக்கின்றன. பூமியைச் சுற்றிச் சந்திரன் ஓடுகிறதுபோல எல்லாக் கிரகங்களுக்குமுரிய சந்திரன்கள் அந்தந்தக் கிரகங்களைச் சுற்றி ஓடுகின்றன. அந்தந்தக் கிரகம் தனக்குரிய சந்திரனை இழுத்துக்கொண்டு சூரியனைச் சுற்றி ஓடுகின்றது.


உலகபடம்


# கண்டங்களும் சமுத்திரங்களும்

நிரட்சரேகை (The Equator) பூமியின் மேற்பரப்பை இரண்டு கோளார்த்தங்களாகப் பிரிக்கிறது. அவைகளுக்கு **வடகோளார்த்தம், தென்கோளார்த்தம்** என்று பெயர். பூமி சாஸ்திரக்கணக்கின்படி துருவங்களின் வழியாய்ப் பூமியைச் சுற்றிச் செல்லுகிற கோடு பூமியை இரண்டு கோளார்த்தங்களாகப் பிரிக்கிறது. இப்படிப் பிரிக்குங் கோடு ஆபிரிக்காக் கண்டத்துக்குச் சற்று மேற்கே வடக்கிலிருந்து தெற்கே போகிறது. அது **புது உலகம்** என்ற குடகோளார்த்தத்தை **பழைய உலகம்** என்ற குணகோளார்த்தத்திலிருந்து பிரிக்கிறது. புது உலகம் கண்டுபிடிக்கப்பட்டதற்கு வெகுகாலத்





7–ம் படம்

நிலநீர்ப் பரப்புகளின் அளவு




8–ம் படம்

வடகோளார்த்தத்திலுள்ள நிலமும் நீரும்




9–ம் படம்

தென்கோளார்த்தத்திலுள்ள நிலமும் நீரும்

திற்கு முன்னமே குணகோளார்த்தம் நன்ருய் அறியப்பட்டிருந்ததால் அதற்குப் **பழைய உலகம்** என்று பெயர். பூமியின் மேற்பரப்பில் அதிகமான பாகத்தைத் தண்ணீர் மூடியிருப்பதை உலகப்படத்தின் மூலமாய் அறியலாம். நிலத்

துக்கும் தண்ணீருக்குமுள்ள அளவு 7—வது படத்தில் காட்டியிருக்கிறது. பூமியில் 4 பங்கு நிலமும் 11 பங்கு தண்ணீருமிருக்கிறது. இதில் அதிகமான நிலம் வடகோளார்த்தத்திலிருக்கிறது. நிரட்சரேகைக்கு வடக்கே 25 பங்கு நிலமும் அதற்குத் தெற்கே 10 பங்கு நிலமுமிருக்கிறது. குணகோளார்த்தத்திலும், குடகோளார்த்தத்திலுமுள்ள நிலத்தின் அளவிலும் இதே வித்தியாசமிருக்கிறது. வடகோளார்த்தத்திலும் தென்கோளார்த்தத்திலுமுள்ள நிலம், நீர் இவற்றினுடைய அளவின் தாரதம்மியத்தை 8—வது, 9—வது படங்களில் காட்டியிருக்கிறது.

## கண்டங்கள்

**குணகோளார்த்தத்தில் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா** ஆகிய கண்டங்களிருக்கின்றன. ஐரோப்பாவும் ஆசியாவும் **யூரேஷியா** என்று பெயருள்ள ஓரே கண்டமென்றும் சொல்லப்படும். ஏனெனில் இவ்விரண்டு கண்டங்களும் இயற்கையாய் அமைந்திருக்கிற யாதொன்றினாலும் பிரிக்கப்படாமல் ஓரே விஸ்தாரமான நிலமாயிருக்கின்றன. அவை முற்றிலும் வடகோளார்த்தத்திலேயே இருக்கின்றன.

**ஆபிரிக்கா** ஐரோப்பாவுக்குத் தெற்கே இருக்கிறது. **மத்தியதரைக்கடல்** இவ்விரண்டையும் பிரிக்கிறது. நிரட்சரேகையின் இருபக்கத்திலும் இது ஏறக்குறைய சமதூரத்திற்குப் பரம்பியிருக்கின்றது. ஆனால் இதின் விஸ்தீரணத்தில் மூன்றில் இரண்டு பங்குக்கு அதிகமான நிலம் வடகோளார்த்தத்திலிருக்கிறது. **சுவேஸ் பூசந்தி** ஆபிரிக்காவை ஆசியாவுடன் சேர்க்கிறது. ஆனால் இப்பொழுது **சுவேஸ் பூசந்தி** இருந்த இடத்தின் வழியாய் **சுவேஸ் கால்வாய்** ஓடுகிறது. அது ஆசியா ஆபிரிக்கா என்ற இரண்டு கண்டங்களையும் பிரிக்கிறது.

**ஆஸ்திரேலியா** நிரட்சரேகைக்குத் தெற்கேயும் ஆசியாவுக்குத் தென்கிழக்கேயுமுள்ள ஓர் தீவுக்கண்டம். **ஆஸ்திரேலியாக்** கண்டமும் இதற்கு வடக்கேயும் கிழக்கேயுமுள்ள எண்ணிறந்த சிறு தீவுகளும் சேர்ந்ததற்கு **ஓஷியானியா** என்று பெயர்.

குடகோளார்த்தத்தில் வட அமேரிக்கா, தென் அமேரிக்கா என இரண்டு கண்டங்களிருக்கின்றன. வட அமெரிக்கா வின் முழுப்பாகமும் தென் அமெரிக்காவின் கொஞ்சப்பாக மும் நிரட்சரேகைக்கு வடக்கேயிருக்கின்றன. இவ்விரண்டு கண்டங்களேயும் பனுமா பூசந்தி சேர்க்கிறது.

விஸ்தீரணத்தில் கண்டங்களிலெல்லாம் பெரியது ஆசியா. மிகவும் சிறியது ஐரோப்பா. ஐரோப்பாவின் விஸ்தீரணத்தைப்பார்க்கிலும் ஆபிரிக்கா மூன்று மடங்கும் ஆசியா ஏறக்குறைய நான்கு மடங்கும் பெரியது. தென் துருவத்திலுள்ள நிலத்தின் விஸ்தீரணம் இன்னமும் கண்டு பிடிக்கப்படாததினுல் அதை இதிற் சேர்க்கவில்லே.

பூமியிலுள்ள நிலத்தின் பெரும்பாகங்கள் சாதாரணமாய் வடக்குமுகமாக விரிந்தும் தெற்குமுகமாக ஒடுங்கியும், முனேகளில் முடிகின்றன. ஆபிரிக்காவும் தென் அமெரிக்காவும் ஒன்றுபோல விஸ்தாரமான தீபகற்பங்களாயிருக்கின்றன. குணகோளார்த்தத்தில் பெரிய மலேத்தொடர்கள் மேற்கேயிருந்து கிழக்குமுகமாய்ச் செல்லுகின்றன. குடகோளார்த்தத்தில் இவை வடக்கேயிருந்து தெற்குமுகமாய்ச் செல்லுகின்றன.

வடக்கிலுள்ள கண்டங்களில் கடல்கள் உள்ளே பாய்ந்திருக்கின்றன. தெற்கிலுள்ள கண்டங்கள் வடிவத்தில் அடக்கமாயிருக்கின்றன. ஐரோப்பா விஸ்தீரணத்தில் சிறியதாயிருந்தாலும் மற்றக் கண்டங்களேப்பார்க்கிலும் இதற்கு அதிக விஸ்தாரமான கடற்கரை யிருக்கிறது. கடற்கரை விஸ்தீரணத்தில் இதற்கு அடுத்தது வட அமெரிக்கா; ஆபிரிக்கா கடைசியானது.

## சமுத்திரங்கள்

பூமியிலுள்ள தண்ணீர் ஐந்து பெரிய சமுத்திரங்களாகவும் அநேக கடல்களாகவும் மிகவும் சிறிய ஜலபாகங்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பஸிபிக் மகாசமுத்திரம் மேற்கில் ஆசியாவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் கிழக்கில் வட தென் அமெரிக்காவுக்கும்

இடையிலிருக்கிறது. உலகத்திலுள்ள சமுத்திரங்களிலெல்லாம் இது பெரிதாயும் பூமியின் நீர்ப்பரப்பில் ஏறக்குறைய பாதிக்குச் சரியாயுமிருக்கிறது.

**அத்லாந்திக் மகாசமுத்திரம்** மேற்கே வட தென் அமெரிக்காக் கண்டங்களுக்கும் கிழக்கே ஐரோப்பா, ஆபிரிக்காக் கண்டங்களுக்கு மிடையிலிருக்கிறது.

**இந்துசமுத்திரம்** ஆசியாவுக்குத் தெற்கேயும் தென் ஆபிரிக்காவுக்குக் கிழக்கேயும் ஆஸ்திரேலியாவுக்கும் மலே ஆர்க்கி பெலகோவுக்கு மேற்கேயுமிருக்கிறது.


**வடசமுத்திரம்** (The Arctic Ocean) வடதுருவத்தைச் சுற்றியும் **தென்சமுத்திரம்** (The Antarctic Ocean) தென் துருவத்தைச் சுற்றியும் இருக்கிறது. ஆனால் துருவங்களைச் சுற்றி நமக்குத் தெரியாமல் பூமி ஏராளமாயிருக்கலாம். தென் சமுத்திரத்திற்குத் தெற்கே நிலத்தைக் கண்டுபிடித்து அதின் கடற்கரையைக் கொஞ்சத்தூரம் வரையில் சுற்றிப் பார்த்திருக்கிறார்கள். ஒருவேளை தென் சமுத்திரத்தைச் சுற்றித் தென்கண்டம் என்ற ஒரு கண்டமிருக்கலாம்.

**பஸிபிக் மகாசமுத்திரம்** ஏறக்குறைய முட்டை வடிவமாயிருக்கிறது. இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 7 கோடியே 20 லட்சம் சதுரமைல். இது பூமியில் மூன்றிலொரு பங்கு நிலத்தை மூடிக்கொண்டிருக்கிறது. மற்றெல்லாச் சமுத்திரங்களும் சேர்ந்து ஏறக்குறைய இதற்குச் சரியாயிருக்கிறது. இதில் மிகவும் ஏராளமான தீவுகளிருக்கின்றன.

**அத்லாந்திக் மகாசமுத்திரத்தின்** விஸ்தீரணம் ஏறக்குறைய 3 கோடியே 50 லட்சம் சதுரமைல். இது பஸிபிக் சமுத்திரத்தில் ஏறக்குறையப் பாதிக்குச் சரி. எல்லாச் சமுத்திரங்களைப்பார்க்கிலும் இதில் அதிகமான கப்பல்கள் அடிக்கடி பிரயாணஞ்செய்கின்றன.

**இந்துசமுத்திரம்** வடிவத்தில் அடக்கமாயிருக்கிறது. ஆனால் இதின் வடபாகத்தை இந்தியா பிரிக்கிறது. இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 2 கோடியே 50 லட்சம் சதுரமைல். வடசமுத்திரம் ஏறக்குறைய 50 லட்சம் சதுரமை

லும், தென்சமுத்திரம் ஏறக்குறைய 80 லட்சம் சதுரமைலும் விஸ்தீரணமுள்ளவை. இவ்விரண்டும் அதிகமாய் மிகவும் கெட்டியான பனிக்கட்டியினால் மூடப்பட்டு மனிதர்கள் அறியக்கூடாமலிருக்கின்றன.




10—ம் படம். கண்டங்களினுடையவும் சமுத்திரங்களினுடையவும் விஸ்தீரண தாரதம்மியம்.

10—வது படம் கண்டங்கள் சமுத்திரங்கள் இவைகளின் விஸ்தீரணத்தில் ஒன்றுக்கொன்றுள்ள தாரதம்மியத்தைக் காட்டுகிறது. இதிலுள்ள ஒவ்வொரு படமும் அநேக லட்சக்கணக்கான சதுரமைல்களில் ஒவ்வொன்றின் விஸ்தீரணத்தையும் குறிக்கிறது. நிலத்தின்மேல் இருப்பதுபோலவே சமுத்திரத்தின் அடிப்பாகத்திலும் மலைகளும் சமவெளிகளுமிருக்கின்றன. இதுவரையில் சமுத்திரத்தில் அளந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற மிகவும் ஆழமான பாகம் $5\frac{3}{4}$ மைல் ஆழமாயிருக்கிறது. இது ஜப்பானுக்குக் கிழக்கே பஸிபிக் சமுத்திரத்திலிருக்கிறது. அத்லாந்திக் சமுத்திரத்தில் இதுவரையில் அளந்து கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற ஆழமான பாகம் 5 மைல் ஆழமுள்ளது. பொதுவாக அத்

லாந்திக் சமுத்திரத்தைப்பார்க்கிலும் பஸிபிக் சமுத்திரம் மிகவும் ஆழமாயிருக்கிறது. பஸிபிக் சமுத்திரத்தின் சராசரி ஆழம் ஏறக்குறைய 4 மைல். அத்லாந்திக் சமுத்திரத்தின் சாதாரண ஆழம் ஏறக்குறைய $2\frac{1}{2}$ மைல். சமுத்திரத்தின் மேற்பரப்பிலுள்ள தண்ணீர் அநேகமாய் உஷ்ணமாயிருக்கிறது. ஆனால் மிகவும் ஆழமான இடங்களில் தண்ணீர் பனிக்கட்டிபோறக் குளிர்ந்திருக்கிறது.

## இந்தியாவின் இயற்கை அமைப்பு

**எல்லைகள்.**—இந்தியா தென் ஆசியாவின் மத்திய தீபகற்பம். வடக்கே இமயமலைகளும், கிழக்கே பர்மாவும், வங்காள விரிகுடாவும், தெற்கே இந்து சமுத்திரமும், மேற்கே அரபிக்கடலும், பெலுச்சிஸ்தான், ஆப்கானிஸ்தான் என்னும் தேசங்களும் இதின் எல்லைகள்.

உருவத்தில் இந்தியா தெற்கை நோக்கிய முனையையுடைய முக்கோண வடிவமாயிருக்கிறது.

**பரிமாணம்.**—இந்தியாவின் தெற்கு வடக்கான நீளமும், கிழக்கு மேற்கான அகலமும் ஏறக்குறைய 1,900 மைல். இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 15 லட்சம் சதுரமைல். ஐரோப்பாவின் மூன்றிலொரு பங்கைப்பார்க்கிலும் இந்தியா அதிக விஸ்தீரணமுள்ளது. பிரித்தானியா தீவுகளைவிட 12 மடங்கு பெரியது.

**தீவுகள்.** — மலையாளத்திற்கு மேற்கே ஏறக்குறைய 150 மைல் தூரத்தில் பவழத்தீவுகள் என்ற **லட்சத்தீவுக**(Laccadives) ளிருக்கின்றன. பர்மாவிலிருக்கும் **நிகிரேஸ்** முனைக்குத் தெற்கே வங்காள விரிகுடாவில் **அந்தமான், நிக்கபார்** என்னும் தீவுக்கூட்டங்களிருக்கின்றன.

**கடற்கரை.**—இந்தியாவின் கடற்கரை ஏறக்குறைய 4,000 மைல் நீளமுள்ளது. இதில் நிலத்துக்குட் செல்லும் நீர்ப்பிரிவுகள் வெகு சொற்பமாயிருக்கின்றன. இவைகளில்

பெரியவை மேற்கேயிருக்கும் **கம்பேய், கட்ச்** என்னும் வளை குடாக்கள். **மன்னார் வளைகுடாவும், பாம்பன் வாய்க்கா**லும், **பால்க்ஸ் ஜலசந்தி**யும் இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலிருக்கின்றன.

முனைகள்.—**கன்னியாகுமரி முனை** இந்தியாவின் தென் கோடியிலிருக்கிறது. இலங்கையின் வடபாகத்திற்கு எதிரி லிருக்கும் முனைக்குக் **கல்மீர் முனை** என்று பெயர்.


## மலைகள்

இந்தியாவுக்கு வடக்கிலுள்ள **இமயமலைகள்** அல்லது **இமாலயமலைகள்** பூமியிலுள்ள மலைகளிலெல்லாம் உயர்ந் தவை. இவைகளின் சராசரி உயரம் ஏறக்குறைய 20,000 அடி. இவைகளின் சிகரங்களிலெல்லாம் உயர்ந்தது **எவ ரஸ்ட்**. இது கடல் மட்டத்துக்குமேல் 29,002 அடி உயர முள்ளது. உயரத்தில் இதற்கடுத்த சிகரங்கள் **கிஞ்சின் சிங்கா, துவாலகிரி** முதலியனவாம்; இவைகளி லொவ் வொன்றும் 28,000 அடிக்கு அதிகமான உயரமுள்ளவை.

**இமாலயம்** என்ற வார்த்தைக்குப் **பனிவீடு** என்று அர்த் தம். இத்தொடர் ஏறக்குறைய 1,500 மைல் நீளமும் 200 மைல் அகலமுமுள்ளது. இது முதலாவது **இந்துகூஷ்** பர்வதத்திலிருந்து தென்கிழக்காய் ஓடி பிறகு **திபெத்** என்ற விஸ்தாரமான பீடபூமியை இந்தியாவிலிருந்து பிரித்து கிழக்குமுகமாய்ச் செல்லுகிறது.

இமயபர்வதத்தின் அடிவாரத்திலிருக்கும் தாழ்ந்த மலைத் தொடருக்கு **ஸ்வாலிக் மலைத்தோடர்** என்று பெயர். இது **கங்கை, சட்லிஜ்** என்னும் நதிகளுக்கு இடையிலிருக்கிறது.

**சுலைமான் மலைத்தோடர்** இந்தியாவை ஆப்கானிஸ்தா னத்திலிருந்து பிரிக்கிறது. இதின் உயர்ந்த சிகரத்துக்கு (சாலோமோனுடைய சிங்காசனமென்று அர்த்தங்கொள் ளும்) **தக்தி சுலைமான்** என்று பெயர். இது 11,317 அடி உயரமுள்ளது. பெலுச்சிஸ்தானத்துக்கும் சிந்துவுக்கும் இடையிலுள்ள மலைத்தொடருக்கு **ஹாலா மலைத்தோடர்** என்று பெயர்.




இந்தியாவின் இயற்கை அமைப்பைக்காட்டும் படம்

**அரவலிமலைகள்** சிந்துநதிக்கும் கங்கைநதிக்கும் இடையிலிருக்கின்றன. இத்தொடரின் சராசரி உயரம் ஏறக்குறைய 3,600 அடி. இதின் மிகவும் உயர்ந்த சிகரம் **ஆபுமலை.** இது கடல் மட்டத்துக்குமேல் 5,560 அடி உயரமுள்ளது. இதின் நீளம் ஏறக்குறைய 300 மைல்.

**விந்தியமலைகள்** கம்பேய் வளைகுடாவிலிருந்து கீழ்த்திசையாய்ச் சென்று **நருமதை** ஆற்றின் பள்ளத்தாக்குக்கு வட எல்லையா யிருக்கிறது. இது கிழக்குமேற்காய் ஏறக்குறைய 350 மைல் நீளமுடையது.

**நருமதை, தப்தி** நதிகளுக்கு இடையிலிருக்கும் மலைகளுக்கு **சாத்பூராமலைகள்** என்று பெயர். இது கிழக்குமேற்கில் ஏறக்குறைய 600 மைல் நீளமுடையது.

தக்ஷண பீடபூமிக்கு மேல் எல்லையாயிருக்கிற மலைத்தொடருக்கு **மேற்குத்தோடர்ச்சிமலை** என்றும் அதற்குக் கீழ் எல்லையாயிருக்கிற மலைத்தொடருக்கு **கிழக்குத்தோடர்ச்சிமலை** என்றும் பெயர்.

மேற்குத்தொடர்ச்சி மலைகள் **தப்தி** நதியிலிருந்து **மைசூர்** ராச்சியத்தின் தென்பாகம்வரையி லிருக்கின்றன. இவ்விடத்தில் கிழக்குமேற்காய் ஓடுகிற **நீலகிரி**மலைகள் இம்மலைத்தொடரைக் கிழக்குத்தொடர்ச்சிமலைகளோடு இணைக்கின்றன. மேற்குத்தொடர்ச்சிமலைகள் கன்னியாகுமரி முனை வரையில் செல்லுகின்றன.

**சகியாதிரிமலை** என்ற **மேற்குத்தோடர்ச்சிமலை** கடற்கரைக்கு முப்பது நாற்பது மைல் தூரத்தில் சடுதியாய் எழும்புகின்றன. இவைகளின் சராசரி உயரம் ஏறக்குறைய 3,000 அடி. நீலகிரிமலைகளுக்குத் தெற்கே **பாலக்காட்டுக் கணவா** யிருக்கிறது. **தப்தி** நதியிலிருந்து கன்னியாகுமரி முனைவரையிலுமிருக்கிற மேற்குத்தொடர்ச்சிமலையில் இந்த ஒரே பிளப்புமட்டுமிருக்கிறது. இதற்குத் தெற்கே பூமி திடீரென்று எழும்புகிறது. அப்புறம் இந்தத் தொடரில் **யானைமலைகளும் (Anamalais) திருவாங்கூர் குன்றுகளும்** தீபகற்பத்தின் தென்கடைசிமட்டு மிருக்கின்றன. தென்னிந்தி

யாவில் மிகவும் உயர்ந்த சிகரங்கள் அண்ணுமலைக் குன்று களி லிருக்கின்றன.

**கிழக்குத்தொடர்ச்சிமலை** கடலிலிருந்து வெகுதூரத்துக் கப்பாலிருக்கின்றன. இவைகள் அவ்வளவு உயரமுள்ள வைகளல்ல. மேலும் **பீடபூமியில்** உற்பத்தியாகிவரும் ஆறுகள் இம்மலைகளினூடே போவதினுல் இவைகள் ஒரே தொடர்ச்சியாயு மிருக்கவில்லை. வெவ்வேறு ஜில்லாக்களில் இத்தொடரின் பாகங்களுக்கு வெவ்வேறு பெயர்கள் வழங்கு கின்றன.


## சமவெளியும் பீடபூமியும்

இந்தியாவில் நான்கு முக்கியமான சமவெளிக ளிருக்கின் றன. அவையாவன: **கங்கைநதி தீரத்திலுள்ள சமவெளி.** இது தென்கிழக்கு முகமாய்ச் சரிந்திருக்கிறது. இது இந்தி யாவிலுள்ள சமவெளிகளிலெல்லாம் மிகவும் பெரிதும் செழிப்புமானது. மேற்கே **சிந்துநதி தீரத்திலுள்ள சமவெளி.** இது தெற்குமுகமாய்ச் சரிந்திருக்கிற மணற்பாங்கான பூமி. கிழக்குக்கரையோரமாயிருக்கும் விஸ்தாரமான சமபூமிக்கு **கீழ்கரைச் சமவெளி** என்று பெயர். மேற்குக்கரையோர மாய்க் கிடக்கும் ஒடுங்கின துண்டு நிலத்துக்கு **மேற்கரைச் சமவெளி** என்று பெயர்.

கங்கைநதி சிந்துநதி தீரங்களிலுள்ள சமபூமிகள் **பஞ் சாப்பில்** சந்திக்கின்றன. கிழக்குக்கரையிலுள்ள சமவெளிக் குக் **கர்நாடகம்** என்று அடிக்கடி சொல்வதுண்டு. ஆனல் அது தப்பு. ஏனெனில் **கர்நாடகம்** என்றுல் **கணவாய்** மலை களுக்கப்பாலே கன்னடபாஷை பேசப்படுகிற **கன்னட** தேச மென்று அர்த்தம். மேட்டு நிலமான சமவெளிக்குப் **பீட பூமி** என்று பெயர்.

முக்கோணவடிவமான இரண்டு விசேஷித்த பீடபூமிகள் இந்தியாவிலிருக்கின்றன. இவற்றில் பெரியதாகிய **தக்ஷிண பீடபூமி (The Deccan)** கிழக்குமுகமாய்ச் சரிந்திருக்கிறது. இதைச் சுற்றி மேற்குத்தொடர்ச்சி மலைகளும் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் இருக்கின்றன. **மாளவ பீடபூமி**

வடக்கு முகமாய்ச் சரிந்திருக்கிறது. இதற்குத் தெற்கே விந்திய மலைத்தொடரிருக்கிறது. தக்ஷிண பீடபூமியின் சராசரி உயரம் ஏறக்குறைய 2,000 அடி. மாளவ பீடபூமியிலுள்ள ஆறுகள் கங்கை நதியில் விழுகின்றன.




பிரமபுத்திரா, கங்கை, சிந்து நதிகளின் படம்

## ஆறுகள்

இந்தியாவில் விந்தியமலைத் தொடருக்கு வடக்கிலுள்ள தேசம் முழுவதையும் **பிரமபுத்திரா, கங்கை, சிந்து** என்ற மூன்று பெரிய நதிகள் முக்கியமாய் நீர்ப்பாய்ச்சுகின்றன. இம்மூன்றும் இமயமலைத்தொடரில் ஒன்றுக்கொன்று சமீபமாய் உற்பத்தியாகின்றன.

**பிரமபுத்திரா**நதி இமயமலையின் வடபாகத்தில் உற்பத்தியாகி **திபெத்து** நாட்டின் வழியாய்க் கீழ்த்திசையடைந்து, இமயமலையின் கிழக்குக் கோடியைச் சுற்றி, **அஸ்ஸாம், தென் வங்காள** நாடுகளில் பாய்ந்து கங்கைநதியின் கிழக்கு முகத் துவாரத்திற் சேர்ந்து வங்காள விரிகுடாவில் விழுகிறது.

இது உற்பத்தியாகிற இடத்தில் இதற்கு **சன்பு** என்றும், இது அஸ்ஸாம் தேசத்தில் செல்லும்பொழுது இதற்கு **டைகாங்** என்றும் பெயர். இந்நதியின் மொத்த நீளம் ஏறக்குறைய 1,800 மைல்.

**கங்கைநதி** இமயபர்வதத்தின் தென்சாரலிலுள்ள கங்கோத்திரியில் உற்பத்தியாகி வங்காளவிரிகுடாவில் விழுகிறது. இது இந்துக்களுடைய விசேஷ புண்ணிய நதியென்றும், மிகவும் பரிசுத்தமுள்ளதென்றும் சொல்லுவார்கள். இதின் நீளம் ஏறக்குறைய 1,560 மைல். இதின் பிரதான முகத்துவாரத்திற்கு **ஹூக்ளி** என்று பெயர்.

இமயபர்வதத்தின்மேல் பெய்யும் உறைந்த பனியினாலும் மழையினாலும் கங்கைநதிக்குத் தண்ணீர் வருகிறது. **கர்வால்** என்னும் இடத்தில் ஒன்றுசேரும் **பாகீரதி, அலக்நந்தா** என்னும் நதிகளின் நீர் சேர்ந்து கங்கை நதியாகிறது. இமயமலைகளிலிருந்து உற்பத்தியாகிவரும் **யமுனை, கோக்ரா** என்னும் நதிகளும் விந்தியபர்வதத்தில் உற்பத்தியாகிவரும் **சோன்** நதியும் இந்நதியின் முக்கிய உபநதிகள்.

**ராமகங்கை, கோமதி, கண்டக், கூசி** என்னும் நதிகள் வடக்கேயிருந்து வரும் வேறு பெரிய உபநதிகள். விந்திய பர்வதத்தில் உற்பத்தியாகும் **சம்பல்** யமுனை நதியில் விழுகிறது.

இந்தியாவிலுள்ள நதிகளிலெல்லாம் மிகவும் நீளமான நதியாகிய **சிந்துநதி** இமயபர்வதத்தின் வடபாகத்திலுள்ள கைலாசமலையில் உற்பத்தியாகி திபெத்து காஷ்மீரம் என்னும் சிறந்த நாடுகளின் வழியாய்ச் சென்று, பின்பு இமயமலையின் மேற்குப்புறத்தைச் சுற்றி, **பஞ்சாப், சிந்து** நாடுகளிற் பாய்ந்து, ஏறக்குறைய 1,800 மைல் தூரம் சென்றபின் அரபிக்கடலில் விழுகிறது. **ஜீலம், சீனப், ரவி, பீயாஸ், சட்லிஜ்** என்னும் ஐந்து நதிகளும் ஒன்றுகூடி **பஞ்சநதி** என்னும் பெயருடன் **சிந்துநதியில் விழுகின்றன.** இவ்வைந்து நதிகளும் பஞ்சாப்தேசத்தை நீர்ப்பாய்ச்சுகின்றன. மேற்கிலிருந்து வரும் முக்கிய உபநதி **காபூல் ஆறு.**

சிந்துநதி உற்பத்தியாகிற இடம் கடல் மட்டத்துக்கு மேல் 16,000 அடி உயரத்திலிருக்கிறது. இந்நதியின் நீளம் மேலே கூறியபடி 1,800 மைலுக்கு அதிகமாயிருந்தாலும் இது சாதாரணமாய் ஆழமுள்ளதல்ல.

நருமதையும், தப்தியும் மேற்கு முகமாய் ஓடி கம்பேய் வளைகுடாவில் விழுகின்றன. நருமதை ஆற்றின் நீளம் ஏறக்குறைய 800 மைல். தப்திநதி ஏறக்குறைய 450 மைல் நீளமுள்ளது. இவைகளின் அடிநிலம் கற்பாங்கானது.

மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்னும் நதிகள் வங்காள விரிகுடாவில் விழுகின்றன. மகாநதியின் நீளம் ஏறக்குறைய 520 மைல். கோதாவரியின் நீளம் 900 மைல். கிருஷ்ணாநதியின் நீளம் 800 மைல். காவேரியின் நீளம் ஏறக்குறைய 470 மைல்.

துங்க, பத்திரா என்னும் இரண்டு நதிகள் ஒன்றுகூடி துங்கபத்திரா என்னும் நதியுண்டாகிறது. இது கிருஷ்ணா நதியின் ஒரு பெரிய உபநதி.

வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை என்னும் சிற்றாறுகள் வங்காள விரிகுடாவில் விழுகின்றன.

## ஏரிகள்

இந்தியாவில் மிகவும் சொற்பமான சிறு ஏரிகள்மாத்திரம் இருக்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா என்னும் நதிகளுக்கு இடையிலிருக்கும் சுத்த ஜல ஏரிக்குக் கோல்லேரு (Colair) ஏரி என்று பெயர். அதின் நீளம் 25 மைலும், அகலம் 10 மைலுமாம். ராஜபுதனத்தில் சாம்பார் என்ற உப்புநீர்ஏரி இருக்கிறது. கிழக்குக் கடற்கரையில் சில்காஏரியும், பழவேற்காட்டேரி (Pulicat Lake) யுமிருக்கின்றன. சில்கா ஏரி 44 மைல் நீளமுள்ளது. பழவேற்காட்டேரி 38 மைல் நீளமும் 11 மைல் அகலமுமுள்ளது. மேற்குக் கடற்கரையிலிருக்கும் கழிகள் (The Back waters) கடலை ஒட்டியிருக்கின்றன.

# சென்னை ராசதானி

**எல்லைகள்.**—இந்திய தீபகல்பத்தின் தெற்குப் பாகமும் வங்காள விரிகுடாவின் மேற்குக்கரையிலுள்ள நீண்ட துண்டுப்பூமியும் சேர்ந்தது சென்னை ராசதானி. இதைச் சுற்றி மூன்று பக்கங்களிலும் கடல் இருக்கிறது. . இதற்கு வடக்கில் **ஒரிசா, மத்திய மாகாணங்கள், நைசாம் ராச்சியம், மைசூர் நாடு** முதலியவைகளிருக்கின்றன. இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 143,000 சதுரமைல். அதாவது இந்தியாவில் பதினொன்றில் ஒரு பாகத்துக்குச் சரி. இதின் அதிக நீளம் 950 மைல்; அதிகமாய் அகன்றிருக்கிற இடத்தில் இதின் அகலம் 450 மைல்.

இந்த ராசதானியிலுள்ள கடற்கரையின் நீளம் ஏறக்குறைய 1,800 மைல். இந்திய தீபகல்பத்தின் தென்மேற்குக் கரையோரத்தில் **திருவாங்கூர், கோச்சி** என்ற சுதேச ராச்சியங்களிருக்கின்றன.

**மேற்பரப்பு.**—**தக்ஷிண பீடபூமியின்** ஓர்பாகம இந்த ராசதானியிலிருக்கிறது. ஆனால் இப்பாகத்தில் முக்கியமாய்க் கணவாய் மலைகளுக்கும் கடலுக்கும் இடையிலுள்ள ஜில்லாக்களிருக்கின்றன. கிழக்குக்கரையில் வடபாகம் தவிர மற்றப் பாகமெல்லாம் பொதுவாய்ச் சமநிலமா யிருக்கின்றன.

**மேற்குத்தொடர்ச்சி மலைகளும், கிழக்குத்தொடர்ச்சி மலைகளும்** இந்த ராசதானியிலுள்ள முக்கியமான மலைத்தொடர்கள். தெற்கே இவ்விரண்டும் சந்திக்குமிடத்தில் **நீலகிரிமலைக**ளிருக்கின்றன. சென்னபட்டணத்திற்குத் தென்மேற்கே **சேர்வராயமலைகள்** என்ற ஒரு தனி மலைத்தொட ரிருக்கிறது. மேற்குத்தொடர்ச்சி மலைகளிலிருந்து கிழக்கே நோக்கிச் செல்லும் சிறு மலைத்தொடர்களுக்குப் **பழனிமலை** என்றும், **யானைமலை** (Anamalais) என்றும் பெயர்.

நீலகிரியின் உயர்ந்த சிகரமாகிய **டோடபெற்ரு** கடல்மட்டத்துக்குமேல் 8,760 அடி உயரமுள்ளது. நீலகிரிக்குத் தெற்கே யிருக்கும் **பாலக்காட்டுக் கணவாய்** ஒன்றுதான்



நாகபுரி
மகாநதி
அகோலா
அமராவதி
மத்திய
மாகாணம்
பீரார்
பாபேணி
நண்டேயர்
ஜகதலபுரம்
கஞ்சம்
பாஹம்புரம்
ஜெயபுரம்
பொப்பிலி
விசாகபட்டணம்
இந்தூர்
நிர்மால்
ஐதராபாத்து
நிஜாம்ராஜ்யம்
வாரங்கல்
கோதாவரி
சோளபுரம்
ஐதராபாத்து
நால்கொண்
காக்கிநாடா
நகரிக் கர்நூல் நதி
கோதாவரி ஆற்றின்
முகத்துவாரங்கள்
ரேச்சூர்
கிருஷ்ணா நதி
குண்டூர்
மசூலிப்பட்டணம்
கர்நூல்
துங்கபத்திரை
பல்லாரி
கர்நூல்
வட பெண்ணையாறு
பல்லாரி
நெல்லூர்
வங்காள
சிவமொக்க
விரிகுடா
மைசூர்
பெங்களூர்
சென்னபட்டணம
காவேரியாறு
பாலாறு
தென் புதுச்சேரி
மைசூர்
ஆற்காடு
தென் பெண்ணையாறு
மாஹி
சேலம்
காரைக்கால்
கோயம்புத்தூர்
நாகப்பட்டணம்
தஞ்சாவூர்
திண்டுக்கல்
கொச்சி
மதுரை
திருநெல்
வேலி
இராமர் அணை
தூத்துக்குடி
திருவனந்தபுரம்
இலங்கை
கன்னியாகுமரி
78
82
18
14
10


சென்னை ராஜதானி

மேற்குத்தொடர்ச்சி மலைகளைப் பிரிக்கிற ஒரே பிளப்பு. தென்னிந்தியாவிலுள்ள சிகரங்களிலெல்லாம் மிகவும் உயர்ந்த சிகரமாகிய **யானைமுடிச் சிகரம்** யானைமலையி லிருக்கிறது. இது கடல்மட்டத்துக்குமேல் 8,850 அடி உயரமுள்ளது. சென்னபட்டணத்திற்கு வடமேற்கே **நகரிக் குன்றுகள்** என்ற ஒரு சிறு மலைத்தொடர் இருக்கிறது.

**ஆறுகள்.**—வடக்கே **கோதாவரி, கிருஷ்ணா** நதிகளும், மத்தியில் **வடபெண்ணை, பாலாறு, தென்பெண்ணை, காவேரி** என்னும் நதிகளும் வங்காள விரிகுடாவில் விழுகின்றன.

கிருஷ்ணா நதிக்குத் தெற்கேயிருக்கும் நதிகளில் **காவேரி** மிகவும் பெரியது. இதினுடைய முக்கியமான உபநதிகளுக்கு **பவானி, அமராவதி** என்று பெயர். காவேரியாறு கடலில் விழுவதற்குமுன் இரண்டு பிரிவுகளாகப் பிரிகிறது. இவைகளில் வடபிரிவாகிய **கொள்ளிடம்** (The Coleroon) முக்கியமானது. வடபிரிவுக்கும் தென்பிரிவுக்கும் இடையில் கடல் முகத்துவாரமட்டும் இருக்கும் முக்கோண வடிவமான நிலம் மிகவும் விஸ்தாரமானது. இதைப்போன்ற நிலபாகத்துக்குக் **கழிமுகத் தெதிர்நிலம்** என்று பெயர். இந்துக்கள் இந்தியாவிலுள்ள மற்றப் பெரிய ஆறுகளைப்போலக் காவேரியையும் ஒரு தீர்த்த நதியாக எண்ணுகிறார்கள். **வைகை, தாம்பிரபரணி** என்னும் இரண்டு ஆறுகளும் தெற்கே கடலில் விழுகின்றன.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ராசதானி உஷ்ணமான பூமி. விசேஷமாய்க் கிழக்குக் கடற்கரை அதிக உஷ்ணமுள்ளது. வட இந்தியாவில் கோடைகாலத்தில் அதிக உஷ்ணமும், மழைகாலத்தில் அதிக குளிருமாயிருக்கிறதுபோல இந்த ராசதானியில் இல்லை. தக்ஷிண பீடபூமியிலுள்ள ஜில்லாக்களில் மழை சொற்பமாய்ப் பெய்கிறது. மேற்குக்கரையில் பெய்யும் மழை அதிகம்.

சென்னை ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் மிகவும் வறட்சியான **அனந்தபுரம்** ஜில்லாவில் ஒரு வருஷத்தில் ஏறக்குறைய 17 அங்குலம் மழைதான் பெய்கிறது. **பல்லாரி, கர்னூல், கடப்பை** ஜில்லாக்களிலும் அவ்வளவு மழைதான் பெய்கிறது. மேற்குக்கரையில் ஏறக்குறைய 130 அங்

குல மழையும் கிழக்குக்கரையில் 40 அங்குல மழையும் ஒரு வருஷத்தில் பெய்கிறது. மழை மேகங்களைக் கணவாய்மலைகள் தடுக்கிறதினால் தக்ஷிண பீடபூமியில் ஏறக்குறைய 30 அங்குல மழைதான் பெய்கிறது. தெற்கே போகப்போக மழை சொற்பம்.

**முக்கியமான விளைபொருட்கள்.**—இரும்பு ஏராளமாய் அகப்படும். இது அதிகமாய்த் தென் ஆறுகாடு, சேலம் ஜில்லாக்களில் அகப்படுகிறது. மலையாளம் ஜில்லாவிலும் மைசூரிலும் விலையேறப்பெற்ற அநேக தங்கச் சுரங்கங்கள் இருக்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களில் வைரக்கற்கள் அகப்படும். கடல்நீரிலிருந்து உப்பு விளைவிக்கிறார்கள். செம்பும் நிலக்கரியும் சில இடங்களில் மிகவும் சொற்பமாய் அகப்படுகின்றன.

கடற்கரையோரங்களில் நெல் பயிராகிறது. உள்நாட்டில் சோளம், கம்பு, வரகு, கேழ்வரகு ஆகிய பலவகையான தானியங்கள் விசேஷமாய்ப் பயிராகின்றன. எள்ளு, புகையிலை, கரும்பு ஆகிய இவைகள் சில ஜில்லாக்களில் விளைகின்றன. இன்னும் சில ஜில்லாக்களில் பருத்தியும், அவுரியும் விளைகின்றன. மேற்குக்கரையில் தென்னமரங்கள் ஏராளம். மேற்குக் கணவாய் மலைகளில் காப்பிச்செடி பயிராகிறது. நீலகிரி மலையில் தேயிலைச்செடி பயிரிடப்படுகிறது.

**தஞ்சாவூர்** ஜில்லாவில் நெல் விளைவு மிகவுமதிகம். **பல்லாரி, திருநெல்வேலி, கர்னூல், கிருஷ்ணா** ஜில்லாக்களில் பருத்தி அதிகமாய் விளைகிறது. **தென் ஆறுகாடு, நெல்லூர்** ஜில்லாக்களில் அவுரி அதிகமாய்ப் பயிராகிறது. **கோதாவரியும், மதுரையும்** புகையிலைக்குப் பேர்போனவைகள்.

**ஜனத்தொகை.**—சென்னை ராசதானியின் ஜனத்தொகை 3 கோடியே 85 லட்சத்துக் கதிகம். இதில் கொஞ்சங்குறைய எல்லாரும் **திராவிடர்.** தென்கிழக்கில் ஏறக்குறைய 1 கோடியே 55 லட்சம் ஜனங்கள் **தமிழும்,** வடகிழக்கு ஜில்லாக்களில் ஏறக்குறைய 1 கோடியே 45 லட்சம் ஜனங்கள் **தெலுங்கும்,** தென்மேற்கில் ஏறக்குறைய 30 லட்சம் ஜனங்கள் **மலையாளமும்,** கஞ்சம் ஜில்லாவிலும் அதின் சுற்றுப்புறங்களிலும் ஏறக்குறைய 20 லட்சம் ஜனங்கள் **ஓரியாபாஷை**

யும், (Uriya) மைசூர் ராச்சியத்தைச் சுற்றியிருக்கிற ஜில்லாக்களில் ஏறக்குறைய 15 லட்சம் ஜனங்கள் **கன்னட பாஷையும்** பேசுகிறார்கள்.

**கைத்தொழில்.**—இந்த ராசதானியில் ஏறக்குறைய மூன்றில் இரண்டுபங்கு ஜனங்கள் பயிரிடுந்தொழில் செய்கிறார்கள். பருத்திநூல் நெசவு ஏறக்குறைய எல்லா ஜில்லாக்களிலும் நடைபெறுகின்றது. பித்தளைச் சாமான்கள், தஞ்சாவூர், மதுரை ஜில்லாக்களிலும், வெள்ளிச் சாமான்கள் தஞ்சாவூரிலும், தந்தம், பன்றிமுள்ளு முதலியவற்றாற் செய்யப்படும் அலங்காரமான பெட்டி முதலியவைகள் விசாகபட்டணத்திலும் செய்யப்படுகின்றன. நல்ல சுருட்டு, பொன், வெள்ளி ஆபரணங்கள் முதலியவை திருச்சினாப்பள்ளியிற் செய்யப்படுகின்றன. இவையன்றி நீலம், சர்க்கரை, உப்பு, கள்ளு முதலியவை இவ்விராசதானியின் விசேஷித்த கைத்தொழில்களாம்.

**நீர்ப்பாய்ச்சலும், கால்வாய்களும்.**—இந்தியாவிலுள்ள ராசதானிகளிலெல்லாம் சென்னை ராசதானியிலேதான் நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய பெரிய வேலைகள் ஏராளமாய் நடத்தப்படுகின்றன. நீர்ப்பாய்ச்சலுக்கு வேண்டிய தண்ணீரைச் சேர்த்துவைக்க 60,000-க்கு அதிகமான குளங்கள் இருக்கின்றன. **பெரியாற்றுக்குளமும், ருஷிக்கூலியாக்குளமும்** இவைகளிலெல்லாம் பெரியனவும், பணம் பிடித்தனவுமானவைகள். இவைகளில் ஒவ்வொன்றும் 10 சதுரமைலுக்கதிகமான விஸ்தீரணமுள்ளது. கோதாவரி, கிருஷ்ணா, காவேரி, பெண்ணையாறு ஆகிய இவைகளிலிருந்து நீர்ப்பாய்ச்சலுக்காகப் பெரிய கால்வாய்கள் ஏராளமாய் வெட்டப்பட்டிருக்கின்றன. இக்கால்வாய்கள் ஏறக்குறைய 4,000 சதுரமைல் விஸ்தீரணமான நிலத்தை நீர்ப்பாய்ச்சுகின்றன. சென்னபட்டணத்திலிருந்து வடக்கேயும் தெற்கேயும் ஓடுகிற உப்புஜலக் கால்வாயும், தென்மேற்குக் கடற்கரையிலுள்ள கழிகளும் படவுகள் போக்குவரவுக்கு உபயோகப்படுகின்றன.

**இருப்புப்பாதைகள்.**—இந்த ராசதானியில் நான்கு இருப்புப்பாதைகளுண்டு:—முதலாவது **சென்னை இருப்புப்பாதை.** இது சென்னபட்டணத்தில் ஆரம்பித்து மேல்கரைநாட்டில்




தென்னிந்தியா இருப்புப்பாதைப் படம்

வேப்பூர், கள்ளிக்கோட்டை, தலைச்சேரி இவைகளின் வழியாய்ச் சென்று, கண்ணனூரில் முடிகிறது. இதின் நீளம் 900 மைல். இதிலிருந்து ரேய்ச்சூர், பெங்களூர், நீலகிரி மலைகளின் அடிவாரமாகிய இவ்விடங்களுக்குக் கிளைகள் பிரிந்து போகின்றன. இவைகளிலொன்று ரேய்ச்சூரில் பம்பாயிலிருந்து வரும் பேரிய இந்திய தீபகற்ப இருப்புப்பாதையைச் சேருகிறது இரண்டாவது தேன்னிந்திய இருப்புப்பாதை. இது சென்னபட்டணத்தில் தொடங்கி தூத்துக்குடியில் முடிகிறது. இதற்கு அநேகம் கிளைகள் இருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை கீழ்கரையிலுள்ள நாகபட்டணத்திற்கும், மேல்கரையிலிருக்கும் திருவாங்கூரிலுள்ள கொல்லத்திற்கும் போகின்றன. மூன்ருவது தேன் மகராஷ்டிர இருப்புப்பாதை. இது சென்னை ராசதானியின் வடபாகத்தின் வழியாய் பெஜவாடாவுக்குச் செல்லுகிறது. நான்காவது கீழ்கரை இருப்புப்பாதை. இது கடற்கரை வழியாய்ச் சென்று சென்னபட்டணத்தைக் கல்குத்தாவோடு சேர்க்கிறது.

**வர்த்தகம்.**—தோல், பஞ்சு, காப்பிக்கொட்டை, சர்க்கரை, நீலம், அரிசி, பலவகை எண்ணெய், முத்துக்கொட்டை, புகையிலை, கயிறு, தேங்காய், துணி முதலியவை முக்கியமான ஏற்றுமதிகள். பருத்திவஸ்திரங்கள், உலோகங்கள், இயந்திரம், வாசனைத்திரவியங்கள், பாக்கு, பலவகைச் சாராயம், உடுப்புக்கு வேண்டிய துணிகள், மரம், குதிரை, காகிதம் ஆகிய இவைகள் முக்கியமான இறக்குமதிச் சரக்குகள்.

இந்த ராசதானி ஒரு வருஷத்தில் மற்றத் தேசங்களோடு செய்யும் வியாபாரத்தின் விலை ஏறக்குறைய 19 கோடி ரூபாய். இது வங்காளத்தின் வியாபாரத்தைப்பார்க்கிலும் ஏறக்குறைய ஐந்திலொருபாகம் அதிகமாயும், பம்பாய் ராசதானியின் வியாபாரத்துக்கு மூன்றில் ஒருபங்கு குறைவாயுமிருக்கிறது. சென்னபட்டணத்துக்கு இரண்டாவதான முக்கிய துறைமுகங்கள் தூத்துக்குடி, கொச்சி, கள்ளிக்கோட்டை.

**சமயம்.**—இவ்விராசதானியிலிருக்கும் அநேகர் இந்து மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள். பதினாறில் ஒருபங்கு மகமதியர். இந்தியாவில் திருவாங்கூர் ராச்சியத்தைத்தவிர மற்

றெந்தப் பாகங்களைப்பார்க்கிலும் சென்னை ராசதானியில் சுதேச கிறிஸ்தவர்கள் அதிகம். இந்த ராசதானியில் முப்பத்தேழில் ஒருபங்கு சுதேச கிறிஸ்தவர்கள். இந்துக்களில் அநேகர் சிவமதத்தார். இந்தியாவில் மற்ற விடங்களைப் பார்க்கிலும் இந்த ராசதானியில் இந்துக்களுடைய ஆலயங்கள் மிகவும் பிரசித்திபெற்றவைகளா யிருக்கின்றன. சில ஆலயங்களில் செய்யப்பட்டிருக்கும் வேலைகள் மிகவும் அற்புதமானவையாயும், பூர்வகாலத்தில் இந்துக்களுக்குச் சிற்ப சாஸ்திரத்திலிருந்த தேர்ச்சியை விளக்குகிறவையாயும் இருக்கின்றன.

**அரசாட்சி.**—இந்த ராசதானி கவர்னர்துரை அவர்கள் அதிகாரத்துக்குட்பட்டது. அவருக்கு உதவிசெய்ய **இரண்டு ஆலோசனைச் சபைக**ளிருக்கின்றன. **சட்ட நிரூபணச் சபை** சட்டங்களைப் பிறப்பிக்கிறது. **சட்ட நிறைவேற்றச் சபை** அவைகளை நிறைவேற்றுகிறது.

1639—ம் வருஷத்தில் ஆங்கிலேயர் சென்னபட்டணத்தை ஸ்தாபித்தார்கள். 1763—ம் வருஷத்தில் செங்கற்பட்டு (ஜாஹிர்) மானியம் அவர்களுக்குக் கிடைத்தது. இரண்டு வருஷங்களுக்குப் பிறகு வடசர்க்கார் ஜில்லாக்கள் அவர்கள் ஆளுகைக்குட்பட்டன. ஏறக்குறைய 18—ம் நூற்றாண்டின் கடைசியில் மற்ற ஜில்லாக்களில் அநேகம் ஆங்கிலேயர் கைக்குள் வந்தன.

ஆதிகாலத்தில் தென்னிந்தியாவில் அநேக இந்து ராச்சியங்கள் இருந்தன. இவ்விராச்சியங்கள் ஒன்றோடொன்று அடிக்கடி போர்புரிந்துகொண்டிருந்தன. தெலுங்கு தேசத்தில் **ஆந்திரா** அல்லது **தெலுங்கானு** வமிசத்தார் அரசாண்டார்கள். தமிழ் தேசத்தின் வடபாகத்துக்கு **சோழராச்சியம்** என்றும், அதின் தென்பாகத்துக்கு **பாண்டியராச்சியம்** என்றும் பெயர். **சேரர்கள்** என்ற ஒரு ராச வமிசத்தார் மலையாள தேசத்தை அரசாண்டார்கள். கன்னட தேசத்திற்கு **விஜயநகர ராச்சியம்** என்று பெயர். தென்னிந்தியாவின் பெரும் பாகத்தை மகமதியர் ஜெயித்து புது ராச்சியங்களை ஸ்தாபித்தார்கள்

**வருமானம்.**—இந்த ராசதானியின் வருமானம் ஒரு வருஷத்துக்கு 14 கோடி ரூபாய்க்கு அதிகம்.

# சென்னபட்டணம் ஜில்லா

சென்னபட்டணமும் அதின் சுற்றுப்புறங்களும் சேர்ந்துள்ள பிரதேசத்திற்கு **சென்னபட்டணம் ஜில்லா** என்று பெயர். இவ்விராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் இந்த ஜில்லா சிறியது. இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 27 சதுரமைல். இந்த ஜில்லாவில் கடலால் சூழப்பட்ட பாகம்போக மற்றப் பாகத்தைச் செங்கற்பட்டு ஜில்லா சூழ்ந்திருக்கிறது. இது சிறிய ஜில்லாவாய் இருந்தபோதிலும் தென்னிந்தியாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் பெரிய பட்டணமாயும், அரசாட்சி ஸ்தானமாயுமிருக்கிறது. சென்னபட்டணம் கடற்கரையோரமாய் 9 மைல் நீளமுள்ளது. உள்நாட்டில் அது $3\frac{1}{2}$ மைல் தூரம் பரவியிருக்கிறது. இப்பட்டணம் கல்குத்தாவிலிருந்து 770 மைல் தூரத்திலும் பம்பாயிலிருந்து ஏறக்குறைய 800 மைல் தூரத்திலும் இருக்கிறது. 1639-ம் வருஷத்தில் இப்பட்டணம் இருக்கிற இடத்தை சந்திரகிரி ராசாவினிடத்திலிருந்து ஆங்கிலேயர் பெற்றுக்கொண்டார்கள். இவர்கள் இதில் சேயின்ற் ஜார்ஜ் என்னும் ஒரு கோட்டையைக் கட்டினார்கள். ஜனங்கள் தங்களுடைய பாதுகாப்புக்காகவும், வியாபாரத்துக்காகவும் இதைச் சுற்றிக் குடியேறினார்கள். இந்தக் கோட்டையைத் தவிர வேறு அநேக கட்டடங்கள் இங்கே உண்டு. கவர்னர் துரையின் சிங்கார மாளிகையும், **ஹைகோர்ட்** என்னும் நியாயசாலையும், **செனேட் ஹவுஸ்** என்னும் சர்வகலா சங்க மண்டபமும், **மியூசியம்** என்னும் விநோத பொருட்காட்சிச் சாலையும், வயித்தியசாலையும், தபாற்சாலையும், புகைவண்டி ஸ்தானத்துக் கட்டடங்களும், பற்பல கலாசாலைக் கட்டடங்களும் விசேஷித்தவைகளாம். இவையன்றி **பீப்பிள்ஸ்பார்க்** என்னும் சிங்கார வனமும் இங்கே உண்டு.

**இயற்கையமைப்பு.**—சென்னபட்டணம் கடல்மட்டத்துக்குத் தாழ்ந்து தட்டையாயிருப்பதினால் நீரோட்டத்துக்கு அநுகூலமானதல்ல. **கூவம்** என்னும் சிற்றாறு பட்டணத்தினூடே சுற்றிச் சுற்றிச் செல்லுகிறது. ஆனால் இதிலுள்ள கொஞ்சத் தண்ணீர் மழைகாலங்களிலன்றி, மற்றக் காலங்களில் பெருகி ஓடாமல் தங்கு தண்ணீராயிருக்கிறது. பட்

டணத்தின் சாக்கடைத்தண்ணீர் இதில் வந்து சேருவதினுல், இதின் ஜலம் ஒன்றுக்கும் உதவாது. **அடையாறு** என்ற இன்னெரு சிற்ருறு பட்டணத்தின் தென் எல்லையாயிருக்கிறது. பட்டணத்திற்கு வடமேற்கேயிருக்கும் **புழலேரி** (The Red Hills Lake) யிலிருந்து பட்டணத்திற்குச் சுத்த ஜலம் குழாய்கள் வழியாய்க் கொண்டுவரப்படுகிறது. **குடத்தலை** (Cortelliar) **ஆற்றி**ன் தண்ணீர் அவ்வேரியில் விழுகிறது.

**சீதோஷ்ணஸ்திதி.** — இந்த ஜில்லா காங்கையாயிருந்தாலும் சுகவீனமானதல்ல. வருஷத்தின் உஷ்ணமான காலங்களில் கடற்காற்று மதியமும், சாயந்தரமும் இவ்வுஷ்ணத்தை அதிகமாய்ச் சாந்தப்படுத்துகிறது. ஒரு வருஷத்தில் பெய்யும் மழை சராசரி 49 அங்குலம். அக்டோபர், நவம்பர் மாதங்களில் இவ்விடத்தில் மழை அதிகமாய்ப் பெய்யும்.

**ஜனங்கள்.** — ஜனத்தொகை 510,000. இதில் ஏறக்குறைய ஐந்தில் நாலுபங்கு இந்துக்கள். ஒன்பதில் ஒருபங்கு மகமதியர். பன்னிரண்டில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள். ஜனங்களில் ஐந்தில் மூன்றுபேர் **தமிழும்**, ஐந்தில் ஒருபங்குபேர் **தெலுங்கும்** பேசுகிறுர்கள். மகமதியர் பொதுவாய் **இந்துஸ்தானி** பேசுகிறுர்கள். இங்கிலிஷ் ராசபாஷையாதலால் விசேஷமாய்ப் பேசப்படுகிறது.

**பிரிவுகள்.** — கடற்கரை அருகிலிருக்கும் **கோட்டையில்** பட்டாளத்தார் வீடுகளும் இராணுவ உத்தியோக சாலைகளும் இருக்கின்றன. வடக்கேயிருக்கும் **ஜார்ஜ் டவுனில்** தனசாலைகளும், வர்த்தகசாலைகளும், கடைகளும் இருக்கின்றன. இது முன்னே '**பிளாக் டவுன்**' என்று அழைக்கப்பட்டது; ஆனுல் நமது இளவரசர் இந்தியாவைத் தரிசித்தபோது அப்பெயரை மாற்றி, தமது பெயரை இட்டார். இந்தப் பாகத்தில் ஜனங்கள் நெருக்கமாய்க் குடியிருக்கிறுர்கள். கோட்டைக்கு மேல்பாகத்திலிருக்கும் பிரிவுக்கு **வேப்பேரி** என்று பெயர். கோட்டைக்குத் தெற்கே **திருவல்லிக்கேணி** இருக்கிறது. இதில் முக்கியமாய் மகமதியர்கள் வசிக்கிறுர்கள். சுற்றுப்புறங்களில் ஐரோப்பியர் வசிக்கிறுர்கள்.

பல பட்டணங்களும், கிராமங்களும் சேர்ந்து சென்னபட்டணமாகிறதேயன்றி இது ஒரே பட்டணமல்ல. இதில் 20

முனிசிபல் பிரிவுகளிருக்கின்றன. இங்கிலாந்து தேசத்தை அரசாண்ட இரண்டாம் ஜார்ஜ் காலத்தில் இதில் இங்கிலிஷ்காரர் கோட்டையைக் கட்டினதினால் இக்கோட்டைக்கு **சேயின்ற் ஜார்ஜ் கோட்டை** என்று பெயர். சென்னை ராசதானிக்கும்கூட சேயின்ற் ஜார்ஜ் கோட்டை ராசதானி என்று சிலவேளைகளில் பேர் வழங்குவதுண்டு. ஜார்ஜ் டவுனுக்கு வடக்கே **ராயபுரம்** இருக்கிறது. வடமேற்கேயிருக்கிற **பிரம்பூரில்** இருப்புப்பாதையைச் சேர்ந்த பெரிய தொழிற்சாலைகளிருக்கின்றன. பிரம்பூருக்குத் தெற்கே **புரசவாக்கம்** இருக்கிறது. இது ஜனநெருக்கமுள்ள இடம். வேப்பேரிக்குத் தென்மேற்கே **எழும்பூர்** (Egmore) இருக்கிறது.

**கல்வி.** — சென்னபட்டணத்தில் அநேக பேர்பெற்ற முதற்றரப் பள்ளிக்கூடங்களும், வித்தியாசாலைகளும் இருந்தபோதிலும் பட்டண முழுவதிலும் வாசிக்கவும் எழுதவும் தெரிந்த ஜனங்களின் தொகை தென்னிந்தியாவிலிருக்கும் மற்றப் பெரிய பட்டணங்களிலிருப்பதுபோல் இல்லை. இவ்விஷயத்தில் தஞ்சாவூரும் கும்பகோணமும் சென்னபட்டணத்தைப்பார்க்கிலும் முந்தி நிற்கின்றன. ஆண்களைமாத்திரம் எடுத்துக்கொண்டு பார்த்தால் நாகபட்டணமும், திருச்சினாப்பள்ளியும்கூட அதைப்பார்க்கிலும் உத்தமமாய்த் தோன்றுகின்றன. 1901-ம் வருஷத்தில் சென்னபட்டணத்தில் வாசிக்கவும், எழுதவும் தெரிந்த ஜனங்களின் தொகை 115,481.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.** — **சென்னை இருப்புப்பாதை** சென்னபட்டணத்திலிருந்து மேற்குக்கரையிலுள்ள கள்ளிக்கோட்டை, வேப்பூர், கண்ணனூர் என்னும் இடங்களுக்கும் ரேய்ச்சூருக்கும் போகிறது. ரேய்ச்சூரிலிருந்து **பெரிய இந்திய தீபகற்ப இருப்புப்பாதை** பம்பாய்க்குப் போகிறது. **தென்னிந்திய இருப்புப்பாதை** சென்னபட்டணத்திலிருந்து தென் ஜில்லாக்களுக்கும், **கிழக்குக்கரை இருப்புப்பாதை** வட ஜில்லாக்களுக்கும் கல்குத்தாவுக்கும் போகின்றன. **பக்கிங்காம் கால்வாய்** தெற்கே தென் ஆற்காட்டில் தொடங்கி சென்னபட்டணத்தின் வழியாய் வடக்கே நெல்லூர்வரைக்கும் போகிறது. இதின் நீளம் 250 மைலுக்கு அதிகம்.

**வர்த்தகம்.** — இந்தியாவிலுள்ள துறைமுகப் பட்டணங்களில் சென்னபட்டணம் மூன்ருவது. முக்கியமான ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் முன்னாலே சொல்லப்பட்டிருக்கின்றன. துறைமுக விஷயத்தில் சென்னபட்டணத்திற்குக் கப்பல்கள் ஒதுங்குமிடம் இயற்கையிலேயே இல்லாததினுல் ஒரு சுழல்காற்று அடிக்க ஆரம்பித்தவுடனே பாதுகாப்புக்காகக் கப்பல்களைக் கடலில் ஓட்டிக்கொண்டு போகவேண்டியதாயிருக்கிறது.

## செங்கற்பட்டு ஜில்லா

**எல்லைகள்.** — வடக்கே நெல்லூர் ஜில்லாவும், கிழக்கே கடலும், தெற்கே தென் ஆறுகாடும், மேற்கே வட ஆறுகாடும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 3,079 சதுரமைல். இந்த ஜில்லா ஆறு தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**இயற்கையமைப்பு.** — காடு அடர்ந்த சில கற்பாறையான குன்றுகள் தவிர இந்த ஜில்லாவின் மற்றப் பாகங்களெல்லாம் சமபூமி. ஆனால், இந்த ஜில்லாவின் வடமேற்கில் **காம்பாக்கம்** என்னும் மலை இருக்கிறது. அதின் சிகரம் ஏறக்குறைய 2,500 அடி உயரமுள்ளது. கடற்கரையோரமாக மணற்பாங்கான நிலங்களிருக்கின்றன. இந்நிலங்களைத் **தென்னேரி** (Ennore), **பழவேற்காடு** (Pulicat) என்ற ஏரிகள் உள்நாட்டிலிருந்து பிரிக்கின்றன. இந்த ஜில்லாவிலுள்ள நிலம் பொதுவாய்ச் செழிப்பில்லாததாயிருந்தாலும் இதில் சில வயல் நிலங்களும், தென்னந்தோப்புகளு மிருக்கின்றன. இந்த ஜில்லாவின் தெற்கேயுள்ள **பாலாறு** விசேஷித்த நதி. இது வருஷத்தில் 9 மாதம் அநேகமாய் வறண்டுபோகிறது. இந்த ஜில்லாவில் சில பெரிய குளங்களிருக்கின்றன. முன் சொல்லப்பட்ட **குடத்தலையாறு** (Cortelliar), **அடையாறு**, **கூவம்** என்ற ஆறுகள் இந்த ஜில்லாவில் உற்பத்தியாகின்றன. **புழலேரி** (The Red Hills Lake), **செம்பரம்பாக்கம்**, **செங்கற்பட்டு**, **மதுராந்தகம்** ஆகிய இவைகள் முக்கியமான ஏரிகள்.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ஜில்லா உஷ்ணமாயிருந்தாலும் சுகத்துக் கேற்றது. சென்னபட்டணத்தைப் பார்க்கிலும்

இந்த ஜில்லாவில் மழை சொற்பம். ஒரு வருஷத்தில் பெய்யும் மழை சராசரி 41 அங்குலம்.




**செங்கற்பட்டு ஜி.**

ஜனங்கள்.—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 1,312,122. கொஞ்சங்குறைய எல்லாரும் இந்துக்கள். மகமதியர் 40-ல் ஒரு பங்குக்கும் குறைவானவர்கள். இந்த ஜில்லாவில் வழங்கும் முக்கியமான பாஷை **தமிழ்**. ஆனால் அநேகர் **தெலுங்கும்** பேசுகிறார்கள்.

**விளைபொருட்கள்.**—முக்கியமான நன்செய் பயிர் நெல். கேழ்வரகு, மற்றத் தினை தானியங்கள், அவுரி, பயறுகள், கொட்டைமுத்து ஆகிய இவைகளும் பயிராகின்றன. கடற்கரையோரமாய் உப்பு விளைவிக்கிறார்கள்.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.**—**தென்னிந்திய இருப்புப்பாதை** செங்கற்பட்டு வழியாய்ச் சென்று தென்மேற்கு முகமாய்ப் போகிறது. **சென்னை இருப்புப்பாதை** மேற்கு முகமாய் இந்த ஜில்லாவினூடே போகிறது. தென்னிந்திய இருப்புப்பாதையின் ஓர் கிளை செங்கற்பட்டிலிருந்து சென்னை இருப்புப்பாதையின்மேலிருக்கும் ஆர்க்கோணம் வரையில் போகிறது. **கிழக்குக்கரை இருப்புப்பாதை** இந்த ஜில்லாவின் வடபாகத்தின் வழியாய்ச் சென்று நெல்லூருக்குப் போகிறது. **பக்கிங்ஹாம் கால்வாய்** கடற்கரையோரத்தில் வடக்குமுகமாய்ச் செல்லுகிறது.

**பட்டணங்கள்.**—சென்னபட்டணத்திற்குச் சமீபமாயுள்ள **சைதாப்பேட்டை** இந்த ஜில்லாவின் தலைநகர். **பரங்கிமலை** (St. Thomas' Mount), **பூவிருந்தவல்லி** (Poonamalle), **பல்லாவரம்** ஆகிய இவைகள் சென்னபட்டணத்திலிருந்து கொஞ்சமைல் தூரத்துக்கப்பால் பட்டாளங்களிருக்கும் சிறு இடங்கள். தெற்கே பாலாற்றுக் கருகேயிருக்கும் **செங்கற்பட்டு** முற்காலத்தில் இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானமாயிருந்தது. செங்கற்பட்டுக்கும் ஆர்க்கோணத்துக்கும் இடையிலுள்ள இருப்புப்பாதையின்மேலிருக்கும் **காஞ்சீபுரம்** இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் பெரிது. இது ஒரு விசேஷித்த யாத்திரை ஸ்தலம். இப்பட்டணம் சோழ ராச்சியத்தின் ராசதானியாயிருந்தது. பழவேற்காட் டேரிக் கரையில் **பழவேற்காடு** (Pulicat) என்ற ஒரு சிறு பட்டணமிருக்கிறது. **சதுரங்கபட்டணம்** (Sadras) தெற்கே கடற்கரையிலிருக்கிறது. இது இப்பொழுது பாழாய்க் கிடக்கிறது. பழவேற்காடு இந்தியாவில் டச்சுக்காரருடைய ஆதிகாலத்துக் குடியேற்றம். சதுரங்கபட்டணமும் டச்சுக்காரருடைய குடியேற்றம். இது ஒருகாலத்தில் சல்லாக்களுக்குப் பேர்போனது. இதற்குச் சமீபத்தில் கற்பாறையில் வெட்டப்பட்டிருக்கிற கோவில்களிருக்கும் **மகாபலிபுரம்**

என்ற ஏழுகோவில் பட்டணமிருக்கிறது. **திருக்கழுக்குன்றம்** என்னுமிடத்தில் ஒரு புண்ணியஸ்தலமுண்டு. இங்கே யுள்ள மலையில் ஒரு கழுகு வந்து தினமும் சாப்பிட்டு நெய் குடித்துப் போகிறதாம்.

## வட ஆறுகாடு ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே கடப்பை, நெல்லூர் ஜில்லாக்களும், கிழக்கே செங்கற்பட்டு ஜில்லாவும், தெற்கே தென் ஆறுகாடு, சேலம் ஜில்லாக்களும், மேற்கே மைசூர் ராச்சியமும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 7,386 சதுரமைல். இந்த ஜில்லா 9 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. நாலு பெரிய ஜமீன்கள் இந்த ஜில்லாவிலிருக்கின்றன. இவைகளில் முக்கியமானது **காளாஸ்தி.**

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லாவின் வடக்கிலும் மேற்கிலுமுள்ள பாகங்கள் குன்றுகளடர்ந்தவை. தெற்கிலும் கிழக்கிலுமுள்ளவைகள் பொதுவாய்ச் சமபூமியாயிருக்கின்றன. கிழக்குத்தொடர்ச்சி மலைகள் தென்மேற்கிலிருந்து வடகிழக்காய் இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லுகிறது. இம்மலைகளுக்கு மேற்கேயுள்ள தேசம் மத்திய பீடபூமியின் ஓர் பாகம். **நகரிக்குன்றுகள்** இந்த ஜில்லாவின் வடகிழக்கு மூலையினூடே செல்லுகின்றன. கடல் மட்டத்துக்குமேல் 2,800 அடி உயரமான **நகரிமூக்கு** என்ற இதின் மிகவும் உயர்ந்த சிகரம் கடலோடிகளுக்கு விசேஷித்த ஓர் தேச அடையாளமாயிருக்கிறது. தென்மேற்கிலுள்ள **ஜவ்வாது மலைகள்** வட ஆறுகாடு, சேலம் ஜில்லாக்களுக்கு இடையிலிருக்கும் எல்லையின் ஓர்பாகம். இம்மலைகளில், கடல்மட்டத்துக்குமேல் 3,000 அடி உயரமான குன்றுகளிருக்கின்றன. இந்த ஜில்லாவிலுள்ள முக்கியமான ஆறு **பாலாறு.** இது மைசூரில் உற்பத்தியாகி இந்த ஜில்லாவினூடே கிழக்கு முகமாய் ஓடுகிறது. ஆனால் கோடைகாலத்தில் இவ்வாறு கொஞ்சங்குறைய முழுவதும் வற்றிப்போகும்.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ஜில்லா உஷ்ணமான பூமி. சில பாகங்கள் காய்ச்சல் வியாதி உண்டாக்கக்கூடியவைகள். வடக்கிலுள்ள உள்நாட்டு ஜில்லாக்களைப்பார்க்கிலும் இந்த

ஜில்லாவில் பெய்யும் மழை கொஞ்சம் அதிகம். ஒரு வருஷத்தில் 35 அங்குல முதல் 40 அங்குலம் மழை பெய்கிறது.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 2,207,712. கொஞ்சங்குறைய எல்லாரும் இந்துக்கள். இருபதில் ஒரு பங்கு மகமதியர். கிறிஸ்தவர்கள் நூற்றில் ஒரு பங்குக்குக் கொஞ்சம் அதிகமாயிருக்கிறார்கள். வடக்கிலுள்ளவர்கள் **தெலுங்கும்** தெற்கிலுள்ளவர்கள் **தமிழும்** பேசுகிறார்கள்.

**விளைபொருட்கள்.**—நெல், சோளம், கேழ்வரகு, கரும்பு, வெற்றிலை, அவுரி, பருத்தி, சணல் ஆகிய இவைகள் இந்த ஜில்லாவின் முக்கியமான பயிர்கள். கொட்டைமுத்து, பயறு ஆகிய இவைகளும் விளைகின்றன. ஏழைகளின் முக்கிய ஆகாரம் கேழ்வரகு, ஸ்திதிவந்தர்கள் அரிசிச்சோறு சாப்பிடுகிறார்கள். கணவாய் மலைகளின் அடிவாரத்திலிருக்கும் **சாத்துக்குடி** (Satghar) கிச்சிலிப்பழத்திற்குப் பேர்போனது. இந்த ஜில்லாவின் அநேக பாகங்களில் இரும்பும், செம்பும் அகப்படுகின்றன.

**கைத்தொழில்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கியமான கைத்தொழில்கள் நெசவு. இரத்தினக் கம்பளங்களும், கண்ணாடிமணிகளும் அங்கங்கே செய்கிறார்கள்.

**இருப்புப்பாதைகள்.**—**சென்னை இருப்புப்பாதையின்** தென்மேற்குக் கிளை இந்த ஜில்லாவின் வழியாய் கிழக்கிலிருந்து மேற்கே போகிறது. **விழுப்புரம், குண்டக்கல், இருப்புப் பாதை** காட்பாடி என்னுமிடத்தில் இந்தக் கிளையைக் கடந்து செல்லுகிறது. பம்பாய்க்குப் போகிற வடமேற்குக் கிளை இந்த ஜில்லாவின் கிழக்கிலிருக்கும் ஆர்க்கோணத்திலிருந்து புறப்படுகிறது. இவ்விடத்திலிருந்து இன்னொர் கிளை செங்கற்பட்டுக்குப் போகிறது. வடமேற்குக் கிளையிலிருக்கும் திருப்பதியிலிருந்து வடக்கு முகமாய் நெல்லூருக்கு ஒரு கிளையும், தென்மேற்கு முகமாய் குண்டக்கல் இருப்புப் பாதையிலிருக்கும் பாகாலுக்கு இன்னொர் கிளையும் போகிறது. ஜோலார்ப்பேட்டையிலிருந்து இந்த ஜில்லாவின் தென்மேற்கு **மூலையின்** வழியாய் பெங்களூருக்கு ஒரு கிளை போகிறது.

**பட்டணங்கள்.**—சென்னபட்டணத்திலிருந்து 100 மைல் தூரத்தில் **விழுப்புரம் குண்டக்கல்** இருப்புப்பாதையின் மேலிருக்கும் **சித்தூர்** இந்த ஜில்லாவின் முக்கியமான பட்டணம். இங்கே ஜில்லா கலெக்டரும் இதர ஐரோப்பிய உத்தியோகஸ்தரும் வசிக்கிறார்கள். சென்னை இருப்புப் பாதையின் வடமேற்குத் தென்மேற்குக் கிளைகள் சந்திக்கிற இடத்திற்கு **ஆர்க்கோணம்** என்று பெயர். வடமேற்குக் கிளையிலிருக்கும் **திருப்பதி** கடல்மட்டத்துக்குமேல் 2,500 அடி உயரமான மலைக்கோவிலுக்குப் பேர்போனது. திருப்பதிக்குத்தெற்கே 16 மைல் தூரத்தில் **சந்திரகிரி** இருக்கிறது. **தலைக்கோட்டை** என்னுமிடத்தில் நடந்த சண்டைக்குப் பிறகு விஜயநகரத்து ராசாக்கள் இவ்விடத்தில் வசித்தார்கள். இப்பொழுது சென்னபட்டணம் கட்டப்பட்டிருக்கிற இடத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்தது இந்த ராசாதான். ஆறுகாட்டு ரயில் ஸ்டேஷனிலிருந்து 5 மைல் தூரத்தில் பாலாற்றின் கரையிலிருக்கும் **ஆறுகாடு** முற்காலத்தில் கர்நாடக நவாபுகளின் ராசதானியாயிருந்தது. 1751-ம் வருஷத்தில் இந்த இடம் கர்நாடக நவாபின் கையில் விழாதபடி **கிளைவ்** என்பவர் அதைக் காத்தார். ஆறுகாட்டுக்குத்தெற்கே **ஆரணி** என்னுமிடத்தில் **ஸர் அயர் கூட்** என்பவர் **ஐதர் ஆலி**யைத் தோற்கடித்தார். ஆறுகாட்டுக்கு மேற்கே 15 மைல் தூரத்திலிருக்கும் **வேலூர்** சப்கலெக்டர் துரை வசிக்குமிடம். இதில் ஒரு பட்டாளமிருக்கிறது. இவ்விடத்திலுள்ள கோட்டையில் அநேக சண்டைகள் நடந்திருக்கின்றன. சென்னை இருப்புப்பாதையின் தென்மேற்குக் கிளையும் விழுப்புரம் குண்டக்கல் இருப்புப்பாதையும் சந்திக்குமிடத்திற்கு இது சமீபமாயிருக்கிறது. தென்கிழக்கிலிருக்கும் **வந்தவாசி**யில் **கர்னல் கூட்** என்பவர் பிராஞ்சுக்காரரைத் தோற்கடித்தார்.

## தென் ஆறுகாடு ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே செங்கற்பட்டு, வட ஆறுகாடு ஜில்லாக்களும், கிழக்கே வங்காள விரிகுடாவும், தெற்கே திருச்சிநாப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களும், மேற்கே சேலம் ஜில்லாவும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம்

5,217 சதுரமைல். இந்த ஜில்லா 8 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**இயற்கையமைப்பு.** — இந்த ஜில்லாவின் மேற்கெல்லையில் **கல்ராயன்மலை**களும், வடமேற்கெல்லையில் **ஜவ்வாதுமலை**களுமிருக்கின்றன. ஆனால் இந்த ஜில்லா பொதுவாய்ச் சமபூமியாயும், மணற்பாங்காயு மிருக்கிறது. **திருவண்ணாமலை** கடல் மட்டத்துக்குமேல் 2,700 அடி உயரமான ஒரு தனித்த குன்று. அதில் விசேஷித்த ஒரு கோவில் இருக்கிறது.

திருவண்ணாமலை அநேகந்தரம் முற்றிக்கை போடப்பட்டது. இவ்விடத்தில் **கர்னல் ஸ்மித், ஐதர் ஆலி**யைத் தோற்கடித்தார். **செஞ்சி** மூன்று மலைகளின்மேல் கட்டப்பட்ட ஒரு விசேஷித்த கோட்டை. இது இப்பொழுது குடியற்றுப் பாழாய்க் கிடக்கிறது.

**தென் பெண்ணையாறு** இந்த ஜில்லாவின் மத்தியவழியாய் ஓடி கூடலூருக்குச் சமீபத்தில் கடலில் விழுகிறது. தெற்கேயுள்ள **வெள்ளாறு** பரங்கிப்பேட்டைக்கருகே கடலில் விழுகிறது. காவேரியாற்றின் வடக்குக் கிளையாகிய **கோள்ளிடம்** (Coleroon) தென் ஆறுகாட்டுக்கும் தஞ்சாவூருக்கும் இடையிலுள்ள எல்லையின் ஓர் பாகம்.

**சீதோஷ்ணஸ்திதி.** — கடற்கரையிலிருந்து வெகு தூரத்திலிருக்கும் உள்நாடு உஷ்ணமான பூமி. அது சுகவீனமான இடம். கல்ராயன்மலைகளின் சரிவு மிகவும் காய்ச்சல் வியாதி நடமாடும் பூமி. இந்த ஜில்லாவில் ஒரு வருஷத்தில் பெய்யும் மழை ஏறக்குறைய 36 அங்குலம்.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 2,349,894. குடிகளின் தொகையில் இந்த ஜில்லா இந்த ராசதானியில் நாலாவது. இவர்களில் அநேகர் இந்துக்கள். முப்பத்தாறில் ஒருபங்கு மகமதியர். முப்பத்தைந்தில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள். இந்த ஜில்லாவில் எங்கும் வழங்கும் பாஷை **தமிழ்.**

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கியமான பயிர் நெல். ஆனால் கம்பு, வரகு, கேழ்வரகு, சோளம், கொட்டை முத்து, அவுரி ஆகிய இவைகளும் அதிகமாய்ப் பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—வஸ்திரம் நெய்தல், உப்பு விளைவித்தல், நீலம் செய்தல், பாய் முடைதல், கயிறு பின்னுதல் ஆகிய இவைகள் இந்த ஜில்லாவின் முக்கியமான கைத்தொழில்கள். கடற்கரை ஓரமாய் ஏராளமாய் மீன்பிடிக்கிறார்கள். இரும்பு மண் இந்த ஜில்லாவில் அநேக இடங்களில் அகப்படுகிறது.

**இருப்புப்பாதைகள்.**—தென்னிந்திய இருப்புப்பாதை தெற்கு முகமாய் இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லுகிறது. **விழுப்புரத்லிருந்து** ஒரு கிளைப்பாதை கிழக்குமுகமாய்ப் புதுச்சேரிக்குப் போகிறது. **விழுப்புரம் குண்டக்கல் இருப்புப்பாதை** திருவண்ணுமலை வழியாய் வடமேற்கே செல்லுகிறது.

**பட்டணங்கள்.**—சென்னபட்டணத்திற்குத் தெற்கே ஏறக்குறைய 120 மைல் தூரத்தில் தென்னிந்திய இருப்புப்பாதையின்மேலிருக்கும் **கூடலூர்** இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானம். இங்கு கலெக்டர் வசிக்கிறார். இது ஓர் துறைமுகம். இவ்விடத்தில் 1687–ம் வருஷத்தில் இங்கிலிஷ்காரர் **சேயின்ற் டேவிட் கோட்டையைக்** கட்டினார்கள். 1746–ம் வருஷத்தில் பிராஞ்சுக்காரர் சென்னபட்டணத்தைப் பிடித்தபொழுது சேயின்ற் டேவிட் கோட்டை 6 வருஷமாய் இங்கிலிஷ் ராசாங்கத்தின் முக்கிய ஸ்தானமாயிருந்தது. இந்தக் கோட்டையை இங்கிலிஷ்காரர் அநேகந்தரம் இழந்து திரும்பவும் திரும்பவும் பிடித்திருக்கிறார்கள். கூடலூருக்கு வடமேற்கேயிருக்கும் விழுப்புரம் குண்டக்கல் இருப்புப்பாதையிலிருக்கும் **திருவண்ணுமலை** ஒரு பெரிய வர்த்தக ஸ்தலம். வெள்ளாற்றின் முகத்துவாரத்திலிருக்கும் **பரங்கிப்பேட்டை** (Porto Novo) ஒரு துறைமுகப் பட்டணமும் இருப்புப்பாதை ஸ்தானமுமாயிருக்கிறது. இதற்கும் இலங்கைக்கும் இடையில் அதிக வர்த்தகம் நடக்கிறது. இவ்விடத்தில் **ஸர் அயர் கூட்** என்பவர் **ஐதர் ஆலியைத்** தோற்கடித்தார். தெற்கே இருப்புப்பாதையின்மேலிருக்கும் **சிதம்பரம்** பெரிய சிவாலயத்திற்குப் பேர்போன இடம். இந்தியாவில் பிரான்சுக்காரருடைய முக்கிய ஸ்தானமாகிய **புதுச்சேரியைத்** (Pondicherry) தென் ஆறுகாடு ஜில்லா தரைப்பக்கத்தில் சுற்றியிருக்கிறது. **விழுப்புரம்** புதுச்சேரிக்கு 25 மைல் தூரத்திலிருக்கும் ஓர் ரயில் ஸ்டேஷன். **செஞ்சி,** இங்கு ஒரு கோட்டை உண்டு. **மயிலம்,** இங்கு மாட்டு வியாபாரம் விசேஷம்.

# தஞ்சாவூர் ஜில்லா

**எல்லைகள்.** — வடக்கே தென் ஆறுகாடு ஜில்லாவும், கிழக்கேயும் தென்கிழக்கேயும் வங்காளவிரிகுடாவும், தென் மேற்கே மதுரை ஜில்லாவும், மேற்கே திருச்சினாப்பள்ளி ஜில்லாவும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 3,710 சதுரமைல். இந்த ஜில்லா 9 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**இயற்கையமைப்பு.** — இந்த ஜில்லா முழுவதிலும் ஒரு குன்று முதலாய்க் கிடையாது. காவேரியாற்றின் முகத்துவாரத்தில் அதின் இரண்டு கிளைநதிகளுக்கும் இடையிலிருக்கும் நிலம் தான் இந்த ஜில்லாவின் முககியமான பாகம். காவேரியாற்றின் வடக்குக் கிளையாகிய கொள்ளிடத்தைப் பற்றி முன்னாலே சொல்லியிருக்கிறது. காவேரியாற்றிலிருந்து எண்ணிறந்த கால்வாய்கள் இந்த ஜில்லா எங்கும் செல்லுகின்றன. கடற்கரையில் அலை அதிகம். **கலிமீர் முனை** இந்த ஜில்லாவின் தென்கிழக்கேயிருக்கிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**—தஞ்சாவூர் ஜில்லா தென்னிந்தியாவிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் மிகவும் உஷ்ணமான பூமி. ஒரு வருஷத்தில் 40 அங்குலத்துக் கதிகமான மழை பெய்கிறது. நீர்ப்பாய்ச்சலுக்கான எண்ணிறந்த கால்வாய்களிருப்பதினாலும் மிகவும் செழிப்பாய் உண்டாகிற மரஞ்செடிகள் முதலியவற்றினாலும் உஷ்ணகாலங்களிலும்கூட இந்த ஜில்லாவின் காற்றுக் குளிர்ச்சியானதாயும் உற்சாகத்தைக் கொடுக்கத்தக்கதாயு மிருக்கும்.

**ஜனங்கள்.**—சென்னை ராசதானியில் சென்னபட்டணத்தைத் தவிர தஞ்சாவூர் மிகவும் குடியேற்றமுள்ள ஜில்லா. 1901–ம் வருஷத்து ஜனத்தொகைப்படி இங்கே 2,245,029 ஜனங்கள் வசிக்கிறார்கள். இவர்களில் பதினெட்டில் ஒருபங்கு மகமதியர். இருபத்தைந்தி லொருபங்கு கிறிஸ்தவர்கள். ஜனங்களில் இருபதில் பத்தொன்பதுபேர் **தமிழ்** பேசுகிறார்கள்.

ராசதானி முழுவதும் பார்த்தால் ஒரு மைலில் சராசரி 269 பேர் குடியிருக்கையில், இந்த ஜில்லாவில் ஒரு சதுர மைலுக்கு 561 பேர் வீதம் குடியிருக்கிறார்கள்.

**விளைபொருட்கள்.**—நீர்ப்பாய்ச்சலுக்கான குளங்களையும், கால்வாய்களையும் இந்த ஜில்லாவில் ஆதிகாலந்தொட்டு அதிகமாய் ஏற்படுத்தியிருப்பதால் இந்த ஜில்லா தென்னிந்தியாவிலுள்ள நாடுகளிலெல்லாம் மிகவும் செழிப்பான பூமி. இந்த ஜில்லாவை தென்னந்தோப்புகள் கலந்த விஸ்தாரமான ஒரு பெரிய நெல்வயல் என்று சொல்லலாம். மலைகளில் பெய்யும் மழையினால் வருஷத்தின் மிகவும் உஷ்ணமான காலத்திலும் காவேரியாறு இருகரையும் பிரவாகமாய்ப் போகிறது. இந்த ஜில்லாவின் நன்செய் நிலங்களில் விளையும் முக்கியமான தானியம் நெல். புன்செய் தானியங்கள் கொஞ்சந்தான் பயிராகின்றன. காய்கறிகள், தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, கரும்பு, புகையிலை ஆகிய இவைகளும் விளைகின்றன.

**கைத்தொழில்கள்.**—பட்டுவஸ்திரங்கள், கம்பளங்கள், பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள், நெட்டிவேலை ஆகிய இவைகள் இந்த ஜில்லாவின் முக்கியமான கைத்தொழில்கள்.

**இருப்புப்பாதைகள்.**—தென்னிந்திய இருப்புப்பாதை இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லுகிறது. தஞ்சாவூரிலிருந்து நாகபட்டணத்திற்கும், முத்துப்பேட்டைக்கும் கிளைப்பாதைகள் செல்லுகின்றன.

**பட்டணங்கள்.** — தென்னிந்திய இருப்புப்பாதையிலிருக்கும் **தஞ்சாவூர்** இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானம். இவ்விடத்தில் பேர்போன ஒரு இந்து ஆலயமிருக்கிறது இது சோழ ராச்சியத்தின் கடைசி ராசதானி. பிற்காலத்தில் இது மகராஷ்டிரர் கைக்குள் வந்தது. தஞ்சாவூருக்கு வடகிழக்கே தென்னிந்திய இருப்புப்பாதையிலிருக்கும் **கும்பகோணம்** ஒரு பெரிய யாத்திரை ஸ்தலம். இதில் பிராமணர்களுடைய ஜனத்தொகை அதிகம். இவ்விடத்தில் பேர்போன கல்விச்சாலைக ளிருப்பதால் இப்பட்டணத்தைத் தென்னிந்திய **ஆக்ஸ்போர்ட்** என்று சொல்வதுண்டு. சென்னை ராசதானியின் பட்டணங்களில் ஆறுவதாகிய இப்பட்டணம் இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் மிகவும் பெரியது. வடக்கே இருப்புப்பாதை மார்க்கத்தில் **மாயவரம்**, **சீகாழி** என்ற பட்டணங்களிருக்கின்றன. **மன்னார்குடி** தஞ்சாவூருக்குத் தென்கிழக்கே யிருக்கிறது. **நாகபட்டணம்**

முக்கிய துறைமுகப்பட்டணம். இவ்விடத்திலிருந்து அதிகமாய் ஏற்றுமதியாகிறது நெல். தஞ்சாவூரிலிருந்து இப்பட்டணத்திற்கு ஒரு இருப்புப்பாதை போகிறது. நாகபட்டணத்திலிருந்து 3 மைல் தூரத்திலிருக்கும் **நாகூரில்** பேர் பெற்ற ஒரு பள்ளிவாசல் இருக்கிறது. **தரங்கன்பாடி** (Tranquebar) நாகபட்டணத்திற்கு வடக்கே 22 மைல் தூரத்திலிருக்கிற ஒரு துறைமுகப்பட்டணம். 1624-ம் வருஷத்தில் டென்மார்க்குத் தேசத்தார் இப்பட்டணத்தை ஸ்தாபித்தார்கள். 1845-ம் வருஷத்தில் இங்கிலிஷ்காரர் இப்பட்டணத்தை அவர்களிடமிருந்து விலைக்கு வாங்கினார்கள். இந்தியாவுக்கு முதலாவது வந்த ஐரோப்பிய குருமார் 1706-ம் வருஷத்தில் இவ்விடத்தில்தான் வந்து இறங்கினார்கள். **காரைக்கால்,** இது பிரான்சுக்காரருக்குச் சொந்தமானது. **திருவையாறு** இந்துக்களின் புண்ணிய ஸ்தலம்.

## சேலம் ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே மைசூர் ராச்சியமும் வட ஆறுகாடு ஜில்லாவும், கிழக்கே திருச்சினாப்பள்ளி, வட ஆறுகாடு, தென் ஆறுகாடு ஜில்லாக்களும், தெற்கே திருச்சினாப்பள்ளி, கோயம்புத்தூர் ஜில்லாக்களும், மேற்கே கோயம்புத்தூர் ஜில்லாவும், மைசூர் ராச்சியமும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 7,530 சதுரமைல். இந்த ஜில்லா 9 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**இயற்கையமைப்பு.**—வடமேற்கிலுள்ள பூமி மைசூர் பீடபூமியின் தொடர்ச்சியாயிருப்பதினால் மிகவும் உயரமாயிருக்கிறது. தென்பாகத்தைத் தவிர இந்த ஜில்லா குன்றடர்ந்தது. மலைத்தொடர்களுக்கு இடையில் பெரிய சமவெளிகளிருக்கின்றன. இந்த ஜில்லாவின் மத்தியில் **சேர்வராய மலைகள்** என்ற ஒரு முக்கியமான மலைத்தொடர் இருக்கிறது. இதிலுள்ள மிகவும் உயர்ந்த சிகரம் கடல்மட்டத்துக்கு மேல் 5,400 அடி உயரமுள்ளது. தென்கிழக்கிலிருக்கும் **கல்ராயன்மலைக**ளில் மலையாட்கள் என்ற ஒரு காட்டுஜாதியார் வசிக்கிறார்கள். இந்த ஜில்லாவின் தென்பாகத்தில் **பச்சைமலைக**ளிருக்கின்றன. வடகிழக்கிலிருக்கும் **ஜவ்வாதுமலைகள்** வட ஆறுகாடு ஜில்லாவுக்குள்ளும் செல்லுகின்றன.

இந்த ஜில்லாவுக்கும் கோயம்புத்தூருக்கும் இடையிலுள்ள எல்லையாகிய **காவேரியாறு** இந்த ஜில்லாவிலுள்ள முக்கியமான நதி. **தேன் பெண்ணையாறு** தென்கிழக்காய் ஓடி தென் ஆறுகாடு ஜில்லாவுக்குச் செல்லுகிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ஜில்லாவின் வடமேற்கிலிருக்கும் பீடபூமி குளிர்ச்சியாயும், சுகத்துக்கேற்றதாயு மிருக்கிறது. இந்த ஜில்லாவிலுள்ள சமபூமி மிகவும் காங்கையான இடம். மலைகளைச் சுற்றிக் காய்ச்சல் வியாதி அதிகமாய் நடமாடுகிறது. ஒரு வருஷத்தில் பெய்யும் மழை 36 அங்குலம்.

**ஜனங்கள்.**–1901–ம் வருஷத்து ஜனத்தொகை 2,204,974. இவர்களில் கொஞ்சங்குறைய எல்லாரும் இந்துக்கள். ஏறக்குறைய முப்பத்து மூன்றில் ஒருபங்கு மகமதியர். நூற்றில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள். இந்த ஜில்லாவின் பாஷை **தமிழ்.** ஆனால் சிலர் **கன்னடமும்** பேசுகிறார்கள்.

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவில் நெல்லும், கேழ்வரகும் அதிகமாய்ப் பயிராகின்றன. வேலையாட்களின் உணவு கேழ்வரகு. கம்பு, பயறுகள், கொட்டைமுத்து ஆகிய இவைகளும் விளைகின்றன. இந்த ஜில்லாவின் நிலம் பொதுவாய் செம்மண் தரையாயிருக்கிறது. ஆனால் பருத்தி விளையும் கரிசல் நிலமும், கொஞ்சம் இருக்கிறது.

**கைத்தொழில்கள்.**—ஏறக்குறைய ஒவ்வொரு பெரிய பட்டணத்திலும், கிராமத்திலும் நெசவுதொழில் நடக்கிறது. சேலத்திலுள்ள சிறைச்சாலையில் நேர்த்தியான இரத்தினக் கம்பளங்கள் செய்கிறார்கள். இந்த ஜில்லாவில் மிகவும் நயமான இரும்பு அகப்படுகிறது. ஆகையால் **சேலம்** பட்டணம், கத்தி முதலிய வெட்டுக்கருவிகளுக்குப் பேர்போனது.

**இருப்புப்பாதை.**—**சென்னை இருப்புப்பாதையின் தென்** மேற்குக் கிளை இந்த ஜில்லாவின் மத்தியவழியாய் வடகிழக்கிலிருந்து தென்மேற்கே போகிறது. ஜோலார்ப்பேட்டையிலிருந்து ஒரு கிளைப்பாதை பெங்களூருக்குப் போகிறது.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம் **சேலம்.** இதின் ரெயில்பாதை ஸ்தானமாகிய **சூரமங்கல**த்தி

லிருந்து இது $3\frac{1}{2}$ மைல் தூரத்திலிருக்கிறது. இதிலிருந்து 6 மைல் தூரத்தில் சேர்வராயமலைகள் இருக்கின்றன. ஜனத்தொகையில் இப்பட்டணம் இந்த ராசதானியில் ஐந்தாவது பட்டணம். சேர்வராயமலைகளிலுள்ள ஏர்க்காடு வெயில்காலத்தில் ஐரோப்பியர் சுகத்திற்காகப் போகுமிடம். வடகிழக்கிலுள்ள திருப்பத்தூரும், வாணியம்பாடியும் சென்னை இருப்புப்பாதையிலிருக்கும் பட்டணங்கள். வடகிழக்கேயுள்ள கிருஷ்ண்கிரியில் ஒரு கோட்டை இருக்கிறது. இது முற்காலத்தில் மிகவும் பலமுள்ளதாயிருந்தது. வடமேற்கிலிருக்கும் ஓசூருக்கருகில் சென்னைப் பட்டாளத்திற்குக் குதிரைகள் சவதரிக்கும் ரீமவுண்ட் டிப்போ என்கிற ஓரிடமிருக்கிறது. தெற்கேயிருக்கும் சேர்ந்தமங்கலத்தில் இரும்பு உருக்கி வார்க்கிறார்கள்.

## திருச்சிணுப்பள்ளி ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே சேலம், தென் ஆறுகாடு ஜில்லாக்களும், கிழக்கே தஞ்சாவூர் ஜில்லாவும், தெற்கே புதுக்கோட்டை ராச்சியமும் மதுரை ஜில்லாவும், மேற்கே கோயம்புத்தூர் ஜில்லாவும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 3,632 சதுரமைல். விஸ்தீரணத்தில் இது தஞ்சாவூருக்குச் சரியாயிருக்கிறது. இந்த ஜில்லா 5 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லா பொதுவாய்ச் சமபூமி. ஆனால் அங்குமிங்கும் கற்பாறையான குன்றுகளு மிருக்கின்றன. இதற்கும் சேலம் ஜில்லாவுக்கும் இடையிலிருக்கும் பச்சைமலைகளைத்தவிர இந்த ஜில்லாவில் வேறே மலை கிடையாது. காவேரியாறு இந்த ஜில்லாவின் வழியாய் மேற்கேயிருந்து கிழக்கே ஓடுகிறது. திருச்சிணுப்பள்ளிப் பட்டணத்திற்குச் சமீபத்தில் இந்த ஆறு இரண்டு கிளைகளாகப் பிரிகிறது. இந்த இரண்டு கிளைகளாலும் ஸ்ரீரங்கம் என்னும் தீவு உண்டாகிறது. வடகிழக்காய் ஓடுகிற கிளைக்குக் கொள்ளிடம் (Coleroon) என்று பெயர். இன்னொரு கிளை கிழக்குமுகமாய் ஓடிக் கடலில் விழுகிறது. வெள்ளாறு திருச்சிணுப்பள்ளி தென் ஆறுகாடு ஜில்லாக்களுக்கு இடையிலுள்ள எல்லையாயிருக்கிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ராசதானியிலுள்ள மிகவும் உஷ்ணமான ஜில்லாக்களில் திருச்சினுப்பள்ளியும் ஒன்று. ஆனால் இந்த ஜில்லா சுகத்துக்கேற்றது. இதில் பெய்யும் மழை சராசரி 35 அங்குலம்.

**ஜனங்கள்.**—1901-ம்வருஷத்துஜனத்தொகை 1,444,770. கிறிஸ்தவர்கள் ஏறக்குறைய பத்தொன்பதில் ஒரு பங்கு. மகமதியர் முப்பத்து மூன்றில் ஒரு பங்கு. மீதியானவர்கள் இந்துக்கள். பொதுவாய் வழங்கும் பாஷை தமிழ். ஆனால் ஏறக்குறைய எட்டில் ஒருபங்கு ஜனங்கள் தெலுங்கும் பேசுகிறார்கள்.

**விளைபொருட்கள்.**—நன்செய் நிலங்களில் நெல் பயிராகிறது. சோளம், கேழ்வரகு, கம்பு, வரகு ஆகிய இவைகள் முக்கியமான புன்செய் பயிர்கள். கொள்ளு, பருத்தி, சர்க்கரை, கரும்பு, புகையிலை, அவுரி ஆகிய இவைகளும் பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—பருத்திநூல் நெசவு, நகைகள் செய்தல், சுருட்டுச் செய்தல், நெட்டிவேலை, ஜோடு செய்தல் ஆகிய இவைகள் முக்கியமான கைத்தொழில்கள்.

**இருப்புப்பாதைகள்.** — தென்னிந்திய இருப்புப்பாதையின் பிரதானமான பாதை இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லுகிறது. சென்னை இருப்புப்பாதையிலிருக்கும் ஈரோட்டுக்குத் திருச்சினுப்பள்ளியிலிருந்து ஒரு கிளைப்பாதை போகிறது.

**பட்டணங்கள்.**—காவேரி யாற்றோரமாயிருக்கிற திருச்சினுப்பள்ளி இந்த ஜில்லாவின் முக்கியமான பட்டணம். இந்தப் பட்டணத்தில் இரண்டு இருப்புப்பாதை ஸ்தானங்களிருக்கின்றன. ஜனத்தொகையில் இது ராசதானியில் மூன்றாவது பட்டணம். இது சுருட்டுக்கும் நகைக்கும் பேர்போனது. திருச்சினுப்பள்ளி ஒருகாலத்தில் மதுரையில் அரசாண்ட நாய்க்க ராஜாக்களின் ராசதானியாயிருந்தது. பிற்பாடு ஆறுகாட்டு நவாபுகள் இதைப் பிடித்துக்கொண்டார்கள். இது அநேகந்தரம் முற்றிக்கை போடப்பட்டிருக்கிறது. திருச்சினுப்பள்ளியிலிருந்து இரண்டுமைல் தூரத்தில் காவேரியாறு இரண்டு கிளைகளாகப் பிரிவதினால் உண்டாகும் ஸ்ரீரங்கம் என்னும் தீவு இருக்கிறது. இது இந்தியாவிலுள்ள பேர்போன புண்ணிய ஸ்தலங்களில் ஒன்று.

## நெல்லூர் ஜில்லா

எல்லைகள்.—வடக்கே குண்டூர் ஜில்லாவும், கிழக்கே வங்காள விரிகுடாவும், தெற்கே செங்கற்பட்டு, வட ஆறுகாடு ஜில்லாக்களும், மேற்கே கடப்பை, கர்னூல் ஜில்லாக்களும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 8,761 சதுரமைல். இது செங்கற்பட்டு ஜில்லாவைப்போல மூன்று மடங்கு விஸ்தீரணமுள்ளது. இந்த ஜில்லா 12 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. தெற்கே வேங்கடகிரி ராஜாவின் பெரிய ஜமீன் இருக்கிறது.

இயற்கையமைப்பு.—இந்த ஜில்லா கிழக்குத்தொடர்ச்சி மலைகளுக்கும் கடலுக்கும் இடையிலுள்ள சமமான துண்டு நிலம். இதில் சில தாழ்ந்த குன்றுகள் இருக்கின்றன. இவ்விடத்திலிருக்கும் கிழக்குத்தொடர்ச்சி மலைகளுக்கு வேலிகோண்டா மலைகள் என்று பெயர். இம்மலைத்தொடர் இந்த ஜில்லாவுக்கும் கர்னூல், கடப்பை ஜில்லாக்களுக்கும் மத்தியிலிருக்கிறது. மைசூரில் உற்பத்தியாகி ஓடிவருகிற வட பெண்ணை ஆறுதான் இந்த ஜில்லாவின் முக்கிய ஆறு. இந்த ஜில்லா பொதுவாய்க் கற்பாங்கான நிலமாதலால் இதில் விளைவு சொற்பம்.

2,000 அடிமுதல் 3,000 அடிவரை உயரமான கிழக்குத்தொடர்ச்சிமலைகள் தாழ்ந்த மரங்களுள்ள காடாயிருக்கிறது. இதின் மிகவும் உயர்ந்த சிகரமாகிய உதயகிரி பிரதானமான மலைத்தொடருக்குக் கொஞ்சத் தூரத்திலிருக்கிறது. பெண்ணையாற்றுக்கு இரண்டாவதான சுவர்ணமுகியாறு இந்த ஜில்லாவின் தென்பாகம் வழியாய் ஓடுகிறது. குண்டலகாமா ஆறு கர்னூலில் உற்பத்தியாகி இந்த ஜில்லாவின் வட அந்தம் வழியாய் ஓடுகிறது.

சீதோஷ்ணஸ்திதி.—இந்த ஜில்லா வறட்சியான இடமாயிருந்தாலும் சுகத்துக்கேற்றது. வடகிழக்கு, தென்மேற்குக் காற்று அடிக்கும்போது இந்த ஜில்லாவில் மழை பெய்யும். ஒரு வருஷத்தில் பெய்யும் மழை ஏறக்குறைய 36 அங்குலம்.

ஜனங்கள்.–1901-ம் வருஷத்து ஜனத்தொகை 1,496,987. இவர்களில் அநேகர் இந்துக்கள். மகமதியர் பதினெட்டில்

ஒருபங்கு. கிறிஸ்தவர்கள் இருபத்தெட்டில் ஒருபங்கு. இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை தெலுங்கு.

ஏனுதிகள் என்ற ஒரு காட்டு ஜாதியார் பழவேற்காட்டேரிக்கும் கடலுக்கும் இடையிலுள்ள மணற்பாங்கான பூமியாகிய ஸ்ரீஹரிக்கோட்டையில் விசேஷமாய் வசிக்கிறார்கள். லம்பானியர் என்ற ஒரு சிறு ஜாதியார் ஒருவிதமான மகராஷ்டிரபாஷை பேசுகிறார்கள்.

**விளைபொருட்கள்.**—சோளமும், நெல்லும் இந்த ஜில்லாவின் முக்கியமான விளைபொருட்கள். வரகு, கேழ்வரகு, கம்பு, எள்ளு ஆகிய இவைகளும் பயிராகின்றன. அவுரி இந்த ஜில்லாவில் ஏராளமாய் விளைகிறது. பருத்தி விளைவும் அதிகம். சென்னபட்டணத்தில் செலவாகிற விறகு முக்கியமாய் நெல்லூர் ஜில்லாவிலிருந்துதான் வருகிறது.

இந்த ஜில்லா நேர்த்தியான ஆடுமாடுகளுக்குப் பேர் போனது.

**கைத்தொழில்கள்.**—இந்த ஜில்லாவில் நீலம் அதிகமாய்ச் செய்கிறார்கள். கடற்கரையில் உப்பு விளைவிக்கிறார்கள். நெசவுதொழிலும் நடக்கிறது.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.** — சென்னை இருப்புப் பாதையிலிருக்கும் ரேணிகுண்டாவிலிருந்து நெல்லூருக்கு ஒரு கிளைப்பாதை போகிறது. தென் மகராஷ்டிர இருப்புப் பாதை இந்த ஜில்லாவின வடமேற்கு மூலை வழியாய்ச் செல்லுகிறது. கீழ்கரை இருப்புப்பாதை இந்த ஜில்லாவின் வழியாய் வடக்கிலிருந்து தெற்கே போகிறது. கடற்கரையோரமாய் பக்கிங்காம் கால்வாய் செல்லுகிறது.

**பட்டணங்கள்.** — பெண்ணையாற்றின் கரையிலிருக்கும் நெல்லூர் இந்த ஜில்லாவின் முக்கியமான பட்டணம். இது இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் பெரியது. இதில் கலெக்டர் துரை வசிக்கிறார். இது ஓர் காலத்தில் பருத்தி வஸ்திரங்களுக்குப் பேர்போனது. இந்த ஜில்லாவின் தென்மேற்கே வேங்கடகிரி இருக்கிறது.

நெல்லூரில் நீர்ப்பாய்ச்சலுக்காகப் பெண்ணையாற்றின் குறுக்கே ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது.

## குண்டூர் ஜில்லா

**எல்லைகள்.**— வடக்கே நைஜாம் ராச்சியம், கிருஷ்ணு ஜில்லா; கிழக்கே வங்காளவிரிகுடா; தெற்கே நெல்லூர் ஜில்லா; மேற்கே கர்னூல் ஜில்லா, நைஜாம் ராச்சியம். இந்த ஜில்லாவின் விஸ்தீரணம் 5,734 சதுரமைல். இதில் குண்டூர், சாத்தனப்பள்ளி, பால்நாடு, வேனுகொண்டா, நரசரப்பேட்டை, வங்கவோல், பாப்பற்லா, தென்னுலி என்ற எட்டு தாலுகாக்கள் உண்டு.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லாவின் மேற்குப்பாகத்தில் சில தாழ்ந்த குன்றுகளிருக்கின்றன. இந்த ஜில்லாவுக்கும் கிருஷ்ணு ஜில்லாவுக்கும் இடையே கிருஷ்ணுநதி ஓடுகின்றது. கடற்கரை நெடுக அங்குமிங்கும் மணற்குவியல்கள் இருக்கின்றன. இந்த ஜில்லாவில் பெரிய ஆறுகளில்லை. குண்டலகாமா என்ற சிற்ருறு நல்லமலைக்கும் வேலுமலைக்கும் நடுவே உற்பத்தியாகி இந்த ஜில்லாவின் வழியாயோடி வங்கவோலுக்கு வடக்கே சங்கமமாகின்றது. கிருஷ்ணுநதியின் ஜலம் இந்த ஜில்லாவுக்கு ஏராளமான கால்வாய்களின் மூலமாய்க் கொண்டுவரப்பட்டு இதைச் செழிப்பிக்கின்றது.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ஜில்லா சற்றேறக்குறைய நெல்லூர் ஜில்லாவைப்போல் சுகத்துக்கேற்ற இடம். ஜல சௌக்கியத்தால் உஷ்ணம் ஒருவாறு தணிந்துபோவதால் சுரம் முதலிய பிணி உண்டாகமாட்டாது.

**ஜனங்கள்.**—இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 1,491,000. இதில் பெரும்பான்மையோர் இந்துக்களும் மற்றவர்கள் கிறிஸ்தவர்களும் சிலர் மகமதியருமாயிருக்கிருர்கள். லம்பாடியர் என்ற நாடோடிகளான ஜாதியார் இங்கே வசிக்கிருர்கள். இந்த ஜில்லாவில் சாதாரணமாய்ப் பேசப்படும் பாஷை தெலுங்கு.

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவில் நெல் விசேஷமாய் விளைகின்றது. காட்டுப் பயிர்களில் சோளம் அபரிமிதமாய் விளையும். பருத்தி, அவுரி, ஆமணக்கு, எள்ளு முதலானவையும் பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—வேளாண்மை செய்தலும் நெசவு நெய்தலுமே ஜனங்களின் விசேஷித்த தொழில்கள். பருத்தி யந்திரசாலை முதலியவற்றில் சிலர் வேலை செய்கிறார்கள். தானிய வர்த்தகங்களும் ஆங்காங்கு நடக்கின்றன.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.**—இந்த ஜில்லாவின் மத்தியவழியாய் தென் மகராஷ்டிர இருப்புப்பாதையும், கடற்கரை வழியாய்க் கிழக்குக்கரை இருப்புப்பாதையும் கிருஷ்ணா ஜில்லாவிலிருக்கும் பெஜவாடா சந்திக்குப் (Junction) போகின்றன. கிருஷ்ணா நதியின் கால்வாய்கள் இந்த ஜில்லா எங்கும் செல்லுகின்றமையால் அவைகளின் மூலமாயும் ஜனங்கள் போக்குவரவு செய்கிறார்கள்


**பட்டணங்கள்.**— கிருஷ்ணாநதியின் தென்பக்கத்திலுள்ள குண்டூர் இந்த ஜில்லாவின் முக்கிய பட்டணம். இங்கே கலெக்டர் துரை வசிக்கிறார். இது ஒரு பெரிய வர்த்தக ஸ்தலம். இங்கே சில பருத்தி யந்திரசாலைகளுண்டு. வங்கவோல் (Ongole) இந்த ஜில்லாவின் தெற்கே இருக்கின்றது. இங்கே சப்கலெக்டர் துரை வசிக்கிறார். நைஜாம் பட்டணம் ஓர் சிறந்த துறைமுகம். மங்களகிரி, கோடப்பகோண்டா இவ்விரண்டும் புண்ணிய ஸ்தலங்கள் என்று கொண்டாடப்படுகின்றன. சீரளம், வேடபாளையம் என்னுமிடங்களில் நேர்த்தியான துணி நெசவாகிறது.

## கிருஷ்ணா ஜில்லா

**எல்லைகள்.**—வடகிழக்கே கோதாவரி ஜில்லாவும், தென்கிழக்கே கடலும், தென்மேற்கே குண்டூர் ஜில்லாவும், வடமேற்கே நைஜாம் ராச்சியமும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 5,899 சதுரமைல். இந்த ஜில்லாவில் 11 தாலுகாக்களிருக்கின்றன.

**இயற்கையமைப்பு.**— இந்த ஜில்லா சாதாரணமாய்ச் சமபூமியாயிருக்கிறது. ஆனால் மேற்குப்பாகத்தில் சில தாழ்ந்த குன்றுகளிருக்கின்றன. கடற்கரை முழுவதிலும் பெரிய மணல் மேடுகள் அங்குமிங்கு மிருக்கின்றன. இம்மேடுகள் அநேக இடங்களில் ஒருமைல் அகலமும் 30 அல்லது 40 அடி உயரமுமாயிருக்கின்றன. இந்த ஜில்லாவின் வழியாய்

கிருஷ்ணாநதி ஓடுகிறது. பெஜவாடாவுக்குச் சமீபத்தில் இவ்வாற்றில் ஒரு அணை கட்டியிருக்கிறது. இதினிருபக்கங்களிலும் ஆற்றின் தண்ணீர் அநேகமைல் தூரத்திற்குக் கால்வாய்கள் வழியாய் ஓடி பயிர் நிலங்களுக்குப் பாய்கிறது.




கிருஷ்ணாநதி கடலில் விழுமுன் இரண்டாய்ப் பிரியும் பிரிவுகளுக்கு இடையிலிருக்கும் முக்கோணவடிவமான பூமி பெஜவாடாவிலிருந்து கடல்வரைக்கு மிருக்கிறது. இந்த நிலத்தை இயற்கையாய் அமைத்திருக்கும் அநேக கால்வாய்கள் நீர்ப்பாய்ச்சுகின்றன. ஆக இந்த ஜில்லாவின் அதிகமான பாகம் நீர்ப்பாய்ச்சலுள்ளதும் செழிப்பானதுமாயிருக்கிறது.

குண்டலகாமா என்னும் சிற்றாறு தெற்குமுகமாய் நெல்லூருக்குள் ஓடுகிறது. கோல்லேருஏரி (The Colair Lake) இந்த ஜில்லாவின் நடுமத்தியில் இருக்கின்றது. இதின் பாதித்

தூரம் நீரும் மறுபாதி சேறுமாயிருக்கிறது. இது கோடை காலத்தில் மிகவும் சிறிதாக வற்றிப்போகும். இதில் அநேக சிறு தீவுகளிருக்கின்றன. அந்தத் தீவுகளில் சிலவற்றில் ஜனங்கள் குடியேறிப் பயிர் செய்கிறார்கள்.

**ஜனங்கள்.**—இந்த ஜில்லாவின் ஜனத்தொகை 1,767,000. இந்த ஜில்லாவிலும் இதிலிருந்து குண்டூர் ஜில்லாவுக்குப் பிரித்துக்கொடுத்த தாலுகாக்களிலும், சென்ற 10 வருஷங்களுக்குள் ராசதானியிலுள்ள மற்ற எந்த ஜில்லாவைப்பார்க்கிலும் ஜனத்தொகை மிகவும் ஏராளமாய்ப் பெருகியிருக்கிறது. மகமதியர் பதினாறி லொருபங்கு. கிறிஸ்தவர்கள் இருபத்தொன்றில் ஒருபங்கு. மீதியானவர்கள் இந்துக்கள். இந்த ஜில்லாவில் எங்கும் வழங்குகிற பாஷை தெலுங்கு.

**விளைபொருட்கள்.**— இந்த ஜில்லா மிகவும் செழிப்புள்ள பூமி. ஆகையால் எங்கும் ஜனங்கள் நன்றாய்ப் பயிர் செய்கிறார்கள். முக்கியமான பயிர் நெல். ஆனால் மற்றத் தானியங்களும், பருத்தி, அவுரி, கொட்டைமுத்து, புகையிலை ஆகிய இவைகளும் பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—பயிர்செய்யுந் தொழில்தவிர ஜனங்களுடைய முக்கியமான தொழில் துணிநெசவு.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.**— பெஜவாடா இப்பொழுது அநேக இருப்புப்பாதைகள் சந்திக்குமிடமா யிருக்கிறது. இவ்விடத்தில் இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லுகிற கிழக்குக்கரை இருப்புப்பாதையைக் குண்டக்கல்லிலிருந்து வருகிற தென் மகராஷ்டிர இருப்புப்பாதையும் ஐதராபாத்திலிருந்து வருகிற நைஜாம்ராச்சிய இருப்புப்பாதையும் சந்திக்கின்றன. மேலும் பெஜவாடாவிலிருந்து மசிலிபட்டணத்திற்கு ஒரு கிளைப்பாதை ஓடுகிறது. இந்த ஜில்லாவில் படவுகள் போகத்தக்க கால்வாய்களின் நீளம் 172 மைல். இந்த ஜில்லாவின் நதிகளில் படவுகள் செல்லக்கூடிய தூரம் இதிலுமதிகம்.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானமாகிய மசிலிபட்டணம் (மீன்பட்டணம்) முக்கியமான துறைமுகம். இதற்கு பந்தர் (துறைமுகம்) என்ற இன்னொரு பேருமுண்டு. சென்னபட்டணத்தை ஸ்தாபிக்கிறதற்கு முன்னே 1622-ல்

இங்கிலிஷ்காரர் இவ்விடத்தில் குடியேறினார்கள். முற்காலத்தில் இப்பட்டணம் சாயத்துணிகளுக்குப் பேர்போனது. இரண்டுமுறை புசல் காற்றலைகளினால் இது மிகவும் சேதமடைந்திருக்கிறது.

ஏலூர் வடசர்க்காரின் பூர்விக ராசதானி. இது இரத்தினக் கம்பளங்களுக்குப் பேர்போனது. வடக்கே இருக்கும் **நரசாபுரம்** ஒருகாலத்தில் துறைமுகப்பட்டணமாயிருந்தது. ஆனால் கோதாவரி ஆறு கொண்டுவருகிற மணல் இவ்விடத்தில் அதிகமாய்க் குவிந்துபோனதினால் இது இப்போது கடற்கரையிலில்லை.

**பெஜவாடா** இந்த ஜில்லாவில் மிகவும் முக்கிய பட்டணம். அணைகட்டுகிறதற்குமுன் இது ஒரு கிராமமாய்த்தான் இருந்தது. கிருஷ்ணா நதியின் குறுக்கே அணைகட்டினதின் மூலமாயும் பிற்பாடு இவ்விடத்தில் சந்திக்கிற நாலு இருப்புப்பாதைகள் போட்டதின் மூலமாயும் இது ஒரு பெரிய முக்கியமான வியாபார ஸ்தலமாகிவிட்டது. **ஜக்கியபேட்டை** மசிலிபட்டணத்திலிருந்து ஐதராபாத்துக்குப் போகிற இருப்புப்பாதையில் நெசவுதொழில் நடக்கிற வியாபார ஸ்தலம்.

## கடப்பை ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே கர்னூல் ஜில்லாவும், கிழக்கே நெல்லூர் ஜில்லாவும், தெற்கே வட ஆறுகாடு ஜில்லாவும், மைசூர் ராச்சியமும், மேற்கே அனந்தப்புரம் ஜில்லாவும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 8,723 சதுரமைல். இதில் 11 தாலுகாக்களிருக்கின்றன.

**இயற்கையமைப்பு.**—இதற்கும் நெல்லூர் ஜில்லாவுக்கும் மத்தியில் கிழக்குத்தொடர்ச்சி மலைகளிருப்பதால் இதின் கீழ்ப்பாகமும், மலைகள் அடர்ந்திருக்கிறது. தென்கீழ்ப்பாகமும் குன்றுகளடர்ந்தது. அங்கே திருப்பதிக்குச் சமீபத்திலிருந்து வடமேற்குத் திசையாய்ப் **பால்கொண்டாமலைகள்** (பால்கொண்டா=பால்மலை.) இருக்கின்றன. இதில் ஆடுமாடுகளுக்கு நல்ல மேய்ச்சலிருப்பதால் இந்தப் பேர் வந்தது. இந்தப் பால்கொண்டா மலைகளின் வட அந்தத்தி

லிருந்து சேஷாசலம்மலைகள் பிரிந்து மேற்குத்திசையை நோக்கிச் செல்லுகின்றன. வடபாகமும், தென்மேற்குப் பாகமுமே குன்றுகளற்ற சமபூமி.

இந்த ஜில்லாவில் மிகவும் பெரிய ஆறு வடபெண்ணை. இதற்கு பினாகினி என்றும் பெயர். இது தென்கிழக்கு முகமாய் இதினூடே ஓடுகிறது. தெற்கேயிருந்து பாபாக்கினியும் (பாபாக்கினி=பாவநாசகன்; பாபம்=பாவம்; அக்கினி=நெருப்பு.), அனந்தபுரம் ஜில்லாவிலிருந்தும் சித்திராவதியும் இதினூடே வந்து சேருகின்றன.

**சீதோஷ்ணஸ்திதி.**—மார்ச்சுமாதமுதல் ஜூன்மாதம்வரை இந்த ஜில்லாவில் உஷ்ணம் அதிகம். ஒரு வருஷம் முழுவதிலும் பெய்கிற மழை ஏறக்குறைய 28 அங்குலம்தான். இந்த ஜில்லாவின் அநேக இடங்கள் சுகவீனத்துக்கும் விசேஷமாய்க் கொடிய சுரத்துக்கும் ஏதுவானவை.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 1,291,267. இந்த ஜில்லா விஸ்தீரணத்தில் ராசதானியில் மூன்றாவதாயிருக்கிறது. ஆனால் ஜனத்தொகையில் 19 ஆவதாய்த்தானிருக்கிறது. இவர்களிலநேகர் இந்துக்கள். மகமதியர் பத்திலொருபங்கு. கிறிஸ்தவர்கள் அறுபத்தைந்திலொரு பங்கு. இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை தெலுங்கு. இவ்விடத்திலுள்ள நாகரீகமற்ற ஒரு காட்டு ஜாதியாருக்கு ஏனாதிகள் என்று பெயர். இவர்கள் ஆடு திருடிகளாகையால் இடையர்கள் இவர்களுக்கு மிகவும் பயப்படுவார்கள்.

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவில் பருத்தி விளையக்கூடிய கரிசல் நிலம் அதிகமாயிருக்கிறதாகையால் பருத்தி ஏராளமாய்ப் பயிராகிறது. ஜனங்களுடைய முக்கிய உணவாகிய தினைமுதலிய தானியங்கள் முக்கியமான பயிர்கள். நீர்ப்பாய்ச்சலுள்ள நிலங்களில் நெல் விளைகிறது. அவுரி, கரும்பு, கொட்டைமுத்து ஆகிய இவைகளும் விசேஷமாய்ப் பயிராகின்றன. பெரிய உத்திரங்களுக்கு உபயோகப்படக்கூடிய விஸ்தாரமான காடுகள் இந்த ஜில்லாவில் அநேகமுண்டு.

**கைத்தொழில்கள்.**—துணிநெசவு, சர்க்கரை, நீலம் ஆகிய இவைகள் முக்கியமாய்ச் செய்கிறார்கள்.

**இருப்புப்பாதைகளும், கால்வாய்களும்.**—சென்னை இருப்புப் பாதையின் வடமேற்குக் கிளை இந்த ஜில்லாவினூடே வட மேற்கு முகமாய்ப் போகிறது. தென்னிந்திய இருப்புப்பா தையின் விழுப்புரம் குண்டக்கல் கிளை தெற்கேயிருந்து வட மேற்காய்ச் செல்லுகிறது. கடப்பை, கர்னூல் கால்வாய் கடப்பை பட்டணத்துக்குச் சமீபத்திலிருந்து அதின் வட எல்லைவரையிற் செல்லுகிறது. ஆனால் கோடைகாலத்தில் இதினால் பிரயோஜனமில்லை. மேலும் இது அதிகமான வியாதியையும் உண்டாக்குகிறது.

**பட்டணங்கள்.**—சென்னபட்டணத்துக்கு 161 மைலுக்கப் பால் சென்னை இருப்புப்பாதையிலிருக்கும் முக்கிய பட்டண மாகிய **கடப்பை** இந்த ஜில்லாவின் மத்தியிலிருக்கிறது. இது தாழ்ந்ததும் உஷ்ணமுமான பூமி. பருத்தியும் நீலக் கட்டியும் இவ்விடத்திலுள்ள முக்கியமான வியாபாரச் சரக் குகள். தெற்கே கிழக்குத்தொடர்ச்சி மலைகளிலிருக்கும் **மதனபல்லி** சப்கலெக்டர் வசிக்குமிடம். இது கடப்பை யைப்பார்க்கிலும் குளிர்ச்சியானதும் அதிக சுகத்துக்கேற் றதுமான இடம். புல்லம்பேட்டை என்னுமிடத்தில் மிகவும் நாணயமான வஸ்திரம் நெய்யப்படுகிறது.

## கர்னூல் ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே நைஜாம் ராச்சியமும், குண்டூர் ஜில்லாவும், கிழக்கே நெல்லூர், குண்டூர் ஜில்லாக்களும், தெற்கே கடப்பை, அனந்தபுரம் ஜில்லாக்களும், மேற்கே பல்லாரி ஜில்லாவும் இதின் எல்லைகள். துங்கபத்திரா, கிருஷ்ணா நதிகள் இந்த ஜில்லாவுக்கும் நைஜாம் ராச்சியத் திற்கும் மத்திலிருக்கின்றன. இதின் விஸ்தீரணம் 757 சதுர மைல். இந்த ஜில்லா 8 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட் டிருக்கிறது. தெற்கே **பங்கனபள்ளி** ஜமீனிருக்கிறது,

**இயற்கையமைப்பு.**—நல்லமலைகள் (கறுப்புமலைகள்), **எர்ர மலைகள்** (சிவப்பு மலைகள்) என்ற இரண்டு மலைத்தொடர் இந்த ஜில்லாவின் மத்தியவழியாய் வடக்கும் தெற்குமாய்ச் சென்று இந்த ஜில்லாவை மூன்று பிரிவுகளாய்ப் பிரிக்கின் றன. கிழக்கேயிருக்கும் பிரிவு **கம்பம் பள்ளத்தாக்கு.** இதை

நெல்லூரிலிருந்து பிரிக்கிற கிழக்குத்தொடர்ச்சிமலைகளின் பாகத்திற்கு வேலிகோண்டா மலைகளென்று பெயர். இந்தப் பள்ளத்தாக்கில் குண்டலகாமா ஆற்றில் அணைகட்டி அமைத்திருக்கும் கம்பம் ஏரி என்னும் ஒரு பெரிய ஏரியிருக்கிறது. மத்திய பள்ளத்தாக்கில் கர்னூல், கடப்பை கால்வாய் இருக்கிறது. மேற்குப்பாகத்தில் அங்குமிங்கும் கற்பாறையான குன்றுகளிருக்கின்றன. கர்னூலுக்குச் சமீபத்தில் துங்கபத்திராநதியில் விழுகிற ஹிந்திரி ஆறு இப்பிரிவை நீர்ப் பாய்ச்சுகிறது. இப்பிரிவு வடக்குமுகமாய்ச் சரிந்திருக்கிறது. கர்னூல், பல்லாரி, அனந்தபுரமாகிய வடக்கிலுள்ள உள்நாட்டு ஜில்லாக்கள் உஷ்ணமும் வறட்சியுமானவை. கிழக்கே கடற்கரை ஜில்லாக்களில் பெய்யும் மழையில் பாதிதான் இவ்விடங்களில் பெய்கிறது. இவ்விடத்தில் தண்ணீர்ப் பஞ்சம் சில சமயங்களில் மிகவும் கொடிதாயிருக்கின்றன.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்தில் ஜனத்தொகை 872,055. ஏறக்குறைய ஏழிலொருபங்கு மகமதியர். கிறிஸ்தவர்கள் இருபதிலொருபங்கு. மீதியானவர்கள் இந்துக்கள். செஞ்சூஸ் என்ற காட்டு ஜாதியார் நல்லமலைகளில் வசிக்கிறார்கள். இந்த ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் மிகவும் ஜனநெருக்கமில்லாத ஜில்லா கர்னூல். இவ்விடத்தில் ஒரு சதுரமைலுக்கு 115 பேர்தான் குடியிருக்கிறார்கள். இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை தெலுங்கு.

**விளைவு.**—இந்த ஜில்லாவில் முக்கியமான பயிர் சோளம். மற்ற தினை தானியங்கள், பயறுகள், பருத்தி, அவுரி ஆகிய இவைகளும் பயிராகின்றன. இந்த ஜில்லாவில் நன்செய் பயிர் கொஞ்சம். கர்னூல் கடப்பை கால்வாயினால் இன்னும் அதிக பிரயோஜனம் ஆகவில்லை. காடுகளில் விலையுயர்ந்த மரங்கள் ஏராளமாயிருக்கின்றன.

**கைத்தொழில்கள்.**—பருத்தித் துணி நெசவு, நீலக்கட்டி செய்தல் ஆகிய இவைகள் முக்கியமான கைத்தொழில்.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.** — தென் மகராஷ்டிர இருப்புப்பாதை இந்த ஜில்லாவின் வழியாய் மேற்கிலிருந்து கிழக்கே செல்லுகிறது. இந்த ஜில்லாவின் தென்மேற்கு மூலைக்கு வெளியே குண்டக்கல் என்னுமிடத்தில் இது

சென்னை இருப்புப்பாதையின் வடமேற்குக் கிளையைக் கடந்து செல்லுகிறது. கர்னூல் கடப்பைக் கால்வாய் மத்திய பள்ளத்தாக்குவழியாய் 140 மைல் தூரத்திற்குச் செல்லுகிறது. இது படவுகள் போக்குவரவுக்கும் நீர்ப்பாய்ச்சலுக்கும் உபயோகமாயிருக்கிறது.

**பட்டணங்கள்.**—ஹிந்திரி, துங்கபத்திரா ஆறுகள் சந்திக்குமிடத்திலிருக்கிற கர்னூல் முக்கியமான பட்டணம். இது பட்டாணிகள் ஆளுகையில் வெகுகால மிருந்தபடியால் இதிலுள்ள ஜனங்களில் பாதிப்பேர் மகமதியர். ஏறக்குறைய இந்த ஜில்லாவின் மத்தியில் இருப்புப்பாதைமேலிருக்கிற நந்தியால் விஸ்தீரணத்தில் கர்னூலுக்கடுத்தது. இப்பட்டணம் நாளுக்குநாள் விருத்தியாகிக்கொண்டே வருகிறது. கம்பம் கிழக்கே பெரிய ஏரிக்கருகே இருப்புப்பாதையிலிருக்கிறது. பங்கனப்பல்லி முன்பு நவாப் அரசனால் ஆளப்பட்டது.


## கோதாவரி ஜில்லா

**எல்லைகள்.**—வடகிழக்கே விசாகபட்டணம் ஜில்லாவும், வடமேற்கே மத்திய மாகாணமும், தென்கிழக்கே கடலும், தென்மேற்கே கிருஷ்ண ஜில்லாவும், மேற்கே நைஜாம் ராச்சியமும் இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 6,222 சதுர மைல்.

கிருஷ்ண ஜில்லாவைப்பார்க்கிலும் இந்த ஜில்லா விஸ்தீரணத்தில் அதிகப்பட்டது. இந்த ஜில்லா 14 தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் பிட்டாபுரம் ஜமீனும், ரம்பாமலைகளென்ற காடடர்ந்த பூமியும், பிரான்சுக்காரர்களுடைய சிறு குடியேற்றமாகிய ஏனம் என்ற ஒரு சிறு பட்டணமு மிருக்கின்றன. வடக்கேயுள்ள குன்றுகளடர்ந்த பாகத்திற்குக் கோதாவரி ஏஜென்சி என்று பெயர். இது இந்த ஜில்லாவில் ஐந்தில் இரண்டுபங்கு விஸ்தீரணமுடையதாயிருக்கிறது. ஆனாலும் ஜனத்தொகையில் பதின்மூன்றிலொருபங்கு ஜனங்கள்தான் இவ்விடத்தில் வசிக்கிறார்கள்.

**இயற்கையமைப்பு.**—கோதாவரி ஆறு இந்த ஜில்லாவை இரண்டு பாகமாய்ப் பிரிக்கிறது. வடமேற்கே இந்த ஜில்லா குன்றடர்ந்தது. இப்பாகத்திலிருக்கும் கிழக்குத்தொடர்ச்சி

மலைகளுக்கு பாபிகோண்டாமலைகளென்று பெயர். கோதாவரி ஆறு உற்பத்தியாகிக் குன்றுகள் வழியாய்ப் பாய்ந்தோடுகிற இடங்களில் அதினுடைய அகலம் 200 கெஜந்தான். ஆனல் போகப்போக இதினுடைய அகலம் 3 மைல் ஆகிறது. சமுத்திரத்துக்கு 30 மைல் தூரத்தில் உள்நாட்டிலிருக்கும் தவளேஸ்வரம் என்னும் ஊரில் இது இரண்டு முக்




கோதாவரி கஞ்சம் ஜி

கிய கிளைகளாகப் பிரிந்து பின்பு ஏழு முகத்துவாரங்கள் வழியாய்க் கடலில் விழுகிறது. இந்த இரண்டு பிரிவுகளுக்கும் இடையிலுள்ள நிலம் சமபூமியாயும் சில இடங்களில் சேற்று நிலமாயுமிருக்கிறது. இது ஒரு விஸ்தாரமான நெல் விளையுமிடம். இடை இடையே கிராமங்களும், தென்னந்தோப்புகளும், மாந்தோப்புகளும் உண்டு. லங்கைகளென்ற அநேகந் தீவுகள் கோதாவரியாற்றின் மத்தியிலிருக்கின்றன. இவைகளில் புகையிலை பயிராகிறது. அந்தப் புகையிலையிலிருந்து செய்யப்படும் சுருட்டுக்கு லங்கைச் சுருட்டுகளென்று பெயர்.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 1,466,000. இந்த ஜில்லாவின் குன்றடர்ந்த பாகத்தில் ஜனங்கள் ஒருவருக்கொருவர் வெகுதூரத்தில் குடியிருக்கிறார்கள். ஆனால் இந்த ராசதானியில் சென்னபட்டணத்திற்கு வடக்கிலிருக்கும் மற்ற எந்தப் பாகத்தைப்பார்க்கிலும் கோதாவரியாற்றின் கழிமுகத்தெதிர்நிலத்தில் ஜனங்கள் நெருக்கமாய்க் குடியிருக்கிறார்கள். இவர்களில் ஏறக்குறைய எல்லாரும் இந்துக்கள். நூற்றில் இரண்டுபேர் மகமதியர். கிறிஸ்தவர்கள் ஆயிரத்தில் ஏழுபேர். இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை தெலுங்கு.

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கியமான பயிர் நெல். ஆனால் சோளம், கேழ்வரகு அல்லது கொள் முதலியவையும் மிகுதியாய்ப் பயிராகின்றன. பருத்தி, புகையிலை, கரும்பு, அவுரி முதலியவைகளும் இந்த ஜில்லாவில் விளைகின்றன.

**கைத்தொழில்கள்**—. பருத்தித்துணி நெசவும், இரத்தினக் கம்பளங்கள் செய்வதும் முக்கியமான கைத்தொழில்.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.**—கீழ்கரை இருப்புப்பாதை இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லுகிறது. இந்த ஜில்லாவில் அநேக நல்ல தெருக்களு மிருக்கின்றன. 800 மைல் தூரத்துக்குப் படவுகள் போக்குவரவு செய்யக்கூடிய ஆறுகளும் கால்வாய்களு மிருக்கின்றன.

**பட்டணங்கள்.**—**காக்கிநாடா** (காகதேசம்) என்னும் துறைமுகம் முக்கியமான பட்டணம். இவ்விடத்திலிருந்து விசேஷமாய்ப் பருத்தி ஏற்றுமதியாகிறது. இதிலிருந்து உள்நாட்டிலுள்ள அநேக இடங்களுக்குக் கால்வாய்கள் மூலமாய்ப் போக்குவரவு நடக்கிறது. கோதாவரியாற்றின் ஒரு முகத்துவாரத்திலிருக்கும் **கோரங்கி** டச்சுக்காரருடைய ஆதிகாலத்துக் குடியேற்றம். ஒருகாலத்தில் இது ஒரு பெரிய துறைமுகப்பட்டணமாயிருந்தது. ஆனால் இப்போதோ கோதாவரி ஆறு கொண்டுவருகிற மண்ணினால் துறைமுகம் மேடாகிவிட்டதால் கப்பல்கள் இதற்குள்ளே போகிறதற்கு ஏதுவில்லை.

கடற்கரையிலிருந்து 30 மைல் தூரத்தில் உள்நாட்டில் கோதாவரி ஆற்றின் கரையிலிருக்கும் ராஜமஹேந்திரபுரம் இந்த ஜில்லா நீதிபதி வசிக்குமிடம். அங்கே ராசாங்க கலாசாலை ஒன்றிருக்கிறது. ராஜமஹேந்திரபுரத்திற்கு 4 மைலுக்குத் தெற்கேயிருக்கும் தவளேஸ்வரம் என்னுமிடத்தில் ஒரு பெரிய அணை கோதாவரியாற்றின் குறுக்கே கட்டியிருக்கிறது. இவ்விடத்தில் நீர்ப்பாய்ச்சலுக்காகச் செய்திருக்கிற ஏற்பாடுகள் ஜில்லாவின் அதிகமான பாகத்தைச் செழிப்பாக்குகின்றன.

## விசாகபட்டணம் ஜில்லா

**எல்லைகள்.**—வடகிழக்கே கஞ்சம்ஜில்லாவும்,வடமேற்கே மத்தியமாகாணமும், தென்கிழக்கே வங்காளவிரிகுடாவும், தென்மேற்கே கோதாவரி ஜில்லாவும் இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 17,222 சதுரமைல். சென்னை ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் இது மிகவும் பெரியது. மேற்கேயுள்ள ஜயபுரம் ஜமீன் இந்த ஜில்லாவில் பாதிக்கு மேற்பட்டது. போப்பில', விஜயநகரம் என்னும் இரண்டு ஜமீன்கள் கணவாய் மலைகளுக்குக் கீழே யிருக்கின்றன. இந்த ஜில்லாவில் 3 தாலுகாக்களிருக்கின்றன. மேற்கிலும் வடக்கிலுமுள்ள மலைத்தேச முழுவதும் சேர்ந்த பிரதேசத்திற்கு விசாகபட்டண ஏஜேன்சி என்று பெயர். ஜில்லாவின் ஏறக்குறைய முக்கால் பாகம் பூமி இதிலிருக்கிறது. ஆனால் இதினுடைய ஜனத்தொகை ஜில்லாவின் ஜனத்தொகையில் கால்வாசிதான்.

**இயற்கையமைப்பு**—கிழக்குத்தொடர்ச்சி மலைகள் இந்த ஜில்லாவைப் பெரிதும் சிறிதுமாக இரண்டு பாகங்களாகப் பிரிக்கின்றன. இவைகளில் உள்நாட்டிலிருக்கும் பெரிய பாகம் மலையடர்ந்தது. கடற்கரையோரமாயிருக்கிற மற்றப் பாகம் சமபூமியாயிருக்கிறது. ஆனால் இப்பாகம் படிப்படியாய் உயர்ந்து காடடர்ந்த குன்றுகளாகிறது. கணவாய் மலைகளுக்குக் கிழக்கே விழும் மழை கடலுக்கு ஓடுகிறது. அம்மலைகளுக்கு மேற்கே விழும் மழை கோதாவரி ஆற்றோடு போய்ச் சேருகிறது. இம்மலைத்தொடரில் 5,000 அடி உயர

முள்ள சிகரங்களுண்டு. இம்மலைத்தொடரின் வடக்கிலுள்ள பாகத்திற்குப் பாலகோண்டா மலைகளென்று பெயர். தென் மேற்கிலிருக்கும் பாகத்திற்குக் கோலகோண்டா மலைக ளென்று பெயர். வடகடைசியில் நியாம்கிரி என்னும் ஒரு தனிமலைத் தொடரிருக்கிறது. தெற்கிலிருக்கும் முக்கிய மான நதிகள் வராகநதி, சாரதைநதி. வடக்கேயிருக்கும் நதிக்குப் பேர் நாகாவளி. வம்சதாரைநதி இந்த ஜில்லாவில் வடக்கேயுள்ள மலைகளி லுற்பத்தியாகிக் கஞ்சத்திற்குத் தெற்கே ஓடுகிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**— கடற்கரையோரத்திலிருக்கும் பூமி சுகத்திற்கேற்றது. மலைநாடுகளில்மழைகாலங்களில்காய்ச்சல் வியாதி அதிகமாயுண்டாவதினால் அவைகள் சுகத்திற்கேற்ற வைகளல்ல. வருஷத்தில் பெய்யும் மழை 45 அங்குலம்.

**ஜனங்கள்.**—ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் விஸ்தீரணத்திலும், ஜனத்தொகையிலும் இந்த ஜில்லா முத லாவதாயிருக்கிறது. 1901—ம் வருஷத்து ஜனத்தொகை 2,933,650. ஏறக்குறைய எல்லாரும் இந்துக்கள் அல்லது காட்டு ஜாதியார். ஜனத்தொகையில் நூற்றிருபதி லொரு பங்கு மகமதியர். முந்நூற்றில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள்.

கோதுக்கள், காண்டர்கள், கோயிகள் என்ற ஜனங்கள் காட்டு ஜாதியார். இவர்களின் தொகை 320,000. இவர் கள் சாதாரணமாய் வழங்கும் பாஷை தெலுங்கு. வட கிழக்கே சில பாகங்களில் ஒட்டியபாஷையும் பேசுகிறார்கள். கோதுக்கள் வேறுபாஷை பேசுகிறார்கள். முற்காலத்தில் தங்களுக்கு நல்ல தானியம் கிடைக்கும்பொருட்டு இவர்கள் பூமாதேவிக்குக் குழந்தைகளைப் பலியிட்டவர்கள். ஆனால் இங்கிலிஷ் துரைத்தனத்தார் இதை நிறுத்திவிட்டார்கள்.

**விளைபொருட்கள்.**—நெல்முதலிய தானியங்களும், கரும்பு, கொட்டைமுத்து, அவுரி, கேழ்வரகு, பருத்தி, எள்ளு ஆகிய இவைகளும் முக்கியமான விளைபொருட்கள். காட்டில் வெட்டுமரங்கள் கிடைக்கின்றன.

**கைத்தொழில்கள்.**—பருத்தித் துணி நெசவு, கொம்பினாற் செய்த ஆபரணங்கள், முள்ளம்பன்றி இறகுகளினால் செய்யும் சிறந்த பெட்டிவேலை, வெள்ளிவேலை இவைகள் முக்கியமான கைத்தொழில்கள்.

**இருப்புப்பாதை.**—கீழ்கரை இருப்புப்பாதை இந்த ஜில்லா வழியாய்ச் செல்லுகிறது. வால்தேரிலிருந்து விசாகபட்டணத்திற்கு ஒரு கிளைப்பாதை போகிறது.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானமாகிய விசாகபட்டணம் ஒரு துறைமுகம். இதில் கொஞ்சம் வியாபாரம் நடக்கிறது. பருத்தி நெசவு, தந்தம், கொம்பு, வெள்ளி, சந்தனக்கட்டை ஆகிய இவைகளினால் செய்யப்படும் விசித்திரமான வேலைப்பாடுகள் ஆகிய இவை இவ்விடத்திலுள்ள முக்கியமான கைத்தொழில். இதற்கு மூன்று மைலுக்கு வடக்கேயிருக்கும் வால்தேரில் ஐரோப்பியர் வசிக்கிறார்கள். வடகிழக்கிலிருக்கும் பீமன்பட்டணம் இந்த ஜில்லாவிலுள்ள ஒரு முக்கியமான துறைமுகம். அனகாபல்லி விசாகபட்டணத்திற்குத் தென்மேற்கே சாரதை நதியிலிருக்கிறது. விசாகபட்டணத்திற்கு வடக்கே 30 மைல் தூரத்திலிருக்கும் விஜயநகரம் ஒரு ராணுவஸ்தலம். இதில் விஜயநகர மகாராஜாவினுடைய அரமனையிருக்கிறது. விஜயநகர ஜமீன் செங்கற்பட்டு ஜில்லாவைப்பார்க்கிலும் பெரிது. இந்த ஜமீனில் நல்ல தெருக்களும், பள்ளிக்கூடங்களும், வைத்தியசாலைகளு மிருக்கின்றன. வடக்கேயுள்ள போப்பிலி பொப்பிலி ஜமீனிலுள்ள முக்கியமான பட்டணம். ஜயபுரம் ஜமீன் 9,000 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. இந்த ராசதானியில் விசாகபட்டணம் ஜில்லாவைத்தவிர மற்ற எந்த ஜில்லாவைப்பார்க்கிலும் இந்த ஜமீன் பெரியது. இதில் அதிகமான பாகம் காடாயிருப்பதால் இதின் ஜனத்தொகை சொற்பம். இந்த ஜமீனின் வடகிழக்கிலிருக்கும் ஜயபுரம் ராஜா வசிக்கு மிடம்.

## கஞ்சம் ஜில்லா

**எல்லைகள்.**—கஞ்சம் ஜில்லா இந்த ராசதானியின் வடகோடியிலிருக்கிறது. வடக்கே ஓரிசா மாகாணமும், தென்கிழக்கே வங்காள விரிகுடாவும், மேற்கே மத்திய மாகாணமும், விசாகபட்டணம் ஜில்லாவும் இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 8,372 சதுரமைல். இது விசாகபட்டணம் ஜில்லாவின் அளவின் பாதியிலுங் குறைந்தது.

இந்த ஜில்லாவில் 3 தாலுகாக்களும், அநேக ஜமீன்களு மிருக்கின்றன. ஜமீன்களில் முக்கியமானது தெற்கேயுள்ள பர்லாகிமிடி. வடக்கேயுள்ள கும்சூரில் கோதுக்கள் அதிக மாய் வசிக்கிறார்கள். இதில் காட்டு மிருகங்க ளதிகம். இந்த ஜில்லாவிலுள்ள மலைநாடுகளுக்குக் கஞ்சம் ஏஜென்சி என்று பெயர். இது ஜில்லாவில் ஐந்தில் இரண்டு பங்கு விஸ் தீரணமுள்ளது. இதின் ஜனத்தொகையோ ஆறிலொன்று.

**இயற்கையமைப்பு.**— இந்த ஜில்லாவின் மத்தியிலுள்ள கிழக்குத்தொடர்ச்சி மலைகளுக்கு மலைய மலைகளென்று (Maliahs) பெயர். இம்மலைகள் கடல்வரைக்கும் செல்லு கின்றன. இந்த ஜில்லாவின் வடபாகமும், தென்பாகமும் சிறிது இடத்தில் உயர்ந்தும் சிறிது இடத்தில் தாழ்ந்து மிருக்கும் சமபூமிகள். பேத்தகிமிடி, பர்லாகிமிடி என்னும் மலைகளின் சில சிகரங்கள் ஏறக்குறைய 5,000 அடி உயர முள்ளவை. இவைகளில் மிகவும் உயர்ந்த சிகரத்துக்கு சிங்க ராஜா என்று பெயர்.

கடற்கரையோரமாய் அநேகம் ஏரிகள் சங்கிலித் தொ டர்போலிருக்கின்றன. இந்த ஏரிகளுக்கும் கடலுக்கும் இடையிலிருக்கும் மணற்பாங்கான நிலம் ஒடுக்கமுள்ளது. சில்கா ஏரி வடகோடியி லிருக்கிறது. அதின் வடபாகம் ஓரிசா மாகாணத்திலிருக்கிறது.

சில்கா ஏரியின் நீளம் ஏறக்குறைய 40 மைல். அதின் அகலம் மிகவும் குறுகிய இடத்தில் 5 மைலும் மிகவும் விரிந்த இடத்தில் 20 மைலுமுள்ளது. அதின் ஆழமோ 5 அடிக்கு மிஞ்சிக் கிடையாது. சில இடங்களில் 3 அடிதானிருக்கும். இதிலிருந்து ஒரு ஒடுக்கமான கால்வாய் கடலுக்குப்போ கிறது. வேனிற்காலத்தில் இந்த ஏரியின் தண்ணீர் உப்பா யும் மழைகாலங்களில் சுத்த ஜலமாயுமிருக்கும்.

**வம்சதாரைநதி** இந்த ஜில்லாவில் முக்கியமான ஆறு. இது விசாகபட்டணத்தின் வடபாகத்தில் உற்பத்தியாகி 145 மைல் தூரம் சென்று, கலிங்கப்பட்டணத்திற்கருகே கட லில் விழுகிறது.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 2,010,256. இந்த ஜில்லாவின் சமவெளிகளிலிருக்கிற ஜனங்களில் ஏறக்

குறைய எல்லாரும் இந்துக்கள். மகமதியர் முந்நூற்றைம் பதிலொன்றும் கிறிஸ்தவர்கள் அறுநூற்றிலொன்றுமா யிருக்கிறார்கள். தெற்கே கடற்கரையோரத்திலிருக்கும் பாகங்களில் தெலுங்கும், வடபாகத்தில் ஓட்டிரபாஷையும் பேசுகிறார்கள். இந்த ஜில்லாவிலிருக்கும் ஜனங்களில் பாதிக்கு மேல் ஓட்டிரர். கோதுக்கள், சவரைகள் என்ற காட்டு ஜாதியார் இரண்டரை லக்ஷத்திற்கதிகமாக இருக்கிறார்கள்.

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கியமான பயிர் நெல். ஆனால் சோளம், கேழ்வரகு, கோதுமை, கம்பு, மஞ்சள், கடுக்காய் முதலியவைகளும் பயிராகின்றன. அஸ்கா என்னுமிடத்தில் சர்க்கரையும், லாகிரி வஸ்துக்களும் செய்கிறார்கள். இதற்குச் சமீபத்தில் கரும்பு விளைகிறது. கடற்கரையோரத்தில் உப்பு விளைவிக்கிறார்கள். ஸ்ரீகாகுளம் என்னுமிடத்தில் மஸ்லின் என்னும் சிறந்த வஸ்திரம் நெய்கிறார்கள். கருங்காலி, முதிரை, சந்தனமரம் ஆகிய விலையுயர்ந்த வெட்டு மரங்கள் காடுகளில் அகப்படுகின்றன.

**போக்குவரவுக்குரிய சாதனங்கள்.**—கீழ் கரை இருப்புப் பாதை இந்தஜில்லாவின் வழியாய்ச்செல்லுகின்றது. மேலும் இந்த ஜில்லாவில் சில நல்ல தெருக்களும் ஏறக்குறைய 35 மைல் தூரத்துக்குக் கால்வாய்களு மிருக்கின்றன.

**பட்டணங்கள்.**—கோபாலபுரம் இந்த ஜில்லாவின் முக்கியமான துறைமுகம். இதற்கு 9 மைலுக்கு மேற்கே பரஹம்புரம் என்ற பட்டணத்தில் இந்த ஜில்லா நீதிபதி வசிக்கிறார். இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் அது மிகவும் பெரியது. கடற்கரையிலிருக்கும் கஞ்சம் இந்த ஜில்லாவின் பூர்வீக ராசதானி. ஆனால் அதில் அதிகக் காய்ச்சல் வியாதி நடமாடுகிறதால் அது குடியேற்றமில்லாமற் போய்விட்டது. கலெக்டர்துரை கஞ்சத்திலிருந்து 5 மைல் தூரத்திலிருக்கும் சத்திரபுரம் என்னுமிடத்தில் வசிக்கிறார். உள்நாட்டிலிருக்கும் அஸ்காவில் சர்க்கரை செய்கிறார்கள். வம்சதாரை நதியின் முகத்துவாரத்திலிருக்கும் கலிங்கபட்டணம் என்னும் துறைமுகம் கலிங்கராச்சியத்தின் பூர்வீக ராசதானி. கடற்கரையிலிருந்து 4 மைல் தூரத்தில் நாகவளியாற்றின் மேலிருக்கும் ஸ்ரீகாகுளம் (Chicacole) நேர்த்தியான மஸ்லின்

என்ற வஸ்திரத்திற்குப் பேர்போனது. பர்லாகிமிடி ஜமீனிலிருக்கும் பர்லாகிமிடி இந்த ஜில்லாவின் பட்டணங்களில் ஜனத்தொகையில் மூன்றுவது பட்டணம்.

## வட சர்க்கார்

முற்காலத்தில் கஞ்சம், விசாகபட்டணம், கோதாவரி, கிருஷ்ணு என்னும் நாலு ஜில்லாக்களுக்கும் வடசர்க்கார் அல்லது கவர்ண்மென்ட் என்று பெயர். இந்தப் பெயர் இன்னமும் அடிக்கடி வழங்கிவருகிறது. 1765-ம் வருஷத்தில் மோகல் சக்கரவர்த்தி இவைகளை இங்கிலிஷ்காரருக்கு நன்கொடையாகக் கொடுத்தார். இவர்கள் இவ்விடத்திலிருந்து பிராஞ்சுக்காரரைத் துரத்திவிட்டார்கள்.

# பல்லாரி ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே நைஜாம் ராச்சியமும், மேற்கே பம்பாய் ராசதானியும், கிழக்கே கர்னூல் ஜில்லாவும், தெற்கே மைசூர் ராச்சியமும் இந்த ஜில்லாவின் எல்லைகள். துங்கபத்திரை ஆறு இந்த ஜில்லாவை நைஜாம் ராச்சியத்திலிருந்தும், பம்பாய் ராசதானியிலிருந்தும் பிரிக்கிறது. இதின் விஸ்தீரணம் 5,714 சதுரமைல்.

இந்த ஜில்லாவின் தாலுகாக்கள் 8. இந்த ஜில்லாவின் மேற்குப் பாகத்தில் சந்தூர் என்ற மானியமாகக் கொடுக்கப்பட்ட ராச்சியமிருக்கிறது. இதின் விஸ்தீரணம் 161 சதுரமைல். இதிலுள்ள ஜனத்தொகை 11,200.

**இயற்கையமைப்பு.**—பல்லாரி ஜில்லா மேற்கிலிருந்து கிழக்குமுகமாய்ச் சரிந்திருக்கும் மரங்களில்லாத ஒரு பெரிய பீடபூமி. இதில் துருக்கங்கள் (Droogs) என்று பெயருள்ள குன்றுகள் அங்குமிங்குமிருக்கின்றன. பழையகாலத்தில் இவைகளில் சிலவற்றின்மேல் கோட்டைகளிருந்தன. இந்த ஜில்லாவின் மேற்பாகத்தில் உள்ள சந்தூர்க் குன்றுகளிலொன்முகிய ராமன்துருக்கம் 3,000 அடி உயரத்துக்கு மேலுள்ளது. பல்லாரியிலுள்ள ஐரோப்பியர் சுகத்திற்காக இவ்விடத்துக்குப் போவார்கள்.

அக்கஹரி என்று சொல்லப்படும் வேதவதியாறு மைசூரி லுற்பத்தியாகி இந்த ஜில்லாவின் கீழ்ப்பாகத்தில் வடக்குமுக மாய் ஓடி துங்கபத்திரா நதியில் விழுகிறது.

சீதோஷ்ணஸ்திதி. — இது மிகவும் வறட்சியான பூமி. தண்ணீர் கிடைப்பது அரிது. இந்த ஜில்லாவில் அடிக்கடி தண்ணீர்ப் பஞ்சங்கள் வரும். இதில் ஒரு வருஷத்தில் 20 அங்குல மழைமாத்திரம் பெய்கிறது.

ஜனங்கள்.—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 947,214. ஏறக்குறைய பத்திலொருபங்கு மகமதியர்கள். கிறிஸ்தவர் கள் மிகவும் சொற்பம். இவர்கள் இருநூற்றி லொன்றுக் குக் கொஞ்சம் மேற்பட்டிருக்கிறார்கள். மீதியானவர்கள் எல்லாரும் இந்துக்கள். அங்கங்கே சில சமணர்க ளிருக்கி றார்கள். மேற்கில் கன்னடமும், கிழக்கில் கன்னடமும், தெலுங்கும் பேசுகிறார்கள்.

விளைவு.—இந்த ஜில்லாவில் சோளமும் கேழ்வரகும் மற்றத் தினை தானியங்களும் முக்கியமாய்ப் பயிராகின்றன. நஞ்சை சாகுபடி மிகவும் சொற்பம். கரிசல் நிலங்களில் பருத்தி ஏராளமாய் விளைகின்றது. கொட்டைமுத்தும், அவுரியும் அங்கங்கே பயிராகின்றன. எள்ளும் சணலும் சொற்பமாய்ப் பயிரிடுகிறார்கள்.

கைத்தொழில்கள்.—நெசவு தொழில் கொஞ்சம் நடந்து வருகிறது. மேற்கே கம்பளிகளும் சமுக்காளங்களும் செய் கிறார்கள்.

இந்த ஜில்லாவில் நேர்த்தியான இரும்பு ஏராளமாய் அகப்படுகிறது. ஈயமும், பித்தளையும் சில இடங்களில் அகப்படுகின்றன.

இருப்புப்பாதைகள்.—சென்னை இருப்புப்பாதையின் வட மேற்குக் கிளை இந்த ஜில்லாவின் கீழ்பாகம் வழியாய் வடக்கை நோக்கிச் செல்லுகிறது. தென் மகராஷ்டிர இருப் புப்பாதை இந்த ஜில்லாவின் மத்தியில் பல்லாரி, ஹொசப் பேட்டை என்ற பட்டணங்களின் வழியாய் மேற்குமுக மாய்ச் செல்லுகிறது.

பட்டணங்கள்.—இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானமாகிய பல்லாரி ஒரு மலைக்கோட்டையின் அடிவாரத்திலிருக்கிறது.


இது ஒரு பெரிய ராணுவஸ்தலம். இதில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் வசிக்கிறார்கள். ஜனத்தொகையில் வடஜில்லாக்களிலுள்ள பட்டணங்களிலெல்லாம் இது மிகவும் பெரியது. ராசதானியிலோ இது ஏழாவது. கிழக்கே சென்னை இருப்புப்பாதையின்மேலிருக்கும் ஆதவானியில் வஸ்திரங்களும், சமுக்காளங்களும் செய்கிறார்கள். மேல் எல்லைக்கு அருகே தென். மகராஷ்டிர இருப்புப்பாதையிலிருக்கும் ஹொசப்பேட்டை உப கலெக்டர் துரை வசிக்குமிடம். ஹொசப்பேட்டையின் அருகில் பூர்விக இந்து ராச்சியத்தின் ராசதானியாகிய விஜயநகரம் என்ற ஹம்பிநகரம் அழிந்து கிடக்கிறது.

## அனந்தபுரம் ஜில்லா

**எல்லைகள்.**—1882-ம் வருஷம் வரையில் இந்த ஜில்லா பல்லாரி ஜில்லாவின் ஒரு பிரிவாயிருந்தது. வடக்கே கர்னூல், பல்லாரி ஜில்லாக்களும், கிழக்கே கடப்பை ஜில்லாவும், தெற்கிலும் மேற்கிலும் மைசூர் ராச்சியமும இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 5,557 சதுரமைல். பல்லாரி ஜில்லாவைப்பார்க்கிலும் இது விஸ்தீரணத்திற் குறைந்தது. இதில் ஏழு தாலுகாக்களிருக்கின்றன.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லாவின் வடபாகமும் மத்தியபாகமும் கடல் மட்டத்திற்குமேல் 2,000 அடிக்கதிகமாக உயர்ந்த ஒரு பீடபூமி. அங்கங்கே சில கற்பாறைகளும் துருக்கங்களென்ற தாழ்ந்த குன்றுகளு மிருக்கின்றன. 3,100 அடி உயரத்திலிருக்கும் பெனுகோண்டாவும், குத்தியும் இவைகளில் முக்கியமானவை. இப்பாகங்களில் மரங்கள் மிகவும் சொற்பம். தண்ணீர் கிடைப்பது அபூர்வம். தெற்கிலுள்ள தாலுகாக்கள் மிகவும் குன்றடர்ந்ததும், தண்ணீர்ச் செழிப்புமான பூமி. வடபெண்ணையாறு மைசூரிலுற்பத்தியாகி, இந்த ஜில்லாவின் வழியாய் முதலாவது வடக்கு முகமாகவும் பின்பு கிழக்கு முகமாகவும் ஓடுகிறது. ஆனால் வருஷத்தில் அநேக மாதங்களுக்கு இது வறண்டுபோகிறது. இந்த நதியின் முக்கிய உபநதி சித்திராவதி. இந்த ஜில்லாவின் வடக்கிலுள்ள நிலம் பெரும்பாலும் பருத்தி விளையும் கரிசல் நிலம். தெற்கிலுள்ளது செம்மண் பூமி.

சீதோஷ்ணஸ்திதி.—அனந்தபுரம் உஷ்ணமும் வறட்சியுமான இடம். இந்த ஜில்லாவின் அநேக பாகங்கள் சுகத்துக்கேற்றவைகளல்ல. இந்த ராசதானியின் ஜில்லாக்களிலெல்லாம் இந்த ஜில்லாவிலேதான் மழை கொஞ்சமாய்ப் பெய்கிறது. வருஷத்தில் பெய்யும் மழை ஏறக்குறைய 17 அங்குலம்.




பல்லாரி, அனந்தபுரம், தென்கன்னடம்

ஜனங்கள்.—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 788,254. ஜனங்களி லதிகமான பேர் இந்துக்கள். பதினாலில் ஒருபங்கு மகமதியர். கிறிஸ்தவர்கள் முந்நூற்றி லொருபங்குக்குக் கொஞ்ச மதிகம். இவ்விடத்தில் சில சமணர்களுண்டு. முக்கியமாய் வழங்கும் பாஷை தெலுங்கு. ஆனால் மேற்கிலும் தெற்கிலும் கன்னடம் பேசுகிறார்கள்.

**விளைவு.**—புன்செய் தானியங்கள், கேழ்வரகு, கம்பு, சோளம் ஆகிய இவைகள் ஜனங்களின் முக்கிய உணவு. நெல், கரும்பு, அவுரி தென்பாகங்களில் பயிராகின்றன. வடக்கில் பருத்தி விளைகிறது.

**கைத்தொழில்கள்.**—வஸ்திரம் நெய்தல், கயிறு திரித்தல், வளையல் செய்தல் ஆகிய இவைகள் இந்த ஜில்லாவின் முக்கியமான கைத்தொழில்கள்.

**இருப்புப்பாதைகள்.**—சென்னை இருப்புப்பாதையின் வடமேற்குக் கிளை இந்த ஜில்லாவின் வடகிழக்கு வழியாய்ச் செல்லுகிறது. வடகோடியிலிருக்கும் குண்டக்கல்லில் தென் மகராஷ்டிர இருப்புப்பாதை அதைக் கடந்துபோகிறது. விழுப்புரம் குண்டக்கல் இருப்புப்பாதை வடக்கே குண்டக்கல்லில் முடிகிறது. இது தெற்கு முகமாய்த் தர்மவரத்திற்குச் சென்று பிறகு தென்கிழக்கு முகமாய்க் கடப்பைக்குப் போகிறது. தெற்கே செல்லுகிற ஒரு கிளை தர்மவரத்தையும், பெங்களூரையும் இணைக்கிறது.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் மத்தியில் விழுப்புரம் குண்டக்கல் இருப்புப்பாதையின் மேலிருக்கும் அனந்தபுரம் முக்கிய ஸ்தானம். தர்மவரம் இதே இருப்புப்பாதையின் மேலே தென்கிழக்கேயிருக்கிறது. வடக்கே சென்னை இருப்புப்பாதையின் மேலிருக்கும் குத்தியில் ஒரு பெரிய மலைக் கோட்டை யிருக்கிறது. கிழக்கே சென்னை இருப்புப்பாதையிலிருக்கும் தாடிபத்திரி இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் பெரியது. இது வடபெண்ணை ஆற்றங்கரையிலிருக்கும் பேர்போன ஒரு யாத்திரை ஸ்தலம். இங்கே நல்ல புடவை நெசவாகிறது. பட்டு, நீலம் இவைகளில் வியாபாரமும் நடக்கிறது. தெற்கிலுள்ள இந்துபுரம் ஒரு வியாபார ஸ்தலம். பேனுகோண்டா என்னும் பட்டணத்தில் 3,100 அடி உயரமுள்ள ஓர் பூர்வீக மலைக்கோட்டை யிருக்கிறது. கி. பி. 1565-ம் வருஷத்தில் விஜயநகரம் ராஜா தலைக்கோட்டையில் தோல்வியடைந்தபிறகு இந்தக் கோட்டையில்தான் அடைக்கலம் புகுந்தார்.

## தென்கன்னடம் (South Kanara) ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே வடகன்னடம் ஜில்லாவும், கிழக்கே மைசூர் குடகு ராச்சியங்களும், தெற்கே மலையாளம் ஜில்லாவும், மேற்கே அரபிக்கடலும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இது ஏறக்குறைய 100 மைல் நீளமும், 40 முதல் 60 மைல் வரையில் அகலமுமுடையது. இதின் விஸ்தீரணம் 4,025 சதுரமைல்.

இந்த ஜில்லாவில் ஐந்து தாலுகாக்களிருக்கின்றன. வடலக்ஷதீவுகள் இந்த ஜில்லா கலெக்டர் துரை அதிகாரத்துக்குட்பட்டவை.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லா மேற்குக்கணவாய் மலைகளுக்கும் கடலுக்கு மிடையிலுள்ள ஒரு துண்டுநிலம். இந்த ஜில்லாவின் கீழ் எல்லையாகிய மேற்குக்கணவாய் மலைகள் 3,000 அடிமுதல் 6,000 அடிவரை உயரமாயிருக்கின்றன. இவைகளிலிருந்து சிறு குன்றுகள் தாழ்ந்த பூமியெங்கும் செல்லுகின்றன. இக்குன்றுகளிலுள்ள காடுகளில் மிளகு, ஏலக்காய், கடுக்காய், தேன், மெழுகு, பிசின் முதலியவை அகப்படுகின்றன. மலையாளத்திற்போல இந்த ஜில்லாவில் மழை அதிகமாய்ப் பெய்வதால் அநேகம் சிற்ருறுகள் இவ்விடத்தி லுற்பத்தியாகி ஒடுங்கின பள்ளத்தாக்குகளின் வழியாய் ஓடிக் கடலில் விழுகின்றன. இவைகளில் முக்கியமானவை **நேத்திராவதி.** கணவாய் மலைகளினூடே அநேக பாதைகளிருக்கின்றன.

**சீதோஷ்ணஸ்திதி.**—தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலத்தில் இவ்விடத்தில் மழை அதிகமாய்ப் பெய்கிறது. கடற்கரையோரம் சுகத்திற் கேற்றது. கணவாய் மலைப்பக்கங்களில் காய்ச்சலதிகம்.

**ஜனங்கள்.**-1901-ம் வருஷத்து ஜனத்தொகை 1,134,713. ஒன்பதி லொருபங்கு மகமதியர். பதினைலி லொருபங்கு கிறிஸ்தவர்கள். மீதியானவர்களில் ஏறக்குறைய எல்லாரும் இந்துக்கள். வடக்கே **கன்னடமும்** (Kanarese), மத்திய பாகத்தில் **துளுவும்,** தெற்கே **மலையாளமும்** இந்த ஜில்லா

வில் வழங்கும் பாஷைகள். சிலவிடங்களில் கோங்கணியும் பேசப்படுகிறது.

கணவாய் மலைகளுக்கப்பால் கன்னடபாஷை வழங்குகிற நாட்டைத்தான் சரியானபடி கன்னடதேசமென்று சொல்லலாம். கன்னட பாஷையைப்போன்ற துளுவு பாஷையை ஏறக்குறைய 5 லக்ஷம் ஜனங்கள் பேசுகிறார்கள்.

**விளைபொருட்கள்.**—இந்த ஜில்லாவில் முக்கியமான பயிர் நெல். கடற்கரையோரத்தில் தென்னந்தோப்புகளும், உள்நாட்டில் கமுகு மரங்களும் ஏராளமாயிருக்கின்றன. பயறு வகைகளும், வாசனைத் திரவியங்களும் கொஞ்சம் விளைகின்றன. காடுகளில் விலையுயர்ந்த வெட்டுமரங்கள் அகப்படுகின்றன. பாக்கு, வாசனைத்திரவியம், காப்பிக்கொட்டை, உப்பு, கருவாடு முதலியவைகள் இவ்விடத்து விசேஷ வர்த்தகப் பொருட்களாம்.

**கைத்தொழில்கள்.**—மங்களூரில் நேர்த்தியான ஓடுகள் செய்கிறார்கள். நெசவு தொழிலும் இந்த ஜில்லாவின் ஓர் கைத்தொழில். காப்பிக்கொட்டை, அரிசி, பாக்கு முதலியவை இவ்விடத்திலிருந்து ஏற்றுமதியாகின்றன.

**போக்குவரவுக்குரிய சாதனங்கள்.**—இந்த ஜில்லாவில் இருப்புப்பாதை கிடையாது. மலைக்கணவாய்களுக்கூடே மைசூர், குடகு ராச்சியங்களுக்குப் போகிற நல்ல தெருக்களிருக்கின்றன. கடற்கரையிலிருக்கும் கழிகள் பருவப்பெயர்ச்சிக் காற்றுக் காலங்களில்தவிர மற்றக் காலங்களில் கடல் வியாபாரத்துக்கு உதவுகின்றன.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கியமான பட்டணமாகிய **மங்களூர்** ஒரு துறைமுகம். ஐதர் குடும்பத்தோடு நடந்த சண்டைகளில் இதை அநேகந்தரம் இங்கிலிஷ்காரர் பிடித்தும், இழந்துமிருக்கிறார்கள். இதில் நல்ல பள்ளிக்கூடங்களும் வித்தியாசாலைகளு மிருக்கின்றன. இங்கே முதற்றரமான ஓடு யந்திரசகாயத்தாற் செய்யப்பட்டு விலையாகிறது. வடக்கேயிருக்கும் **உடுப்பி** இந்துமத ஆலயங்களுக்குப் பேர்போனது. கடற்கரையிலிருக்கும் **காசரக்கோடு** பூர்வ்க துளுவ ராச்சியத்தின் தென்கோடித் துறைமுகம். **குந்தாபுரம்** சப் கலெக்டர் வசிக்குமிடம்.

## கோயம்புத்தூர் ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே மைசூர் ராச்சியமும், கிழக்கே சேலம், திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களும், தெற்கே மதுரை ஜில்லாவும், திருவாங்கூர் ராச்சியமும், மேற்கே கொச்சி ராச்சியமும், மலையாளம், நீலகிரி ஜில்லாக்களும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 7,860 சதுர மைல். இதில் பத்துத் தாலுகாக்களிருக்கின்றன.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லாவின் வடபாகம் 2,000 அடிமுதல் 2,500 அடிவரை உயரமுள்ள ஒரு பீடபூமி. **பிளிகிரி ரங்கன்** முதலிய மலைத்தொடர்கள் இப்பாகத்தை மைசூர் ராச்சியத்திலிருந்து பிரிக்கின்றன. இதிலிருந்து தாழ்ந்த பூமிக்குப் போகும் இரண்டு கணவாய்க ளிருக்கின்றன. மேற்கே கோயம்புத்தூரிலிருந்து கிழக்கே **கருவூர்** வரை லேசாய்ச் சரிந்திருக்கும் இத்தாழ்ந்த பூமி அங்கங்கே உயர்ந்தும் தாழ்ந்துமிருக்கிறது. வடமேற்கு எல்லையில் **நீலகிரிமலைகளும்**, தென்மேற்கு எல்லையில் **அண்ணுமலை மலைகளு** மிருக்கின்றன. **காவேரியாறு** இந்த ஜில்லாவை வடக்கிலும் கிழக்கிலும் சேலம் ஜில்லாவிலிருந்து பிரிக்கிறது. கோயம்புத்தூர் ஜில்லாவிலிருந்து உற்பத்தியாகி வருகிற **பவானி, நோய்யல், அமராவதி** யென்ற மூன்றும் இவ்வாற்றின் உபநதிகள். இந்த ஜில்லாவில் ஏறக்குறைய 3,000 சதுரமைல் விஸ்தீரணமான பூமி காடடர்ந்தது. வடக்கேயிருக்கும் சாகுபடியாகாத விஸ்தாரமான புல் நிலங்களில் சேலம் ஜில்லாவிலிருந்து ஆடுமாடுகளைக் கொண்டு வந்து மேய்க்கிறார்கள். யானை, புலி, காட்டுப்பசு, கரடி, கழுதைப்புலி, ஓநாய் முதலிய காட்டு மிருகங்களும் இந்தியாவிலுள்ள மற்றக் காட்டுஜாதி மிருகங்களும் இக்காடுகளி லநேகமாயிருக்கின்றன. ஒரு உயர்ந்த பள்ளத்தாக்கைச் சுற்றியிருக்கும் இரண்டு மலைத்தொடர்ச்சிகள் சேர்ந்ததற்கு **பிளிகிரி ரங்கன்** மலைகளென்று பெயர். இப்பள்ளத்தாக்கில் யானைகள் ஏராளமாய் மேய்கின்றன.

**சீதோஷ்ணஸ்திதி.**—தென்மேற்குப் பருவப் பெயர்ச்சிக் காற்றுக்காலத்தில் மழையில்லாத குளிர்ந்த காற்று பாலக்காட்டுக் கணவாய்வழியாய் அடிக்கிறது. இந்த ஜில்லா சுகத்

துக்கேற்றது. மலையடிவாரங்களில் காய்ச்சல் வியாதி மிகுதி. இந்த ஜில்லாவில் 20 அங்குலம் முதல் 38 அங்குலம்வரை ஒரு வருஷத்தில் மழை பெய்கிறது.

**ஜனங்கள்.** — 1901-ம் வருஷத்து ஜனத்தொகை 2,201,752. ஏறக்குறைய எல்லாரும் இந்துக்கள். நாற்பத்து நாலில் ஒருபங்கு மகமதியர். நூற்றுப் பதினைந்தில் ஒரு பங்கு கிறிஸ்தவர்கள். வடக்கில் வழங்கும் பாஷை கன்னடம். மற்ற இடங்களில் தமிழ் பேசுகிறார்கள். மலைகளில் காட்டுஜாதியார் வசிக்கிறார்கள்.

**விளைவு.**—கம்பும் சோளமும் இந்த ஜில்லாவின் முக்கிய மான பயிர். பருத்தி, கேழ்வரகு, பயறுகள் முதலியவை களும் மிகுதியாய்ப் பயிராகின்றன. இவ்விடத்தில் நெல் அதிகமாய் விளைகிறதில்லை. கொட்டைமுத்து, புகையிலை, சணல், கரும்பு முதலியவைகளும் பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—முக்கியமான கைத்தொழில் நெசவு; முக்கியமான ஏற்றுமதி பருத்தி.

**இருப்புப்பாதைகள்.**—சென்னை இருப்புப்பாதையின் தென் மேற்குக் கிளை இந்த ஜில்லாவின் மத்தியவழியாய்ச் செல்லு கிறது. கோயம்புத்தூருக்குச் சமீபத்திலிருந்து ஒரு கிளைப் பாதை நீலகிரி மலைகளின் அடிவாரத்திலிருக்கும் மேட்டுப் பாளையத்துக்குப் போகிறது. தென்னிந்திய இருப்புப்பாதை யின் ஒரு கிளை ஈரோட்டிலிருந்து காவேரியாற்றின் ஓரமாய்க் கருவூர் பட்டணத்தின் வழியாய் திருச்சினாப்பள்ளிக்குச் செல்லுகிறது.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானம் **கோயம்புத்தூர்.** இது சுகத்துக்கேற்ற இடம். இதிலிருந்து 3 மைல் நீளமான ஒரு கிளை இருப்புப்பாதை சென்னை இருப் புப்பாதையிலிருக்கும் போத்தனூருக்குச் செல்லுகிறது. கீழ் எல்லைக்கருகே காவேரியாற்றின் கரையிலிருக்கும் **ஈரோடு** முக்கியமான இருப்புப்பாதைகள் சந்திக்குமிடம். ஈரோட்டி லிருந்து வடக்கே ஒன்பதுமைல் தூரத்திலிருக்கும் **பவானி,** பவானியாறு காவேரியாற்றில் விழும் இடத்திலிருக்கிறது. இந்த ஜில்லாவின் தென்கிழக்கே அமராவதியாறு காவேரி யாற்றில் கலக்கும் இடத்திற்கருகே அமராவதியாற்றின்

கரையிலிருக்கும் கருவூர் ஒரு பெரிய வியாபார ஸ்தலம். இது முற்காலத்தில் சேரராச்சியத்தின் ராசதானியாயிருந்தது. இந்த ஜில்லாவின் தென்மேற்கிலிருக்கும் போள்ளாச்சியில் வாரந்தோறும் ஒரு பெரிய சந்தை கூடுகிறது.

## நீலகிரி (நீலமலைகள்) ஜில்லா

சென்னபட்டணம் ஜில்லாவைத்தவிர இந்த ராசதானியிலுள்ளஜில்லாக்களிலெல்லாம் இந்த ஜில்லா மிகவும் சிறியது.


**எல்லைகள்.**— வடக்கே மைசூர் ராச்சியமும், கிழக்கே கோயம்புத்தூர் ஜில்லாவும், தெற்கேயும்மேற்கேயும்கோயம்புத்தூர், மலையாளம் ஜில்லாக்களும் இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 957 சதுரமைல்.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லா ஏறக்குறைய 6,000 அடி உயரத்தில் நீலகிரி மலைகளின் உச்சியிலிருக்கும் ஒரு சிறிய பீடபூமி. இந்த பீடபூமியிலிருந்து சமவெளிகளுக்கு எப்பக்கங்களிலும் ஆறு செங்குத்தான கணவாய்களிருக்கின்றன. இவைகளில் முக்கியமானது குன்னூர் கணவாய். இதின் உயர்ந்த சிகரமாகிய தோட்டபெட்டா (பெரிய மலை) 8,760 அடி உயரமுள்ளது. இந்த பீடபூமியெங்கும் சோலைகளென்ற சிறு காடுகளுள்ள புல் நிலங்களிருக்கின்றன. உதகமண்டலத்தில் ஏறக்குறைய 2 மைல் நீளமுள்ள ஒரு ஏரியிருக்கிறது. மலையாளம் ஜில்லாவிலிருந்து செங்குத்தாய் எழும்பும் குண்டாமலைகள் நீலகிரி பீடபூமியின் மேற்கே சுவர்போலிருக்கின்றன. இதின் உயர்ந்த சிகரமாகிய ஆவலாஞ்சு சிகரம் 8,502 அடி உயரமுள்ளது.

அகலமான ஒரு பள்ளத்தாக்கு நீலகிரி ஜில்லாவை வயநாடு, மைசூர் பீடபூமிகளிலிருந்து பிரிக்கிறது. இப்பள்ளத்தாக்கின்வழியாய்ப் பவானியின் கிளைநதியாகிய மாயாறு ஓடுகிறது. மாயாற்றின் கிளைநதி பாய்க்கரை. வேப்பூர் (Beypore) நதி மேற்குமுகமாய் ஓடுகிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**—இது சுகத்துக்கேற்ற குளிர்ச்சியான இடம். இரண்டு பருவப்பெயர்ச்சிக் காற்றுக்காலங்களிலும் மழை பெய்கிறது.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 111,437. பதினொன்றிலொன்று கிறிஸ்தவர்கள். முப்பத்துமூன்றில் ஒன்று மகமதியர். மீதியானவர்கள் இந்துக்கள். **படுகர், தோதுவர், கோதவர்** இவ்விடத்திலுள்ள முக்கியமான காட்டு சாதியார்.




இச்சாதிகளில் சற்று நாகரீகமுள்ளவர்கள் **படுகர்.** இவர்கள் இந்த ஜில்லாவில் அதிக ஏராளமாயிருக்கிறார்கள். இவர்கள் ஒருவிதமான கன்னடபாஷை பேசுவதால் கன்னட தேசத்திலிருந்து இந்த ஜில்லாவுக்கு வந்திருக்கிறார்கள் என்ற ஒரு அபிப்பிராயமுண்டு. **தோதுவர்கள்** ஏராளமான எருமை மந்தையுடையவர்கள். இவர்களுடைய முக்கியமான தொழில் வெண்ணெயும் நெய்யும் செய்தல். இவர்கள் ஒரு விதமான கொச்சைத்தமிழ் பேசுகிறார்கள். **கோதவர்கள்** (கோஹதர் = பசுவைக் கொல்லுகிறவர்கள்) முன் சொல்லப் பட்ட படுகர், தொதுவர் ஆகிய இவ்விரு ஜாதியாருடைய

நிலங்களைப் பயிர்செய்து இவர்களுக்கு ஊழியஞ்செய்கிற வர்கள். இவர்கள் ஒருவகையான கொச்சைக் கன்னட பாஷை பேசுகிறார்கள். இந்த சாதிகளிலெல்லாம் மிகவும் நாகரீகமற்றவர்கள் **குரும்பர்கள்** என்ற இடையர்கள். வளர்ச்சியில் குள்ளர்களான இச்சாதியார் ஆபரணங்களை அணிந்து கொள்வதில் மிகவும் ஆவலுடையவர்களாயிருந்தாலும் யாதொருவிதமான உடையும் தரிக்கிறதில்லை. இவர்கள் படுகருக்குக் குருக்கள். படுகர் இவர்களுக்கு மிகவும் பயப்படுகிறார்கள். **இருளர்கள்** (இருள்—இருட்டு) என்ற ஜாதியார் மலையடிவாரங்களில் வசிக்கிறார்கள். இவர்கள் மிகவும் தேர்ந்த வேட்டைக்காரர். மிகவும் சொற்பமாயுள்ள இவர்கள் ஒரு கலப்பான பாஷை பேசுகிறார்கள்.

**விளைவு.**— காப்பி, தேயிலை, சின்கோனச் செடிகள் இந்த ஜில்லாவில் முக்கியமாய்ப் பயிராகின்றன. இவைகளைப் பயிரிடுகிறவர்கள் பெரும்பாலும் ஐரோப்பியர். இவ்விடத்தில் உருளைக்கிழங்குகள் மிகுதியாய் விளைகின்றன. நெல், கோதுமை, கேழ்வரகு சொற்பமாய் அங்கங்கே பயிராகின்றன.

**இருப்புப்பாதை.** — மேட்டுப்பாளையத்திலிருந்து மேலே கணவாய் மலைகளுக்கு ஒரு சிறிய இருப்புப்பாதை புதிதாய்ப் போட்டிருக்கிறார்கள்.

**பட்டணங்கள்.** — **உதகமண்டலம்,** (ஒண்டிக்கல் மண்ட் = ஒருகல் கிராமம்) இந்த ராசதானியில் முக்கியமாய் ஐரோப்பியர் சுகத்துக்காகப் போகுமிடம். சென்னை துரைத்தனத்தார் வெயிற்காலத்தில் இவ்விடத்தில் வசிக்கிறார்கள். குன்னூர் கணவாய்வழியாய் **மேட்டுப்பாளையத்தி**லிருந்து 32 மைல் தூரத்திலிருக்கும் இந்த இடம் கடல் மட்டத்துக்குமேல் 7,228 அடி உயரத்திலிருக்கிறது. உதகமண்டலத்திலிருந்து 12 மைல் தூரத்திலிருக்கும் **குன்னூர்** ஐரோப்பியர் சுகத்துக்காகப் போகும் இன்னொரு இடம்; 6,000 அடி உயரத்திலிருக்கிறது. **உவெல்லிங்டன்** குன்னூருக்கருகேயிருக்கும் ஒரு ராணுவஸ்தலம். உதகமண்டலத்துக்குத் தென்கிழக்கே **கோத்தகிரி** யென்ற ஒரு சிறு இடமிருக்கிறது.

# மதுரை ஜில்லா

**எல்லைகள்.** — வடக்கே கோயம்புத்தூர், திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்களும், கிழக்கேயும், தென்கிழக்கேயும் கடலும், தெற்கே திருநெல்வேலி ஜில்லாவும், மேற்கே திருவாங்கூர் ராச்சியமும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 8,701 சதுரமைல். ராமநாதபுரம், சிவகங்கை என்ற இரண்டு பெரிய ஜமீன்களும் சேர்ந்து இந்த ஜில்லாவின் ஏறக்குறைய பாதிக்குச் சரி. மீதிப்பாகத்தில் ஆறு தாலுகாக்களிருக்கின்றன.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லாவின் அதிகமான பாகம் ஒரு சமபூமி. இப்பூமி தென்கிழக்குமுகமாய் லேசாய்ச் சரிந்திருக்கிறது. மேற்கே கணவாய்மலைகளின் வெளிப்பக்கத்துத் தொடர்களும், இந்த ஜில்லாவின் பல பாகங்களிலும் குன்றுகளும், கற்பாறைகளும் அங்குமிங்கு மிருக்கின்றன. இந்த ஜில்லாவின் மலைத்தொடர்களிலெல்லாம் உயர்ந்தவை பழனிமலைகள். இதற்கு வராகமலை என்றும் பெயர். இம்மலைத்தொடரின் சில சிகரங்கள் கடல்மட்டத்துக்குமேல் 8,000 அடி உயரத்திற்கு அதிகமாயிருக்கின்றன. மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் ஊடேயுள்ள சிறுமலைகள் பழனிமலைகளின் உயரத்தில் ஏறக்குறைய பாதிக்குச் சரியாயிருக்கின்றன. இவ்விடத்திலுள்ள முக்கியமான ஆறு கிய வைகை மேற்குத்தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகித் தென்கிழக்கு முகமாய் ஓடிக் கடலில் விழுகின்றது. திருவாங்கூர் ராச்சியத்திலிருக்கும் பெரியாற்றின் தண்ணீரில் ஒருபாகம் மதுரை ஜில்லாவுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

ராமேஸ்வரம் கிழக்கிலிருக்கும் ஒரு சிறிய தீவு. இதுபேர் பெற்ற ஓர் யாத்திரை ஸ்தலம். இதற்கும் மதுரைக்கும் இடையில் பாம்பன்கால்வாய் இருக்கிறது. இக்கால்வாயின் வடக்கிலிருக்கும் ஜலபாகத்திற்குப் பால்க்ஸ் ஜலசந்தி யென்றும் தெற்கிலிருக்கும் பாகத்திற்கு மன்னார்வளைகுடா என்றும் பெயர். இலங்கையைச்சேர்ந்த மன்னார் தீவையும் ராமேஸ்வரத்தையும் இணைக்கிற மணல் திடரை ஐரோப்பியர் ஆதாமின் பாலம் என்றும் இந்துக்கள் ராமர் அணை என்றும் வழங்குகிறார்கள்.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ஜில்லா உஷ்ணமும் வறட்சியு மான பூமி. வருஷத்தில் பெய்யும் மழை ஏறக்குறைய 31 அங்குலம்.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 2,831,280. இந்த ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் ஜனத் தொகையில் மதுரை ஜில்லா இரண்டாவது. பத்தில் ஒன் பதுபங்கு இந்து மதத்தார். பதினேழில் ஒருபங்கு மகமதி யர். இருபத்தைந்தில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள். இந்த ஜில் லாவில் வழங்கும் பாஷை தமிழ். ஆனால் ஏறக்குறைய ஏழி லொருபங்கு ஜனங்கள் தெலுங்கு பேசுகிறார்கள்.

**விளைவு.**—நெல்லும், பலவகையான தினை தானியங்களும் இந்த ஜில்லாவில் முக்கியமாய்ப் பயிராகின்றன. பயறு, கொட்டைமுத்து, புகையிலை ஆகிய இவைகள் அங்கங்கே பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—நெசவு, மண்பாத்திரம், வெண்கலபாத் திரம் முதலியவை செய்தல் இந்த ஜில்லாவின் முக்கியமான கைத்தொழில்கள். திண்டுக்கல்லில் சுருட்டு செய்கிறார்கள். மேலும் திண்டுக்கல்லிலுள்ள நேர்த்தியான சுரங்கங்களி லிருந்து ஏராளமான இரும்பு எடுக்கிறார்கள்.

**இருப்புப்பாதை.** — தென்னிந்திய இருப்புப்பாதை வடக் கேயிருந்து தெற்கே இந்த ஜில்லாவின் வழியாய்ச் செல்லு கிறது.

**பட்டணங்கள்.**—இந்த ஜில்லாவின் மத்தியில் இருப்புப் பாதையின்மேலிருக்கும் மதுரை இதின் முக்கிய ஸ்தானம். இதில் சில நேர்த்தியான கட்டடங்களிருக்கின்றன. ஜனத் தொகையில் இது ராசதானியில் இரண்டாவது பட்டணம். மதுரை மிகவும் பூர்வகாலத்துப் பட்டணங்களி லொன்று. ஒருகாலத்தில் இது பாண்டிய ராச்சியத்தின் ராசதானியா யிருந்தது. இதில் ஒரு பேர்போன இந்து வித்தியாசாலை யிருக்கிறது. பெரிய மீனாட்சி அம்மன் கோவிலும் திருமலை நாய்க்கனுடைய அரமனையும் இதிலுள்ள முக்கியமான கட் டடங்கள். மதுரைக்கு வடமேற்கே இருப்புப்பாதையின் மேலிருக்கும் திண்டுக்கல் என்னுமிடத்தில் கற்பாறையின் மேல் கட்டியிருக்கிற ஒரு பழைய கோட்டையிருக்கிறது. இது சுருட்டுக்குப் பேர்போன இடம். தென்கிழக்கே

ராமேஸ்வரம்வரை நீண்டிருக்கும் தாழ்ந்த மணல் மேட்டின்மேல் ராமநாதபுரம் இருக்கிறது. ராமநாதபுரத்துக்கு வடமேற்கே சிவகங்கை இருக்கிறது. ராமநாதபுரம் ஜமீன் அளவில் ஏறக்குறைய செங்கற்பட்டு ஜில்லாவுக்குச் சரி. ஆனால் அதின் ஜனத்தொகை 5 லக்ஷம். பழனி என்னுமிடத்திலுள்ள குன்றின்மேல் ஒரு இந்து ஆலயம் உண்டு. இது பேர்பெற்ற யாத்திரை ஸ்தலம்.

## திருநெல்வேலி ஜில்லா

**எல்லைகள்.**—இந்த ஜில்லா இந்தியாவின் தென்கிழக்கு மூலையிலிருக்கிறது. வடக்கேயும், வடகிழக்கேயும் மதுரை ஜில்லாவும், தென்கிழக்கேயும், தெற்கேயும் மன்னார்வளைகுடாவும், மேற்கே திருவாங்கூர் ராச்சியமும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 5,389 சதுரமைல். இந்த ஜில்லா ஒன்பது தாலுகாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**இயற்கையமைப்பு.**—இந்த ஜில்லாவின் மேற்கெல்லையாகிய கணவாய்மலைகள் 4,000 அடி உயரமுள்ளவை. இம்மலைகள் இந்த ஜில்லாவை திருவாங்கூர் ராச்சியத்திலிருந்து பிரிக்கின்றன. இவைகளினடிவாரத்திலிருந்து ஒரு பெரிய சமவெளி கடல்மட்டும் கிழக்குமுகமாய்ச் சரிந்திருக்கிறது. தெற்கே தாம்பிரபரணியும் வடக்கே வைப்பாறும் இவ்விடத்திலுள்ள முக்கியமான ஆறுகள். வடபாகத்திலுள்ள அதிகமான நிலம் பருத்தி விளையும் கரிசல்பூமி. தெற்கிலுள்ளது மணற்பாங்கான செம்மண்நிலம். குற்றாலம், பாபநாசம் என்னுமிடங்களில் தாம்பிரபரணி அழகிய அருவிகளாக விழுகின்றது.

**சீதோஷ்ணஸ்திதி.** — கணவாய்மலைகளில் மழை அதிகமாய்ப் பெய்கிறது. ஆனால் சமவெளிகளில் ஏறக்குறைய 26 அங்குலம் மழைதான் பெய்கிறது. இந்த ஜில்லாவுக்குச் சமீபமாய் வடக்கேயுள்ள ஜில்லாக்களைப்போல இது அவ்வளவு உஷ்ணமான பூமியல்ல. அவைகளைப்பார்க்கிலும் இது மிகவும் சுகத்துக்கேற்ற பூமி.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகை 2,059,607. பதின்மூன்றில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள். இருபதில் ஒரு

பங்கு மகமதியர். மீதியானவர்கள் இந்துக்கள். முக்கியமாய் வழங்கும் பாஷை தமிழ், ஆனால் ஜனங்களில் ஏழில் ஒரு பங்கு தெலுங்கும் பேசுகிறார்கள்.

**விளைவு.**—இந்த ஜில்லாவின் முக்கிய பயிராகிய நெல் ஆற்றோரங்களிலிருக்கும் பள்ளத்தாக்குகளில் பயிராகிறது. அநேக இடங்களில் பருத்தி ஏராளமாய்ப் பயிராகிறது. இந்த ராசதானியில் முக்கியமாய்ப் பருத்தி விளையும் ஜில்லாக்களில் இதுவும் ஒன்று. தினை தானியங்கள், பயறுகள், கொட்டைமுத்து ஆகிய இவைகள் சில இடங்களில் விசேஷமாய்ப் பயிராகின்றன.

**கைத்தொழில்கள்.**—பனைமரங்களிலிருந்துண்டாகும் பனஞ்சாற்றிலிருந்து ஏராளமான கருப்புக்கட்டி செய்கிறார்கள். கடற்கரையில் முத்துகளும், சங்குகளும் அகப்படுகின்றன.

**இருப்புப்பாதைகள்.**—தென்னிந்திய இருப்புப்பாதை இந்த ஜில்லாவின் வழியாய்த் தூத்துக்குடிக்குச் செல்லுகிறது. மணியாச்சியிலிருந்து திருநெல்வேலிக்கும், அவ்விடத்திலிருந்து திருவாங்கூர் ராச்சியத்திலிருக்கும் கொல்லத்துக்கும் ஒரு கிளைப்பாதை யிருக்கிறது.

**பட்டணங்கள்.**—தாம்பிரபாணி ஆற்றின் கரையிலிருக்கும் திருநெல்வேலி இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் மிகவும் பெரியது. திருநெல்வேலியிலிருந்து ஏறக்குறைய இரண்டுமைல் தூரத்திலிருக்கும் பாளையங்கோட்டை இந்த ஜில்லாவின் முக்கிய ஸ்தானம். தூத்துக்குடி முக்கியமான ஒரு துறைமுகம். இது தென்னிந்திய இருப்புப்பாதையின் ஒரு கோடி. வியாபாரவிஷயத்தில் இது ராசதானியில் இரண்டாவது துறைமுகம்.

திருநெல்வேலியில் கிறிஸ்துமார்க்கம் அதிக விருத்தியடைந்திருக்கிறது. ஏராளமான பள்ளிக்கூடங்களும், சில அழகான கிறிஸ்தவ ஆலயங்களும் இந்த ஜில்லாவிலிருக்கின்றன.

## கர்னாடகம்

நெல்லூரிலிருந்து தெற்கே கன்னியாகுமரி வரையிலும் கிழக்குக்கரை ஓரத்திலிருக்கும் ஜில்லாக்களும், வடஆறுகாடு, திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களும் சேர்ந்த பிரதேசத்திற்கு

முற்காலத்தில் கர்னுடகம் என்னும் பெயரிருந்தது. ஆனால் இது சரியான பெயரல்ல. கர்னுடகம் என்பது கணவாய் மலைகளுக் கப்பால் கன்னடபாஷை வழங்கிவருகிற கன்னட தேசத்தைக் குறிக்கிறது. கலிமீர் முனையிலிருந்து நெல்லூர் வரையிலுமுள்ள கரைக்கு சோழமண்டலக்கரை (சோழராசாக்களுடைய தேசம்) என்று பெயர். இங்கிலிஷ் பாஷையில் இது கோறமாண்டல் கரையென்றும் வழங்குகிறது.

## மலையாளம் (Malabar) ஜில்லா

**எல்லைகள்.**—வடக்கே தென்கன்னட ஜில்லாவும், கிழக்கே குடகு, மைசூர் ராச்சியங்களும், நீலகிரி, கோயம்புத்தூர் ஜில்லாக்களும், தெற்கே கொச்சி ராச்சியமும், மேற்கே அரபிக்கடலும் இந்த ஜில்லாவின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 5,795 சதுரமைல். இதின் நீளம் கரையோரமாய் 145 மைல்; அகலம் வடக்கில் 25 மைலும், கிழக்கே செல்லச் செல்ல மிகவும் அகன்ற விடத்தில் 70 மைல் வரையிலும் வேறுபடுகிறது. இந்த ஜில்லாவில் 17 தாலுகாக்களிருக்கின்றன. பிராஞ்சுக்காரருடைய குடியேற்றமாகிய மாஹி இந்த ஜில்லாவுக்குள்ளிருக்கிறது. தென் லக்ஷ தீவுகள் (South Laccadives) மலையாளம் ஜில்லா கலெக்டர்துரை அவர்கள் ஆதீனத்துக்குட்பட்டவை.

**இயற்கையமைப்பு.**—மேற்குத்தொடர்ச்சிமலைகளின் பாகமும் இம்மலைகளுக்கும் கடலுக்கும் இடையிலுள்ள துண்டு நிலமும் சேர்ந்து இந்த ஜில்லாவாகிறது. இம்மலைகள் இந்த ஜில்லாவில் 3,000 அடிமுதல் 5,000 அடிவரை உயரமுள்ளவை. இவைகளிலிருந்து சிறுமலைத் தொடர்ச்சிகள் கடற்கரையை நோக்கிச் செல்லுகின்றன. தெற்கிலுள்ள நீலகிரி மலை 7,000 அடி உயரமுள்ளது. இதற்குத் தெற்கேயுள்ள கணவாய் பாலக்காட்டுக் கணவாய் எனப்படும். இன்னும் தெற்கில் ஆனைமலை இருக்கிறது. இந்த ஜில்லாவிலிருக்கும் ஏராளமான ஆறுகள் நீண்ட பள்ளத்தாக்குகள் வழியாய்க் கடற்கரைமட்டும் செல்லுகின்றன. அங்கே அவைகள் கடல் நீரோட்டத்தோடு சேர்ந்து ஒரே வரிசையான கழிகளாக அமைந்திருக்கின்றன. தெற்கேயிருக்கும் பொன்னுனி இந்த ஜில்லாவின் முக்கிய நதி.

பாலக்காட்டுக் கணவாயென்ற விசேஷித்த பிளப்பு 25 மைல் அகலமுள்ளது. தெற்கே அண்ணுமலை மலைகள் நீலகிரியிலு மதிகமாய் உயர்ந்திருக்கின்றன. இக்கணவாய் வழியாய் அடிக்கும் மேல்காற்றுகளினுல் கோயம்புத்தூரில் குளிர்ந்த ஆகாயமும் நல்ல மழையும் உண்டாகிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்த ஜில்லா ஈரமானது; தென்மேற்குப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் மூலமாய்க் கடற்கரையில் ஏறக்குறைய 120 அங்குல மழையும், கணவாய் மலைகளில் 150 முதல் 200 அங்குலம் மழையும் பெய்கிறது.

**ஜனங்கள்.**—1901-ம் வருஷத்து ஜனத்தொகையில் இந்த ஜில்லா இவ்விராசதானியிலுள்ள ஜில்லாக்களில் இரண்டாவது. பத்தில் ஏழுபங்கு இந்துக்கள். ஏழில் இரண்டுபங்கு மகமதியர். ஐம்பத்தைந்தில் ஒருபங்கு கிறிஸ்தவர்கள். இந்த ஜில்லாவில் வழங்கும் பாஷை **மலையாளம்.** ஆனுல் பாலக்காட்டுத் தாலுக்காவில் தமிழ் நாட்டிலிருந்து போய்க் குடியேறியிருக்கும் சில ஜனங்கள் **தமிழ்** பேசுகிருர்கள்.

இவ்விடத்துப் பிராமணர்களுக்கு **நம்பூரிக**ளென்று பெயர். மூத்தமகன்மாத்திரம் கலியாணஞ் செய்து சொத்துக்களைச் சுதந்தரித்துக்கொள்ளுகிருன். பெண்கள் வெகுகாலம்வரை கலியாணம் செய்துகொள்ளாமலிருக்கலாம். சிலர் கலியாணம் செய்யாமலே இறந்துபோகிறதுண்டு. இவ்விடத்து உயர்ந்த ஜாதி வேளாளர்களுக்கு **நாயர்கள்** என்று பெயர். இவர்களுடைய கலியாண ஒழுங்குகள் சிறந்தவையல்ல. பெண்வழியாகத்தான் சொத்துப் பாத்தியதை இறங்குகிறது. ஒரு மனுஷனுடைய சொத்துக்குப் பாத்தியமுள்ளவர்கள் அவனுடைய ஆண்பிள்ளைகளல்ல; அவனுடைய சகோதரியினுடைய பிள்ளைகள். இவ்விடத்திலுள்ள மகமதியர்களுக்கு **மாப்பிள்ளைக**ளென்று பெயர். இவர்கள் பல ஜாதிகளிலுமிருந்து மகமதிய மார்க்கத்துக்கு வந்தவர்கள்.

**விளைவு.**—இந்த ஜில்லாவில் முக்கியமாய்ப் பயிராகிறது நெல். இதற்கு அடுத்தது தேங்காய், மிளகு, இஞ்சி, கொட்டைமுத்து ஆகிய இவைகள் அங்கங்கே விளைகின்றன. மலைகளில் காப்பிச்செடி பயிராகிறது. காடுகளில் தேக்கு மரங்கள் அகப்படுகின்றன.

**கைத்தொழில்கள்.**—இவ்விடத்திலிருக்கும் ஜெர்மன்மிஷன், ஓடுகள் செய்வதற்கும், நெசவு தொழிலுக்கும் பேர்பெற்றது.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.** — சென்னை இருப்புப் பாதை பாலக்காட்டுக் கணவாய் வழியாய் இந்த ஜில்லாவுக்குள் பிரவேசித்து வேப்பூருக்குப் போய், பிறகு வடக்கே கடற்கரையோரமாய்க் கள்ளிக்கோட்டை, தலைச்சேரி, கன்ணனூர் முதலிய இடங்களுக்குச் செல்லுகிறது. இந்த ஜில்லாவில் நல்ல தெருக்களும் அநேக மைல் தூரத்துக்குப் படவுகள் போக்குவரவுக்கேற்ற ஆறுகளும் உண்டு. கடற்கரையோரத்தில் கழிகள் கால்வாய்கள்மூலமாய்ப் போக்குவரவு நடக்கின்றன.

**பட்டணங்கள்.** — இந்த ஜில்லாவிலுள்ள பட்டணங்களிலெல்லாம் மிகவும் பெரிய பட்டணமாகிய **கள்ளிக்கோட்டை** இதின் முக்கிய ஸ்தானம். இந்த ராசதானியிலிது நாலாவது பட்டணம். இது ஒரு முக்கிய துறைமுகப்பட்டணம். பூர்விகத்தில் இப்பட்டணம் தாமூதிரி ராசாக்களின் ராசதானியாயிருந்தது. இந்த ராசாக்களின் பின் சந்ததியார் இன்னும் இந்தப் பட்டணத்தில் வசிக்கிறார்கள். வாஸ்கொடிகாமா 1498-ம் வருஷத்தில் இங்கேதான் வந்திறங்கினார்.

கள்ளிக்கோட்டைக்குத் தெற்கே 6 மைல் தூரத்திலிருக்கும் **வேப்பூர்** ஒரு சிறிய துறைமுகம். கள்ளிக்கோட்டைக்கு வடக்கே ஏறக்குறைய 40 மைல் தூரத்திலிருக்கும் **தலைச்சேரி** ஒரு பெரிய துறைமுகம். இதிலிருந்து மிளகு, காப்பிக்கொட்டை, இஞ்சி முதலியவை ஏற்றுமதியாகின்றன. தலைச்சேரிக்கு வடக்கே 12 மைல் தூரத்திலிருக்கும் **கன்னனூரும்** ஒரு துறைமுகம். இது மலையாளம் ஜில்லாவிலிருக்கும் முக்கியமான ராணுவஸ்தலம். கணவாய் மலைகளுக்கப்பால் வயநாட்டுத் தாலுக்காவிலுள்ள **மானந்தவாடி** காப்பிக்கொட்டை விளையும் ஜில்லாவின் மத்தியிலிருக்கிறது. **பாலக்காடு** பாலக்காட்டுக் கணவாயிலுள்ள ஒரு பெரிய உள்நாட்டுப் பட்டணம். இப்பட்டணத்திற்குச் சென்னை இருப்புப்பாதையிலிருந்து ஒரு சிறு கிளைப்பாதை போகிறது. பொன்னணியாற்றின் முகத்துவாரத்திலுள்ள **பொன்னணி** அதிக வியாபார முயற்சியுள்ள ஒரு துறைமுகம். கொச்சி மலையாளம் ஜில்லா

வின் தென்கோடியிலுள்ள துறைமுகம். இதைச் சுற்றிலும் கொச்சிராச்சியம் இருக்கிறது. கோச்சி யூதருடைய குடியேற்றத்துக்குப் பேர்போனது. 1503-ம் வருஷத்தில் போர்த்துக்கீஸ் தேசத்தார் இந்த இடத்தில் கட்டிய கோட்டை இந்தியாவில் ஐரோப்பியர் கட்டிய கோட்டைகளிலெல்லாம் முதலாவது கோட்டை. இந்த இடம் பிறகு டச்சுக்காரர் ஆதீனத்திற்குள் வந்தது. 1814-ம் வருஷத்தில் இங்கிலிஷ்காருக்கு இது கிடைத்தது.

## ஜில்லாக்களில் ஒன்றுக்கொன்றிருக்கும் தாரதம்மியம்

**விஸ்தீரணம்.** — ஏஜென்ஸி உள்பட விசாகபட்டணம் ஜில்லா ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் பெரியது. நெல்லூர், கடப்பை, மதுரை, கிருஷ்ணு ஜில்லாக்கள் விஸ்தீரணத்தில் இதற்கு அடுத்தவை. சென்னபட்டணம், நீலகிரி, செங்கற்பட்டு ஜில்லாக்கள் ராசதானியிலுள்ள ஜில்லாக்களிலெல்லாம் சிறியவை.

**சீதோஷ்ணஸ்திதி.**—ராசதானியில் தென்கன்னடம், மலையாளம் ஜில்லாக்கள் அதிகமாய் மழை பெய்யும் ஜில்லாக்கள். அனந்தபுரம், பல்லாரி ஜில்லாக்களில் பெய்யும் மழை மிகவும் சொற்பம்.

### விளைபொருட்கள்

**உலோகங்கள்.** — மலையாளம், சேலம் ஜில்லாக்களில் இரும்பு ஏராளமாய் அகப்படுகிறது. வயநாட்டில் தங்கம் வெட்டி எடுக்கிறார்கள். கர்னூல் ஜில்லாவில் சில சிறிய இரத்தினச் சுரங்கங்களிருக்கின்றன.

**தாபரவர்க்கங்கள்.** — அதிகமாய் நெல் விளையும் ஜில்லாக்கள்.—தஞ்சாவூர், கோதாவரி, கிருஷ்ணு, மலையாளம், தென்கன்னடம்.

அதிகமாய் சோளம் விளையும் ஜில்லாக்கள்.—பல்லாரி, கர்னூல், கோயம்புத்தூர்.

கம்பு விளையும் ஜில்லாக்கள்.—கோயம்புத்தூர், தென் ஆறுகாடு, சேலம்.

கேழ்வரகு விளையும் ஜில்லாக்கள்.—சேலம், கோயம்புத்தூர்.

காணம் விளையும் ஜில்லாக்கள்.-கோயம்புத்தூர், பல்லாரி.

புகையிலை விளையும் ஜில்லாக்கள்.—மதுரை, கிருஷ்ணு, கோதாவரி.

பருத்தி விளையும் ஜில்லாக்கள். — பல்லாரி, திருநெல்வேலி, கர்னூல், கிருஷ்ணு, கோயம்புத்தூர்.

அவுரி விளையும் ஜில்லாக்கள்.—தென் ஆறுகாடு, நெல்லூர், கடப்பை.

## ஜனங்கள்

ராசதானியில் அதிக ஜனத்தொகையுள்ள ஜில்லாக்கள்.—விசாகபட்டணம், மதுரை, மலையாளம், தென் ஆறுகாடு, தஞ்சாவூர்.

சொற்ப ஜனத்தொகையுள்ள ஜில்லாக்கள்.—நீலகிரி, சென்னபட்டணம், அனந்தபுரம், கர்னூல், பல்லாரி.

சென்னை நகரத்தைத்தவிர தஞ்சாவூர், மலையாளம், தென் ஆறுகாடு, செங்கற்பட்டு ஜில்லாக்கள் அதிக ஜன நெருக்கமுள்ளவைகள்.

ஜனங்கள் மிகவும் சொற்பமாய்க் குடியிருக்கும் ஜில்லாக்கள்.—நீலகிரி, கர்னூல், அனந்தபுரம், கடப்பை, பல்லாரி.

## ராசதானியிலுள்ள பட்டணங்களின் ஜனத்தொகை.

சென்னபட்டணம், 509,000. மதுரை, 106,000. திருச்சிறுப்பள்ளி, 105,000. கள்ளிக்கோட்டை, 77,000. சேலம், 71,000. கும்பகோணம், 60,000. பல்லாரி, 59,000. தஞ்சாவூர், 58,000. நாகபட்டணம், 57,000. கோயம்புத்தூர், 53,000. கூடலூர், 52,000. காக்கிநாடா, 48,000. காஞ்சிபுரம், 46,000. இதற்கடுத்தவை, பாலக்காடு, மங்களூர், வேலூர், விசாகபட்டணம், திருநெல்வேலி. இப்பட்டணங்களில் ஒவ்வொன்றின் ஜனத்தொகை 40,000—க்கு அதிகம்.

## சென்னை ராசதானியைச்சேர்ந்த
# சுதேச ராச்சியங்கள்
## திருவாங்கூர் ராச்சியம்


**எல்லைகள்.**—திருவாங்கூர் ராச்சியம் இந்தியாவின் தென் மேற்குக் கோடியிலிருக்கிறது. வடக்கே கொச்சி ராச்சியமும், கோயம்புத்தூர் ஜில்லாவும்; கிழக்கே மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களும்; தெற்கேயும் மேற்கேயும் இந்து மகா சமுத்திரமும் இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 6,730 சதுரமைல். விஸ்தீரணத்தில் இது ஏறக்குறைய பல்லாரி ஜில்லாவுக்குச் சரி. இதின் அதிக நீளம் 175 மைலும், அதிக அகலம் 75 மைலுமாம்.

**இயற்கையமைப்பு.**—கிழக்கில் கணவாய் மலைத்தொடர் சில இடங்களில் 8,000 அடிமட்டும் உயர்ந்திருக்கின்றன. வடக்கே **அண்ணமலை** மலைகளும், தெற்கே **ஏலக்காய் மலைகளும்** (Cardamom Hills) இம்மலைத்தொடரி லிருக்கின்றன. தாம்பிரபரணி உற்பத்தியாகிற **அகஸ்தியமலை** தெற்கேயுள்ள முக்கியமான ஒரு சிகரம். இதின் உயரம் 6,200 அடி. கடற்கரையோரமாயுள்ள சமவெளிகளில் நெல்வயல்களும், தென்னந்தோப்புகளும், பாக்குமரச் சோலைகளுமிருக்கின்றன. எண்ணிறந்த ஆறுகள் கணவாய் மலைகளில் உற்பத்தியாகிக் கடலில் விழுகின்றன. இவைகளில் முக்கியமான ஆறு **பெரியாறு**. இதில் 60 மைல் தூரத்திற்குப் படவுகள் போக்குவரவு செய்யக்கூடும். இது கொடங்கலூருக்கருகில் கடலில் விழுகிறது.

**சீதோஷ்ணஸ்திதி.**—கடற்கரைப்பக்கம் உஷ்ணமும் ஈரமுமானது. மலைகளின்மேல் குளிர்ச்சியாயிருக்கிறது. இந்த ராச்சியத்தில் பெய்யும் மழை மிகவும் அதிகம்.

**ஜனங்கள்.**—இதின் ஜனத்தொகை ஏறக்குறைய 27 லக்ஷம். இவர்களில் ஏறக்குறைய ஐந்தில் ஒருபங்கு **கிறிஸ்தவர்கள்.** பதினேழி லொருபங்கு **மகமதியர்.** மீதியானவர்கள் **இந்துக்கள்.**

கிறிஸ்தவர்களின் தொகை ஏறக்குறைய 5 லக்ஷம். கொச்சி ராச்சியத்தைத் தவிர இந்தியாவின் வேறெந்த பாகத்திலாவது கிறிஸ்தவர்களின் தொகை இவ்வளவு அதிகமில்லை.




திருவாங்கூர், கொச்சி ராஜ்யம்

இவர்களில் பாதிக்குமேல் சீரியா நாட்டுக் கிறிஸ்தவர்கள். ஆதிகாலந்தொடுத்து இவர்கள் இந்த நாட்டிலிருக்கிறார்கள். இவ்விடத்திலிருக்கும் மகமதியர்களுக்கு மாப்பிள்ளைகள் என்று பெயர். இவ்விடத்துப் பிராமணர்களுக்கு நம்பூரிகளென்று பெயர். மலையாளம் ஜில்லாவிலிருக்கிறதுபோல இந்த ராச்சியத்திலுமிருக்கும் இன்னொரு முக்கியமான ஜாதி

யார் நாயர்கள். திருவனந்தபுரத்திற்குத் தெற்கே தமிழும் வடக்கே மலையாளமும் பேசுகிறார்கள்.

அரசாட்சி.—இந்த ராச்சியத்தை ஆளுகிறவர் ஒரு மகாராசா. இவர் இங்கிலிஷ் துரைத்தனத்தாருக்குக் கப்பம் கட்டிவருகிறார். இந்த ராச்சியத்தில் 31 தாலுகாக்களிருக்கின்றன. திருவாங்கூர் ராச்சியத்தில் இங்கிலிஷ் துரைத்தனத்தாருக்குள்ள காரியங்களை மேற்பார்க்க (பிரிட்டிஷ். ரெசிடென்ற்) என்னும் பிறதேச மந்திரி ஒருவர் இவ்விடத்தில் இருக்கிறார். நாயர் பிரிகேட் என்ற ஒரு சிறிய பட்டாளமும் இங்கே இருக்கிறது.

மலையாள நாடு முழுவதும் கடலுக்குள் மூழ்கியிருந்ததாகவும் பரசுராமன் கடலைத் துரத்தி இந்நாட்டில் நம்பூரி பிராமணர்களைக் குடியேற்றினதாகவும் ஒரு பழைய கதையுண்டு. இந்நாட்டை ஆண்டவர்களில் பேர்பெற்றவன் சேரமான் பெருமாள் (சேர ராசாக்களின் பிரதிநிதி). இவன் தன் ராச்சியத்தைத் தனக்குட்பட்ட அதிபதிகளுக்குப் பிரித்துக் கொடுத்தான்.

விளைவு.—நெற்பயிரும், தென்னமரமும் இந்நாட்டில முக்கியமாய்ப் பயிராகிறது. மிளகும், பாக்கும் மிகுதியாய் விளைகின்றன. மலைகளில் ஏலக்காய்ச் செடிகள் பயிர் செய்யாமலே ஏராளமாய் உண்டாகின்றன. இவ்விடத்தில் காப்பி, தேயிலைச் செடிகள் பயிர் செய்கிறார்கள். காடுகளில் நேர்த்தியான வெட்டுமரங்கள் அகப்படுகின்றன. மலைகளில் யானைகள் விசேஷம். அவைகளின் தந்தம் இந்த ராச்சியத்திற்கு அதிக வரும்படியைத் தருகிறது.

போக்குவரவுக்கேற்ற சாதனங்கள். — தென்னிந்திய இருப்புப்பாதை திருநெல்வேலியிலிருந்து கொல்லம்வரை போகிறது. இந்த இருப்புப்பாதையை இப்போதுதான் புதிதாய்ப் போட்டிருக்கிறார்கள். கடற்கரையோரமாய் ஒன்றின்பின் ஒன்றாய் அமைந்திருக்கும் கழிகள் கால்வாய்களால் இணைக்கப்பட்டு போக்குவரவுக்கு அதிகமாய் உபயோகமாகின்றன. அங்கங்கே நல்ல தெருக்களும் போட்டுவருகிறார்கள்.

பட்டணங்கள். — கடற்கரையிலிருக்கும் திருவனந்தபுரம் இந்த ராச்சியத்தின் ராசதானி. இவ்விடத்தில் மகாராசா

வால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு பெரிய கல்விச்சாலை யிருக்கிறது. இப்போது ஒரு சிறிய கிராமமாயிருக்கிற திருவாங்கோடு பூர்விக ராசதானி. கோல்லம் ஆதிகாலத்துத் துறைமுகம். இவ்விடத்தில் நாயர் பிரிகேட் என்ற பட்டாளமிருக்கிறது. கிழக்குக் கரையிலிருந்து இவ்விடத்திற்குத் தென்னிந்திய இருப்புப்பாதையின் ஒரு கிளை செல்லுகிறது. வடக்கிலிருக்கும் ஆலப்பிழை இந்த ராச்சியத்தில் இரண்டாவது பட்டணம். இது முக்கியமான ஒரு துறைமுகம். ஆலப்பிழைக்கு வடகிழக்கேயிருக்கும் கோட்டயம் சீரியா நாட்டுக் கிறிஸ்தவர்களின் முக்கியமான இடம். தெற்கேயிருக்கும் நாகர்கோவில் ஓர் விசேஷித்த மிஷன் ஸ்தானம். கோளச்சல் கன்னியாகுமரிக்கு அருகேயிருக்கும் ஓர் சிறிய துறைமுகம்.

## கோச்சி ராச்சியம்

**எல்லைகள்.**—மேற்கேயும், வடக்கேயும், வடகிழக்கேயும் மலையாளம் ஜில்லாவும், தென்கிழக்கே கோயம்புத்தூர் ஜில்லாவும் திருவாங்கூர் ராச்சியமும் இதின் எல்லைகள்.

**இயற்கையமைப்பு.**—கணவாய் மலைகளின் மேற்குச் சரிவுகளும், இவைகளுக்கும் கடற்கரைக்கு மிடையிலுள்ள துண்டு நிலமும் இந்த ராச்சியத்தில் அடங்கியவை. எண்ணிறந்த சிற்றாறுகள் மலைகளி லுற்பத்தியாகிக் கழிகளில் விழுகின்றன. இக்கழிகள் ஏரிகளாகவும் ஒடுக்கமான கால்வாய்களாகவும் பிரிந்திருக்கின்றன.

**சீதோஷ்ணஸ்திதி.**—இந்நாடு ஈரமான பூமி. ஆனாலும் சுகத்துக்கேற்றது. இவ்விடத்தில் பெய்யும் மழை அதிகம்.

**ஜனங்கள்.**—ஜனத்தொகை ஏறக்குறைய $7\frac{1}{2}$லக்ஷம். நூற்றில் இருபத்திரண்டுபேர் கிறிஸ்தவர்கள். இந்தியாவின் மற்ற எவ்விடத்திலாவது இந்த ராச்சியத்திற்போல் நூற்றில் இருபத்திரண்டுபேர் கிறிஸ்தவர்களில்லை. இவர்களி லநேகர் சீரியா நாட்டுக் கிறிஸ்தவர்கள். இவ்விடத்தில் ஏறக்குறைய எல்லாப் படவுக்காரரும் மீன்பிடிகாரரும் இவர்களைச்சேர்ந்த கிறிஸ்தவர்கள். இருபதில் ஒருபங்கு மகமதியர். சில யூதர்களைத்தவிர மீதியானவர்கள் இந்துக்கள். இந்த நாட்

டில் வழங்கும் பாஷை மலையாளம். ஆனால் அங்கங்கே சிலர் தமிழ் பேசுகிறார்கள்.

**விளைவு.**—இவ்விடத்திலுள்ள முக்கியமான பயிர் நெல். தென்னைமரம் இந்த நாட்டில் நெற்பயிருக்கு இரண்டாவதானது. கயிறு, தேங்காயெண்ணெய், கொப்பரைத்தேங்காய், தேங்காய் ஆகிய இவைகள் அதின் முக்கியமான ஏற்றுமதிகள். தினை தானியங்கள், பயறுகள், காப்பிக்கொட்டை, அவுரி, வெற்றிலை, பாக்கு, ஏலக்காய், இஞ்சி; மிளகு ஆகிய இவைகள் இவ்விடத்திலுள்ள வேறு விளைபொருட்கள். காடுகளில் தேக்கு முதலிய வெட்டுமரங்கள் அகப்படுகின்றன.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.**—இந்த ராச்சியத்தின் அநேக பாகங்களில் போக்குவரவுக்கேற்ற கழிகளும், கால்வாய்களு மிருக்கின்றன. சென்னை இருப்புப்பாதையின்மேலிருக்கும் சோரனூரிலிருந்து கொச்சிக்கு ஒரு கிளைப்பாதை செல்லுகிறது.

**அரசாட்சி.**—இந்த ராச்சியமும் ஒரு ராசாவின் ஆளுகைக்குட்பட்டது. இதிலுள்ள தாலுகாக்கள் ஏழு.

**பட்டணங்கள்.**—கொச்சிக்குக் கிழக்கே இரண்டுமைல் தூரத்திலிருக்கும் எறணாகுளம் இந்த ராச்சியத்தின் ராசதானி. இதில் ஒரு வித்தியாசாலையும் உயர்ந்த வகுப்புப் பள்ளிக்கூடமுமிருக்கிறது. எறணாகுளத்திற்குக் கிழக்கே 6 மைல் தூரத்திலிருக்கும் திருப்பூந்துறையில் ராசா வசிக்கிறார். பூர்வீக ராசதானியாகிய கோச்சி இங்கிலிஷ் துரைத்தனத்தைச் சேர்ந்த கொச்சிக்கு அருகே இருக்கிறது. திருச்சூர் வடக்கேயுள்ள பட்டணங்களில் பெரியது. இப்பட்டணத்திற்கும், கொச்சி, பாலக்காட்டுப் பட்டணங்களுக்கும் அதிக வியாபாரம் நடக்கிறது.

## புதுக்கோட்டை

தொண்டமான் தேசமென்ற புதுக்கோட்டை ராச்சியம் ஒரு சிறிய சுதேச ராச்சியம். அதைச் சூழ எப்பக்கத்திலும் இங்கிலிஷ் துரைத்தனத்தைச்சேர்ந்த தஞ்சாவூர், திருச்சிறாப்பள்ளி, மதுரை ஜில்லாக்களிருக்கின்றன. 1901—ம் வருஷத்து ஜனத்தொகை 380,440. இந்தத் தேசம் அநேக

இடங்களில் சமபூமியாயிருக்கிறது. நெல்லும், புன்செய் தானியங்களும் முக்கியமான விளைபொருட்கள். இந்த ராச்சியத்தை ஆளுகிற அரசர்களுக்குத் தொண்டமான் என்ற குடும்பப்பெயர் உண்டு. இதற்கு ஆளுகிறவன் என்று அர்த்தம். முக்கியமான ஸ்தானம் புதுக்கோட்டை. இவ் விடத்தில் ராசாவின் சம்ரக்ஷணைக்குள்ளான ஒரு வித்தியா சாலை யிருக்கிறது.

# இந்திய துரைத்தனத்துக்குட்பட்ட சுதேச ராச்சியங்கள்

## ஐதராபாத்து

**எல்லைகள்.**—நைஜாம் ராச்சியம் என்ற ஐதராபாத்து இந்தியாவிலுள்ள சுதேச ராச்சியங்களிலெல்லாம் மிகவும் பெரிதும் முக்கியமுமானது. வடகிழக்கே மத்திய மாகாணமும், தெற்கே சென்னை ராசதானியும், மேற்கே பம்பாய் ராசதானியும் இந்த ராச்சியத்தின் எல்லைகள். பீரார் மாகாணம் உள்பட இந்த ராச்சியத்தின் விஸ்தீரணம் 100,435 சதுரமைல். விஸ்தீரணத்தில் இது மைசூர் ராச்சியத்தை விட நாலுமடங்கு பெரியது.

**இயற்கையமைப்பு.**—இந்நாடு முழுவதும் தட்சண பீடபூமியின் (The Deccan) ஓர் பாகம். இது கடல்மட்டத்துக்கு மேல் சராசரி 1,250 அடி உயரமுள்ளது; சில சிகரங்கள் 2,500 அடிமட்டும் உயரமாயிருக்கின்றன. இப்பூமி வட மேற்கிலிருந்து தென்கிழக்காய்ச் சரிந்திருக்கிறது. இந்நாட்டின் வடகிழக்கு எல்லையாயிருக்கிற கோதாவரிநதியும் இதின் உபநதிகளாகிய பெயின்கங்கை, பிரான்ஹீதை நதிகளும் இந்த ராச்சியத்தின் வடபாகங்களை நீர்ப்பாய்ச்சுகின்றன. துங்கபத்திரா, கிருஷ்ணா நதிகள் இந்நாட்டின் தென் எல்லையாயிருக்கின்றன.

**சீதோஷ்ணஸ்திதி.**—ஏப்பிரல் மாதமுதல் ஜூன் மாதம் வரை இந்த நாடு வறட்சியும் மிகவும் உஷ்ணமுமானது. ஒரு வருஷத்தில் பெய்யும் மழை ஏறக்குறைய 30 அங்குலம்.

**ஜனங்கள்.**—பீரார் மாகாணத்தைச் சேர்க்காமல் இந்நாட்டின் ஜனத்தொகை 11,174,000. இதில் பத்தில் ஒரு பங்கு மகமதியர். மீதியானவர்கள் இந்துக்கள். மகமதியர் வழங்கும் பாஷை இந்துஸ்தானி. தென்கிழக்கில் தெலுங்கும் வடமேற்கில் மகராஷ்டிரமும், தென்கிழக்கில் கன்னடமும் இந்தத் தேசத்தில் வழங்கும் வேறு பாஷைகள். சில அராபியரும் ரோஹிலரும் இந்நாட்டில் வசிக்கிறார்கள்.

**அரசாட்சி.**—ஐதராபாத்து தேசத்தை ஆளும் நைஜாம் என்பவர் இந்தியாவிலுள்ள மகமதிய அரசர்களில் முதன்மையானவர். இந்தத் தேசம் கல்கத்தாவிலிருக்கும் ராசப் பிரதிநிதியின் அதிகாரத்திற் குட்பட்டது. அவர் தமக்குப் பதிலாக இந்நாட்டில் தம்முடைய காரியங்களைப் பார்க்கும்படி ஒருவரை நியமித்திருக்கிறார். அவருக்கு இங்கிலிஷ் பாஷையில் ரேசிடேன்ற் என்று பெயர். நைஜாம்ஸ் கண்டின்ஜேன்ற் என்ற சேனை இங்கிலிஷ் உத்தியோகஸ்தருக் குட்பட்டிருக்கிறது.


தக்ஷணத்து சுபதாராயிருந்த அசவ்சா, அவுரங்கஜீப் இறந்தவுடன் தான் மொகலாய ராச்சியத்திற் குட்பட்டவனல்ல என்று சொல்லி தேசத்தை ஒழுங்கு செய்வோன் என்றர்த்தமுள்ள நைஜாம்—உல்—முல்க் என்னும் பெயரைச் சூடிக்கொண்டான்.

**விளைவு.**—மேற்கிலும் தெற்கிலுமிருக்கும் அதிகமான நிலம் பருத்தி விளையும் கரிசல் நிலம். மற்றப் பாகங்களிலிருப்பது செம்மண் தரை. நெல், கோதுமை, தினை தானியங்கள், சோளம், கொட்டைமுத்து, காணம், பருத்தி, அவுரி ஆகிய இவைகள் முக்கியமான விளைபொருட்கள்.

**கைத்தொழில்கள்.**—உலோகங்களினால் பாத்திரம் முதலியவைகள் செய்தலும், துணி நெய்தலும் இந்நாட்டின் முக்கியமான கைத்தொழில்கள். தென்கிழக்கிலிருக்கும் சிங்கரேணி என்னுமிடத்தில் சுரங்கங்களிலிருந்து நிலக்கரி வெட்டி எடுக்கிறார்கள்.

**இருப்புப்பாதைகள்.**—ஐதராபாத்தின் தென்மேற்குப் பாகங்களின் வழியாய் சென்னபட்டணத்திலிருந்து பம்பாய்க்குப் போகும் இருப்புப்பாதை செல்லுகிறது. ரேய்ச்சூருக்குத்-

தெற்கேயிருக்கும் இருப்புப்பாதை சென்னை இருப்புப்பாதையையும் அதற்கு வடக்கிலுள்ளது பெரிய இந்திய தீபகற்ப இருப்புப்பாதையையும் சேர்ந்தது. வடக்கேயுள்ள இருப்புப்பாதையின்மேலிருக்கும் வாடி என்னு மிடத்தி




ஐதராபாத்தும் பீரார் மாகாணமும்

லிருந்து நைஜாம் ராச்சிய இருப்புப்பாதை என்ற ஒரு கிளைப்பாதை ஐதராபாத்துக்கும் இதிலிருந்து பெஜவாடாவுக்கும் போகிறது. இதின் நீளம் 121 மைல். இதிலிருந்து ஒரு சிறு கிளைப்பாதை சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களுக்குச் செல்லுகிறது.

**பட்டணங்கள்.**—கிருஷ்ண நதியின் உபநதியாகிய மூசியாற்றின் கரையிலிருக்கும் ஐதராபாத்து இந்த ராச்சியத்தின் ராசதானி. தென்னிந்தியாவிலிருக்கும் பட்டணங்களில் இது சென்னபட்டணத்திற்கு இரண்டாவது. இதில் அரபியர்க

ளும், பட்டாணிகளு மிருக்கிறார்கள். இவ்விடத்தி லநேகர் ஆயுதந் தரித்து வெளியே போவார்கள். இதிலிருந்து வடக்கில் 11 மைல் தூரத்திலுள்ள போலாரம் என்னுமிடத்தில் நைஜாமுடைய சேனைகளும் வடகிழக்கே ஆறுமைல் தூரத்திலிருக்கும் சிக்கந்தராபாத்தில் இங்கிலிஷ்காரருடைய சேனைகளுமிருக்கின்றன. மேற்கே பழுமைல் தூரத்திலிருக்கும் கோல்கோண்டா இந்த ராச்சியத்தின் பூர்விக ராசதானி. இது வயிர மணிகளுக்குப் பேர்போன இடம். ஐதராபாத்துக்கு வடகிழக்கே இருப்புப்பாதையின்மேலிருக்கும் உவாரங்கல் தெலிங்கானு அல்லது ஆந்திர என்னும் இந்து ராச்சியத்தின் ராசதானியாயிருந்தது. வடமேற்கேயிருக்கும் பீடரும் தீபகற்ப இருப்புப்பாதையின்மேலிருக்கும் கூல்பர்காவும் பாமினி அரசர்களின் ராசதானிகளாயிருந்தன. வடமேற்கேயிருக்கும் அவுரங்கபாத்து அவுரங்கஜீப் அரசனின் பிரியமான நகரம். இதனருகேயிருக்கும் தௌலத்தபாத்து என்னும் தேவகிரி மகமது டோக்லாக் அரசன் டில்லி நகரத்துக்குப் பதிலாகத் தன்னுடைய ராசதானியாக்கப் பிரயாசப்பட்ட இடம். அவுரங்கபாத்துக்கு வடகிழக்கேயிருக்கும் அஸ்ஸே என்னும் கிராமத்தில் உவெல்லெஸ்லி என்பவர் மகாராட்டியரைத் தோற்கடித்தார். அவுரங்கபாத்துக்குக் கிழக்கேயிருக்கும் ஜல்னு ஒரு ராணுவ ஸ்தலம். அவுரங்கபாத்துக்கு வடக்கேயிருக்கும் எல்லோரா, அஜன்று என்னுமிடங்களில் குகைகளில் வெட்டப்பட்டிருக்கும் கோவில்களிருக்கின்றன.

## பீரார் மாகாணம்

**எல்லைகள்.**—பீரார் மாகாணம் ஐதராபாத்துக்கும் மத்திய மாகாணங்களுக்கும் இடையிலிருக்கிறது. இதின் மேற்கு எல்லை பம்பாய் ராசதானி. இங்கிலிஷ்காரருக்குத் தான் செலுத்தவேண்டிய கடனுக்குப் பதிலாக 1853-ம் வருஷத்தில் நைஜாம் இந்நாட்டை அவர்களுக்குக் கொடுத்தபடியால் இதற்கு ஐதராபாத்தார் கொடுத்த ஜில்லாக்கள் எனச் சில சமயங்களில் பெயர் வழங்கிவருகிறது. இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 18,000 சதுரமைல்.

**இயற்கையமைப்பு.**—பீரார் மாகாணம் வடக்கே **சாத்பூரா** மலைத்தொடருக்கும் தெற்கே **அஜன்ரு** மலைத்தொடருக்கும் இடையில் கிழக்கு மேற்காயிருக்கும் ஒரு அகலமான பள்ளத்தாக்கு. **தபதிநதியின்** கிளைநதியாகிய **பூர்ணுநதி** இப்பள்ளத்தாக்கை நீர்ப்பாய்ச்சுகிறது.

**ஜனங்கள்.**—இதின் ஜனத்தொகை ஏறக்குறைய 15 லக்ஷம். இவர்களில் ஏறக்குறைய பத்தி லொருபங்கு மகமதியர். மீதியானவர்களில் கொஞ்சங்குறைய எல்லாரும் இந்துக்கள். இந்நாட்டிலுள்ள மலைகளில் பீலர்கள், காண்டர்கள் முதலிய அநேக காட்டுஜாதியார் வசிக்கிருர்கள். இம்மாகாணத்தில் பொதுவாய் வழங்கும் பாஷை **மகராஷ்டிரம்.** ஆனால் இந்நாட்டின் தென்கிழக்கு மூலைப்பாகத்திலுள்ளவர்கள் **தெலுங்கு** பேசுகிருர்கள்.

**அரசாட்சி.**—இம்மாகாணம் ஐதராபாத்திலிருக்கும் பிரிட்டிஷ் ரெஸிடென்ற் **துரையின்** ஆளுகைக்குள்ளிருக்கிறது. இவர் பீரார் மாகாணத்துக்கு முக்கிய கம்மிஷனர். இவர் கையின்கீழ் அநேக இங்கிலிஷ் உத்தியோகஸ்தர்களிருக்கிருர்கள். இந்நாட்டின் வருமானத்தில் ஒருபாகம் **நைஜாம்ஸ்** கண்டின்ஜென்ற் என்ற ராணுவத்தின் செலவுக்காக உபயோகப்படுகிறது.

**விளைவு.**—இந்தியாவில் பருத்தி மிகவும் நன்ருய் விளையும் நாடுகளில் இம்மாகாணம் ஒன்று. கோதுமை, சோளம், கொட்டைமுத்து ஆகிய இவைகளும் ஏராளமாய்ப் பயிராகின்றன. தென்கிழக்கில் விலையேறப்பெற்ற நிலக்கரி சுரங்கங்களிருக்கின்றன.

**இருப்புப்பாதைகள்.**—பம்பாயிலிருந்து நாகபுரிக்குப் போகும் இருப்புப்பாதை இம்மாகாணத்தின் வழியாய் மேற்கிலிருந்து கிழக்கே செல்லுகிறது.

**பட்டணங்கள்.**-இம்மாகாணத்தின் மத்தியிலுள்ள **அகோலா** இதின் முக்கிய ஸ்தானம். வடகிழக்கிலிருக்கும் **அமராவதி** ஒரு பெரிய பருத்தி வியாபார ஸ்தலம். அகோலாவுக்கு மேற்கேயிருக்கும் **கங்கம்** இன்னெரு பருத்தி வியாபார ஸ்தலம். வடக்கேயிருக்கும் **எலிச்புரம்** ஒருகாலத்தில் மகமதிய ராசதானியாயிருந்தது. இப்போது இது ஓர் ராணுவ

ஸ்தலம். எலிச்புரத்துக்கு மேற்கேயிருக்கும் காவில்கர் மலைக் கோட்டைக்குப் பேர்போனது. அகோலாவுக்கு வடமேற்கே யிருக்கும் ஆர்காம் என்னுமிடத்தில் உவெல்லெஸ்லி என்பவர் மகாராட்டியரை முறியடித்தார். காவில்கர் மலைகளிலிருக்கும் சிக்கெல்தா இம்மாகாணத்தில் ஐரோப்பியர் சுகத்திற்காகப் போகுமிடம்.

## மைசூர் ராச்சியம்


**எல்லைகள்.**—மைசூர் ராச்சியம் தக்ஷிணபீடபூமியின் தென்பாகத்தில் இங்கிலிஷ்காரரின் ஆதரிப்புக்குட்பட்ட ஒரு பெரிய சுதேச ராச்சியம். இந்தப் பீடபூமி, 2,000 அடி முதல் 3,000 அடிவரை கடல்மட்டத்துக்குமேல் உயர்ந்தது. வடக்கே பம்பாய் ராசதானியும், பல்லாரி ஜில்லாவும்; கிழக்கே அனந்தபுரம், கடப்பை, வட ஆறுகாடு ஜில்லாக்களும்; தெற்கே சேலம், கோயம்புத்தூர், நீலகிரி ஜில்லாக்களும்; மேற்கே மலையாளம், தென்கன்னட ஜில்லாக்களும், குடகு ராச்சியமும் இதின் எல்லைகள். இதின் விஸ்தீரணம் 27,936 சதுரமைல். இந்த நாடு விஸ்தீரணத்தில் இலங்கைத் தீவைப்பார்க்கிலும் பெரியது.

மகிஷாசுரன் என்ற ஓர் ராட்சதனால் இந்த நாட்டுக்கு இப்பெயர் வந்தது. இவன் எருமைத்தலை உடையவன். இவனைத் தேவி கொன்றாளென்ற ஒரு கதை உண்டு.

**இயற்கையமைப்பு.**—இந்த் நாட்டின் மேற்குப்பாகத்தில் மேலக்கணவாய் மலைகளைச் சுற்றியிருக்கும் மலைத்தேசத்திற்கு மலைநாடென்றும், மீதியாயிருக்கிற பெரிய பாகத்திற்கு மைதானமென்றும் பெயர். துருக்கங்களென்ற சிறு கற்பாறைக் குன்றுகள் இந்நாடெங்கும் அங்கங்கே யிருக்கின்றன. இவைகளில் முக்கியமானவை நந்தித்துருக்கம் (4,810 அடி), சாவன் துருக்கம், சித்திரதுருக்கம். இவைகளின்மேல் முற்காலத்தில் கோட்டைகளிருந்தன.

மேற்குத்தொடர்ச்சி மலைகளின் சிகரங்களிலெல்லாம் உயர்ந்த சிகரத்திற்குக் குதிரைமுக்கு என்று பெயர். இதின் உயரம் 6,215 அடி. பாபபூதம் அல்லது சந்திரத்ரோணு என்னும் மலைத்தொடர் குதிரை லாட வடிவாயிருக்கிறது. இது

மேற்குத்தொடர்ச்சி மலைத்தொடரின் ஒரு கிளை. முலினகிரி என்னும் இதின் உயர்ந்த சிகரம் 6,317 அடி உயரமுள்ளது. கிழக்குத்தொடர்ச்சிமலைத்தொடரில் எல்லாம் உயர்ந்த பாகத்திற்குப் பிளிகிரி ரங்கன் என்று பெயர்.




மைசூர், குடகு

கிருஷ்ண நதியின் கிளைநதிகளாகிய **துங்கை, பத்திரா, அக்ககிரி**யென்னும் ஆறுகள் இந்நாட்டின் வடபாகங்களை நீர்ப்பாய்ச்சுகின்றன. **வடபெண்ணை, தென்பெண்ணை, பாலாறு** என்னும் நதிகள் மைசூர் ராச்சியத்தில் உற்பத்தியாகின்றன. **காவேரி**யாறும் அதில் விழுகின்ற ஓடைகளும் தெற்கிலுள்ள ஜில்லாக்களை நீர்ப்பாய்ச்சுகின்றன. **சேராவதி** யென்னும் ஒரு

சிற்றுறு மேற்குமுகமாய் ஓடி ஏறக்குறைய 1,000 அடி உயரத்திலிருந்து பிரமாண்டமான அருவியாக விழுகிறது. இது **ஜெர்சப்பா** என்னும் பேர்போன அருவி.

மைசூரில் அநேக குளங்களிருக்கின்றன. இவைகளிலெல்லாம் பெரிதாகிய **சூலிக்கர்** என்ற குளம் 40 மைல் சுற்றளவுள்ளது.

**சீதோஷ்ணஸ்திதி.**—மலைநாட்டில் ஏராளமான மழை பெய்யும். ஆனால் சமவெளிகளில் சில சமயங்களில் தண்ணீர்ப் பஞ்சமுண்டு. இந்த ராச்சியம் உயரமான பூமியாகையால் கீழ்கரை நாட்டைப்பார்க்கிலும் இவ்விடம் அதிக குளிர்ச்சியாயிருக்கிறது.

**ஜனங்கள்.**—இந்த நாட்டின் ஜனத்தொகை கொஞ்சங் குறைய 50 லக்ஷம். ஜனங்களில் மிகுதியான பேர் இந்துக்கள். மகமதியர்கள் 2 லக்ஷம் பேருக்கு அதிகமாயிருக்கிறார்கள். சில சமணர் அங்கங்கே யிருக்கிறார்கள். கிறிஸ்தவர்களின் தொகை ஏறக்குறைய 30,000. **ஒக்களிகள்** என்னும் பயிரிடுங் குடிகள் இந்நாட்டில் அதிக ஜனம்பெருத்த ஒரு ஜாதியார். அநேக காட்டு ஜாதியார் இந்நாட்டிலிருக்கிறார்கள். இந்நாட்டில் வழங்கும் பாஷை **கன்னடம்**. மகமதியர் **இந்துஸ்தானி** பேசுகிறார்கள். கீழ் ஜில்லாக்கள் சிலவற்றில் **தெலுங்கு** பேசுகிறார்கள்.

**அரசாட்சி.**—இந்த ராச்சியத்தை ஒரு மகாராசா ஆளுகிறார். இவர் இந்தியாவை ஆளும் ராசப்பிரதிநிதியின் அதிகாரத்துக் குட்பட்டவர். இங்கே வசிக்கும் ரெஸிடென்ற் துரை ராசப்பிரதிநிதியினுடைய பிரதிநிதி. இவ்விடத்தில் கல்வி அபிவிர்த்திக்காக அதிக பிரயாசம் எடுக்கிறார்கள்.

**சரித்திரம்.**—இந்நாட்டின் புராதன சரித்திரம் ஒருவருக்கும் நன்றாய்த் தெரியாது. இது சுக்கிரீவனுடைய ராச்சியமென்ற ஒரு கட்டுக்கதை யுண்டு. இவருடைய படைத்தலைவனாகிய அனுமான் ராமருக்கு உதவி செய்தானாம். இவ்விடத்திற் பல குடும்பத்தைச்சேர்ந்த அரசர்கள் அரசாட்சி செய்திருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டில் **ஐதர் ஆலி**, **திப்பு சுல்த்தான்** என்பவர்கள் ஆண்டகாலத்தில் இந்த ராச்சியம்

மிகவும் பலப்பட்டது. 1831-ம் வருஷத்தில் இந்நாட்டின் அரசாட்சி கெட்டுப்போயிருந்ததால், இங்கிலிஷ் துரைத்தனத்தார் கொஞ்சக்காலத்திற்கு இதைத் தங்கள் கைக்குள் வைத்து அநேக சீர்திருத்தம் செய்தார்கள். 1881-ம் வருஷத்தில் தகுந்த வயதுவந்த மகாராசாவுக்கு ராச்சியத்தை ஒப்புவித்தார்கள்.

**விளைபொருட்கள்.**—வடக்கிலிருக்கும் நிலம் பருத்தி விளையும் கரிசல் நிலம். கிழக்கிலிருப்பது செம்மண் நிலம். சில விடங்களிலிருப்பது கற்பாங்கானது. முக்கியமான பயிர் கேழ்வரகு. இதுதான் ஜனங்களின் சாதாரண உணவு. மற்ற தானியங்களும், கொட்டைமுத்தும் அங்கங்கே பயிராகின்றன. வடக்கிலுள்ள கரிசல் நிலத்தில் பருத்தி விளைகிறது. மலைநாடுகளில் காப்பியும், பாக்கும் ஏராளமாய் விளைகின்றன. காடுகளில் துரைத்தனத்தாருக்குச் சொந்தமான சந்தனமரங்களிருக்கின்றன. கோலார் ஜில்லாவில் அதிக தங்கம் அகப்படும் சுரங்கங்களிருக்கின்றன. சில விடங்களில் இரும்பு அகப்படுகிறது.

**கைத்தொழில்கள்.**—இரத்தினக் கம்பளம், கம்பளி முதலியவை செய்தல் இந்நாட்டிலுள்ள முக்கிய கைத்தொழில்கள்.

**போக்குவரவுக்கேற்ற சாதனங்கள்.** — இந்த ராச்சியத்தில் நேர்த்தியான தெருக்களிருக்கின்றன. படிப்படியாய் இருப்புப்பாதைகள் அங்கங்கே போட்டுவருகிறார்கள். சென்னை இருப்புப்பாதையிலிருந்து பெங்களூருக்கு ஒரு கிளைப்பாதை செல்லுகிறது. தென் மகராஷ்டிர இருப்புப்பாதை தென் மேற்கேயிருக்கும் பெங்களூரிலிருந்து மைசூருக்குச் சென்று பின்பு வடமேற்கே பம்பாய்க்குப் போகிறது. பெங்களூரிலிருந்து வடக்கே அனந்தபுரம் ஜில்லாவிலிருக்கும் தர்மவரம் வரையில் இன்னொரு இருப்புப்பாதை செல்லுகிறது.

**பிரிவுகள்.**—கிழக்கே நந்தித்துருக்கமும், தெற்கே அஷ்டகிராமமும், வடக்கே நாகூரும் இந்நாட்டின் முக்கிய பிரிவுகள். இவைகள் பல சிறிய ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

**பட்டணங்கள்.**—கிழக்கிலிருக்கும் பெங்களூர் பிரிட்டிஷ் ரெஸிடென்ற் துரை வசிக்குமிடம். இவ்விடத்தில் மைசூர்

மகாராசாவும் வருஷத்திற் சில மாதம் வசிக்கிறார். இது உத்தியோகஸ்தர் வசிக்கும் ஒரு பெரிய பட்டணமாயும், ராணுவஸ்தானமாயு மிருக்கிறது. இதில் கல்விச்சாலைகளும், பேர்பெற்ற தோட்டங்களு மிருக்கின்றன. அது சுகத்துக்கேற்ற இடம்.

இப்பட்டணம் கடல்மட்டத்துக்குமேல் 3,100 அடி உயரமுள்ளது. ஜனத்தொகையில் இந்தப் பட்டணம் தென்னிந்தியாவில் மூன்றாவது. இதின் ஜனத்தொகை ஏறக்குறைய 180,000.

தெற்கிலுள்ள மைசூர் இந்த நாட்டின் பூர்விக ராசதானி. இதில் மகாராசா பெரும்பாலும் வசிக்கிறார். இவ்விடத்திலிருந்து பெங்களூருக்கு ஒரு இருப்புப்பாதை போகிறது. இதில் பெரிய பள்ளிக்கூடங்களிருக்கின்றன. மைசூரிலிருந்து 10 மைல் தூரத்தில் காவேரியாற்றின் ஒரு தீவின் மேலிருக்கும் ஸ்ரீரங்கபட்டணம் இந்த ராச்சியத்தை ஆண்ட ஐதர் ஆலி, திப்பு சுல்த்தான் என்பவர்களுடைய ராசதானி.

1799-ம் வருஷத்தில் இங்கிலிஷ்காரர் இப்பட்டணத்தைப் பிடிக்கையில் திப்பு யுத்தத்தில் இறந்தான் இந்தப் பட்டணம் அசவுக்கியமான இடமாகையால் இப்பொழுது இதில் ஒருவரும் வசிக்கிறதில்லை. ஐதர் ஆலி பிறந்த இடமாகிய கோலார் ஜோலார்பேட்டைக்குப் போகும் இருப்புப் பாதையின்மேல் பெங்களூருக்குக் கிழக்கேயிருக்கிறது. இதனருகில் தங்கச் சுரங்கங்களிருக்கின்றன. வடக்கிலுள்ள சித்திரதுருக்கம் ஒரு மலைக்கோட்டையின் அடிவாரத்திலிருக்கும் ஒரு புராதன பட்டணம். ஹாசனம் பெங்களூருக்கு மேற்கிலுள்ள ஒரு சிறிய பட்டணம். துங்காநதியின் கரையில் வடமேற்கே சிவமோக்க என்னும் பட்டணமிருக்கிறது.

## குடகு (Coorg) மாகாணம்

**எல்லைகள்.**—இது மைசூர் ராச்சியத்திற்குத் தென்மேற்கே அங்கிலேய துரைத்தனத்தைச்சேர்ந்த ஒரு சிறிய மாகாணம். இதற்கு மேற்கேயும், தெற்கேயும் தென்கன்னடம் மலையாளம் ஜில்லாக்களிருக்கின்றன. இதின் விஸ்தீரணம் ஏறக்குறைய 1,600 சதுரமைல்.

U.211 N14



**இயற்கையமைப்பு.**—மேலக்கணவாய் மலைகளின் கீழ்பாகச் சரிவு இம்மாகாணத்திலிருக்கிறது. இந்நாடு மிகவும் மலைப் பாங்கானது. எண்ணிறந்த சிறிய மலைத்தொடர்கள் கிழக்கைநோக்கிச் செல்லுகின்றன. இந்த மலைகளில் பெரும்பாலும் காப்பித்தோட்டங்க ளிருக்கின்றன. மலைப்பக்கங்களிலுள்ள மேடுகளில் நெல் பயிராகிறது. இந்நாட்டின் முக்கியமான நதி **காவேரி.** இந்நதி இவ்விடத்தி லுற்பத்தியாகிறது. இவ்விடத்தில் வருஷத்தில் பெய்யும் மழை 120 அங்குலம். ஆதலால் இது மிகவும் ஈரமான பூமி.

**ஜனங்கள்.**—இதின் ஜனத்தொகை 180,000. இவர்களில் பெரும்பாலார் இந்துக்கள். **குடகு நாட்டார்** ஏறக்குறைய 30,000 பேரிருக்கிறார்கள். இவர்கள் அழகும் பலமுமுள்ள ஜாதியார். இவர்கள் தங்கள் சுயபாஷை பேசுகிறார்கள். இம்மாகாணத்தில் வழங்கும் பாஷை **கன்னடம்.** காப்பிக்கொட்டை அறுக்கும் காலங்களில் அநேக கூலியாட்கள் பக்கத்து ஜில்லாக்களிலிருந்து வருகிறார்கள். காப்பிக்கொட்டையும் ஏலக்காயும் இந்நாட்டின் முக்கிய ஏற்றுமதிச் சரக்குகள்.

குடகுநாடு இந்திய துரைத்தனத்தாரின் அதிகாரத்துக்குட்பட்டது. இந்நாட்டை ஆளுகிறவர் மைசூரிலிருக்கும் ரெஸிடென்ற் துரை. இவர் குடகு நாட்டுக்கு முக்கிய **கமிஷனராயிருக்கிறார்.**

**பட்டணங்கள்.**—இந்நாட்டின் முக்கிய ஸ்தானம் **மடிகேரி.** இவ்விடத்தில் அநேக ஐரோப்பிய உத்தியோகஸ்தர் வசிக்கிறார்கள். குடகுநாட்டார் இங்கிலீஷ் துரைத்த
அதிக விசுவாசமாய் நடந்தபடியால் யுத்த ஆ
தரித்துக்கொள்ள அநுமதி பெற்றிருக்கிறார்கள்
காலம் குடகுநாடு அதின் சுதேச அரசரின் ஆ
டிருந்தது.

9724

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1
G*